விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# Dishtv
பழைய Dishtv
ரிஸீவர்க்கு பதிலாக
புதிய ரிஸீவர்
700/= மட்டுமே

SATS-TECH
(C-5098)
Phone: 021 222 8812, Mob:- 076 886 1160

# வலம்புரி
Valampurii
E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk
சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2049 மார்கழி 26 வியாழக்கிழமை (10.01.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 022

## இரசாயனக் குண்டுகளை போரில் பயன்படுத்தவில்லை

### கூட்டமைப்பின் குற்றச்சாட்டை பாதுகாப்பு அமைச்சு நிராகரிப்பு

(கொழும்பு)

இறுதிக்கட்டப்போரின்போது இராணுவத்தினர் இரசாயன மற்றும் கொத்துக்குண்டுகளை பயன்படுத்தி தாக்குதல் நடத்தினர் என முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டை பாதுகாப்பு அமைச்சு நிராகரித்துள்ளது.

எனவே இராணுவம் இறுதிப் போரில் தமிழ்த் தேசியக் 23

## இரசாயனக் குண்டு பயன்படுத்தவில்லை எனில் சர்வதேச விசாரணையை உறுதிப்படுத்தவும்

### பாராளுமன்றில் கூட்டமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடனான இறுதி யுத்தத்தில் இரசாயனக் குண்டுகள் பொதுமக்கள் மீது பயன்படுத்தப்பட்டமைக்கான சகல ஆதாரங்களும் உள்ளன.

அரசாங்கம் இரசாயனக் குண்டுளை பயன்படுத்தவில்லை என்றால் சர்வதேச விசாரணையில் உறுதிப்படுத்த வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

பாராளுமன்றம் நேற்று பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தலைமையில் கூடியது. சபை ஆரம்ப நிகழ்வுகள் இடம்பெற்ற பின்னர் இரசாயன ஆயுதங்கள் சமவாய (திருத்தச்) சட்ட 24

# புதிய அரசியலமைப்பு நிறைவேற்றப்பட்டால்


அன்பு வாசகர்களே!
இன்று உங்கள்
வலம்புரியில் 2019 ஆம்
ஆண்டுக்கான வர்ணக்
கலண்டர் வெளிவருகிறது.
தவறாது கேட்டு வாங்குங்கள்.

## இலங்கைக்கு மிகப்பெரிய ஆபத்து எதிர்க்கட்சி தலைவர் மகிந்த எச்சரிக்கை

(கொழும்பு)

*நான்கு வருடங்களிற்கு முன்னர் ஜனவரி 2015 ஒன்பதாம் திகதியில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் காரணமாக நாடு மிகப்பெரும் மூன்று ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது. புதிய அரசியலமைப்பு தொடர்பான நகல்வடிவே இலங்கை எதிர்கொள்ளும் மிகப்பெரும் ஆபத்தாகும். புதிய அரசியலமைப்பை தயாரித்தவர்களால் அது நிறைவேற்றப்பட்டால் இலங்கை என்பது இல்லாமல் போகும் என எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.* (23ஆம் பக்கம் பார்க்க)



## அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க நிதியமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளம் 2,500 ரூபாயிலிருந்து 10,000 வரை அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது. 23

## எரிபொருள் விலை அதிகரிக்கும் சாத்தியம்

(கொழும்பு)

எரிபொருள் விலைச் சூத்திரத்திற்கு அமைய இன்று எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகி 23

## மண்டைதீவில் இளைஞர்கள் கொல்லப்பட்டு கிணற்றில் வீசப்பட்டனர்

### பாராளுமன்றில் சிறீதரன் எம்.பி



(கொழும்பு)

மன்னார் மனித புதைகுழியைப் போன்று யாழ்ப்பாணத்திலும் மனித புதைகுழிகள் உண்டு எனவும், அவற்றை தோண்டியெடுத்து விசாரணை 23

## பிள்ளையானுடன் இணைந்தே பரராஜசிங்கத்தை கொன்றோம்

### வாக்கு மூலத்தை ஏற்ற நீதிமன்றம்

(மட்டக்களப்பு)

பிள்ளையான் உள்ளிட்ட 6 பேர் இணைந்தே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தைப் படுகொலை செய்தோம் என முதலாவது மற்றும் இரண்டாவது எதிரிகள் வழங்கிய குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் நேற்று ஏற்றுக் கொண்டது. வழக்கின் எதிரிகளில் ஒருவரான பிள்ளையான் 23

## 19ஆவது அரசியலமைப்பே ஜனாதிபதி மைத்திரிக்கு தடையாக இருந்தது மகிந்த சமரசிங்க

(கொழும்பு)

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையில் காணப்பட்ட அதிகாரங்களை மட்டுப்படுத்துவதற்கு முன்வைக்கப் 23

## வடக்கு - தெற்கு இணைய பாலமாக செயற்படுவேன்

### பதவியேற்பில் ஆளுநர் சுரேன் ராகவன்

(யாழ்ப்பாணம்)

வடக்கின் ஆளுநராக மட்டுமல்லாது விழுந்திருக்கும் ஒரு தேசத்தினை மீளவைப்பதற்கு ஒரு அடியாக இருக்க வேண்டும் என்பது எனது நோக்கம் என தெரிவித்த வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன், யுத்தம் முடிந்த பின்னரும் இன்றுவரை வடக்கு மாகாணத்தில் தமிழ் மொழி முதன்மை 23



## உடல் மோசமான நிலையில் வைத்தியசாலையில் அரசியல் கைதி

(யாழ்ப்பாணம்)

தனது விடுதலையை வலியுறுத்தி கடந்த ஐந்து நாட்களாக உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்த அரசியல் கைதி ஒருவர், உடல் நிலை மிகவும் மோசமடைந்த நிலையில் சிறைச்சாலை வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி வட்டக்கச்சியை சேர்ந்த சிவப்பிரகாசம் சிவசீலன் (வயது 32) என்ற அரசியல் கைதி அநுராதபுரம் சிறைச்சாலையில் கடந்த 10 வருடங்களாக 23

## அரசியலமைப்பு வரைபு பாராளுமன்றில் நாளை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பின் வரைபு நாளை 11 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. 02

## வைத்தியசாலை கொண்டு செல்லாததால் மயக்கமடைந்த குடும்பஸ்தர் மரணம்

### யாழ் நகரில் மனிதாபிமானமற்ற செயற்பாடு

(யாழ்ப்பாணம்)

மயக்கமடைந்த குடும்பஸ்தர் ஒருவரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லாது மனிதாபிமானமற்ற முறையில் பொதுமக்கள் வேடிக்கை பார்த்ததால் அதிக நேரமாக வெயிலில் கிடந்த குறித்த நபர் பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் நேற்று யாழ் நகர்ப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

குருநகர் கடற்கரை வீதியை சேர்ந்த விக்ரர் வின்ரன் 24

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்டம்

## பொங்கல் தினத்தன்று போராட்டம் நடத்த முடிவு

தாயகத்தில் கையளிக்கப்பட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை கண்டறியும் குடும்பங்களின் சங்கத்தின் தலைவி காசிப் பிள்ளை ஜெயவனிதா தலைமையில் ஆர்ப் பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியாவில் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்தை 688-வது நாளாக முன்னெடுத்து வரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் வவுனியா குடியிருப்பு பிள்ளையார் ஆலயத்தில் நேற்று நண்பகல் 12 மணிக்கு தேங்காய் உடைத்து வழிபாடுகளை மேற்கொண்ட பின்னர் அங் கிருந்து நடைபவனியாக வவுனியா கண்டி வீதியில் அமைந்துள்ள உணவு தவிர்ப்பு கொட்டகையை வந்தடைந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அங்கு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து கருத்து தெரிவித்த, தாயகத்தில் கையளிக்கப்பட்டு வலிந்து காணா மல் ஆக்கப்பட்டவர்களை கண்டறியும் குடு ம்பங்களின் சங்கத்தின் தலைவி காசிப் பிள்ளை ஜெயவனிதா, தங்களுக்கு எதிராக சிலர் சங்கம் அமைத்து செயற்பட்டு வருவதாக குற்றஞ்சாட்டியதுடன் எதிர்வரும் பொங்கல் தினத்தன்று பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை முன் னெடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.(2-281)

## பாராளுமன்றில்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளு மன்றகுழு கூட்டத்தில் நேற்று இந்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்று மதியம் இந்த கூட்டம் இடம்பெற்றது.

கடந்த நவம்பர் 4ம் திகதி அரசியலமை ப்பு வரைபு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்ப டுவதாக இருந்தது. எனினும், ஒக்ரோபர் 26 அரசியல் குழப்பத்தையடுத்து வரைபு சமர்ப் பிக்கப்படவில்லை.

கம்பெரலிய திட்டத்தில் ஒதுக்கப்படும் நிதி யில் வடக்கு கிழக்கில் எம்.பிக்கள் சச்சரவில் லாமல் எப்படி திட்டங்களை பகிர்வது என்றும் ஆலோசிக்கப்பட்டது. ஒரு எம்.பியின் தொகுதி யில், இன்னொரு எம்.பி அபிவிருத்தி திட்ட பரிந்துரைகளை கொடுப்பதெனில், கடிதம் மூலம் கோரிக்கை கடிதம் அனுப்புவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

# மரண அறிவித்தல்



## திருமதி கந்தசாமி தங்கரத்தினம்

மானிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி தங்க ரத்தினம் அவர்கள் நேற்று முன்தினம் (08.01.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாரிமுத்து -பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தசாமி அவர்களின் அன்பு மனைவியும், சுகந்தன், சுகந்தி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கிருஷ்ணபாகரன் (செல்வம்), மரினா ஆகியோரின் மாமியாரும், சதுசியா, சதுசன், சகிதா, மகளியா, சுபிஷன், மெலிஷா ஆகியோரின் அன்பு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான இராசையா, மகேஸ்வரி, செல்வராசா மற்றும் அன்னரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஈஸ்வரி, செல்வராசா, தர்மலிங்கம், இராஜினி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2019) வியாழக்கிழமை மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக் காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை மேற்கு,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்

(6997)

## ஊர்காவற்றுறை ப.நோ.கூ சங்கம்

### எரிபொருள் நிரப்பு நிலைய கட்டிடம் அமைத்தல் கேள்வி கோரல்

எமது சங்கத்திற்கான எரிபொருள் நிரப்பு நிலைய கட்டிடம் அமைப்பதற்கான கேள்வி கோரல்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடம் இருந்து கோரப்படு கின்றது. இது தொடர்பான விபரங்களை சங்க அலுவலக நேரத்தில் பெற்றுப் பார்வையிடலாம். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மீளளிக்கப்படாத வைப்பாக ரூபாய் 1000/= செலுத்தி கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி கோரல்களை 21.01.2019ற்கு முன்னதாக பொது முகாமையாளர், ஊர் காவற்றுறை ப.நோ.கூ சங்கம், ஊர்காவற்றுறை எனும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கவும்.

குறிப்பு : அலுவலக நேரம் (காலை 8.30 மணி - மாலை 5.00 மணி வரை)

பொது முகாமையாளர்,
ஊர். ப.நோ.கூ.சங்கம்,
ஊர்காவற்றுறை.

தொலைபேசி இல:
021 221 1648

(சி-5095)

# மரண அறிவித்தல்

## திருமதி பசுபதி சின்னத்தங்கம்

நெடுந்தீவு மேற்கு, 2-ம் வட்டாரத்தை பிறப்பிடமா கவும் முத்தயன்கட்டு 1-ம் கண்டம் வலதுகரை,-முத்து விநாயகர்புரத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் தர்மபுரம் மேற்கு, 2-ம் யூனிற் இல.114 ஐ தற்காலிக வசிப்பிடமா கவும் கொண்ட திருமதி பசுபதி சின்னத்தங்கம் அவர்கள் நேற்று (2019.01.09) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகநாதர் - நாகம்மா அவர் களின் அன்பு மகளும், காலஞ்சென்ற பசுபதி அவர்க ளின் அன்பு மனைவியும், நாகேஸ்வரன், மகேஸ்வரி, தனலட்சுமி, காலஞ்சென்ற அன்னலட்சுமி மற்றும் தமிழ்ச் செல்வி, கேதீஸ்வரி, காலஞ்சென்ற குகேந்திரன் மற்றும் தெய்வேந்திரம், காலஞ்சென்ற இராசேந்திரன் மற்றும் ஆனந்தி, ஆனந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் தற்காலிக வசிப்பிடமான தருமபுரம் மேற்கு, 2-ம் யூனிற், இல.114 இல் அன்னாரின் மகனாகிய தெய்வேந்திரம் (தெய்வம் வாணிபம்) அவரது இல்லத்தில் இன்று (10.01.2019) வியாழக்கிழமை நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 3 மணியளவில் தருமபுரம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு :
077 268 1811

தகவல் : ப.தெய்வேந்திரம்
(தெய்வம் வாணிபம்)
வைத்தியசாலை முன் தருமபுரம்



தோற்றம் : 1938.04.05 - மறைவு : 2019.01.09

(7104)

# புதிய அரசியலமைப்பைத் தோற்கடிக்க புதிய கூட்டணியை கட்டியெழுப்பவும்

## மைத்திரி–மகிந்தவிடம் விமல் கோரிக்கை




(கொழும்பு)

பாராளுமன்றத்திற்கு கொண்டுவரப் படவுள்ள புதிய அரசியலமைப்பு சீர் திருத்தத்தை தோல்விய டையச் செய்ய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ ஆகியவர்களின் ஒற்றுமையால் மட்டுமே முடியும்.

எனவே அவர்கள் இருவரின் ஒத்துழைப்புடன் புதிய கூட்டணி ஒற்றை உடனடியாக கட்டியெழுப்ப வேண்டும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (இ-7)




(கேலிச்சித்திரம்)

## மகிந்தவின் மருமகன்

# ஜாலியவை கைது செய்ய மீண்டும் திறந்த பிடியாணை



(கொழும்பு)

அமெரிக்காவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரியவை (மகிந்தவின் மருமகன்) கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த மீண்டும் திறந்த பிடியாணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அவருடைய பிணைக்காக முன்னின்ற அவரின் மனைவி மற்றும் அவரின் உறவுக்கார சகோதரியையும் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு ஏற்கனவே நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## "பண்டாரநாயக்கவின் கொள்கைகளை விற்று உண்ட திருடர்கள் நாட்டில்"

# சந்திரிகாவின் படத்தை நீக்கி ஜனாதிபதி ஊடகப்பிரிவு எதிர்வினை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகரும் முன்னாள் பிரதமருமான எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கவின் 120ஆவது ஜனனதின நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கலந்துகொண்ட புகைப் படங்கள் எதனையும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிடவில்லை.

குறித்த நிகழ்வில் கலந்துகொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஏனைய முக்கியஸ்தர்கள் நிற்கும் படங்களை மட்டும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ளது.

அமரர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி பண்டாரநாயக்கவின் 120ஆவது ஜனன தின நிகழ்வு கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது. இதில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

எனினும், இதன்போது சந்திரிகாவும், மைத்திரியும் சந்தித்து பேசிக்கொள்ளவில்லை.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட சந்திரிகா, "பண்டாரநாயக்கவின் பெயர் மற்றும் கொள்கைகளை விற்று உண்ட திருடர்களும் கொலைகாரர்களும் இந்த நாட்டில் இன்னும் இருப்பதாகவும், அவர்கள் தற்போதும் பண்டாரநாயக்கவின் பெயரையும் கொள்கைகளையும் விற்று உண்டு வருகின்றனர் எனவும் கடுமையாக சாடிப் பேசியிருந்தார்.

இதன் ஊடாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை, சந்திரிகா மறைமுகமாக தாக்கிப் பேசியதாகவே கருத்து வெளியிட்டு வரும் நிலையில், ஜனாதிபதி ஊடகப் பிரிவு அதற்கு எதிர்வினையாற்றியுள்ளது.

"அமரர் பண்டாரநாயக்கவின் 120ஆவது ஜனன தின நிகழ்வுப் படங்களில் சந்திரிகா நிற்கும் எந்தவொரு படங்களையும் ஜனா திபதி ஊடகப் பிரிவு வெளியிடவில்லை.

எனினும், ஜனாதிபதி உள்ளிட்டவர்கள் இருக்கும் புகைப்படங்களை மாத்திரம் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வடக்கு மக்களின் பிரச்சினை தீர்க்கப்படும் நாள்தான் எனக்கு மகிழ்ச்சியைத் தரும்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



(லக்கலை)

**வடக்கு மக்களின் தண்ணீர் பிரச்சினைக்கு எப்போது தீர்வு காணப்படுகிறதோ, அன்றே முழுமையான மகிழ்ச்சியடைவேன் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதியாக பதவியேற்று 4 வருடங்கள் பூர்த்தியடைந்ததை முன்னிட்டு, லக்கலையில் நேற்று முன்தினம் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில்,

"நாட்டு மக்கள் என்னை ஜனாதிபதியாக நியமித்து நான்கு வருடங்கள் பூர்த்தியாகியுள்ளன. இந்தக் காலத்தில் நான் நாட்டுக்காகவும், நாட்டு மக்களுக்காகவும் முழுமையான சேவைகளை செய்துள்ளேன்.

இந்தப் பயணத்தில் வெற்றி மட்டுமல்லாமல் தோல்விகளையும் நான் அடைந்துள்ளேன். எவ்வாறான சவால்கள் வந்தாலும் நான் மக்களுக்கான சேவையில் ஒருபோதும் தளர்ந்து விடப்போவதில்லை.

சமூக ரீதியான முன்னேற்றத்தை காண்பதற்கு, ஊழல் மற்றும் கொள்ளைகளே எமக்கான பாரிய சவாலாக இருக்கிறது. இவற்றை நாம் அனைவரும் ஒன்றிணைந்து முறியடிக்க வேண்டும்.

இன்று நாட்டு மக்களுக்காகப் பாரிய நீர்த்தேக்கத் திட்டங்களை முன்னெடுத்து வருகிறோம். ஆனால், வடக்கு மாகாண மக்களின் நீர்ப்பிரச்சினைக்கு எப்போது தீர்வு காணப்படுகிறதோ, அன்றுதான் உண்மையான மகிழ்ச்சியை அடைவேன்.

மேலும், அனைத்து இன மக்களும் அச்சமின்றி வாழ்வதற்கும் இனங்களுக்கிடையில் ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கும் எம்மாலான முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்குவோம். இவற்றுக்காக நாம் கட்சி பேதம், அரசியல் பேதங்களை கடந்து ஒன்றிணைய வேண்டும் என அழைப்பு விடுக்கின்றோம்.

இதில் தனிப்பட்ட நபர்கள், கட்சிகளின் கொள்கைகளுக்கு இடமளிக்க முடியாது. இதனால் மட்டுமே ஆரோக்கியமான சமூகத்தை எதிர்காலத்தில் எம்மால் உருவாக்க முடியும்" என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (இ-7)

# 2018 ஆம் ஆண்டில் 311 யானைகள் பலி

## 95 பேர் யானைகளால் மரணம்

(கொழும்பு)

2018 ஆம் ஆண்டில் இலங்கையில் 311 யானைகள் உயிரிழந்துள்ள அதேவேளை, யானைகளின் தாக்குதலுக்கு இலக்காகி 95 பேர் உயிரிழந்துள்ளனரென தெரிவிக்கப்படுகிறது.

மனிதச் செயற்பாடுகள் காரணமாகவும்,விபத்துக்கள் காரணமாகவும் அதிகளவான யானைகள் பலியாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தவகையில் 2018 ஆம் ஆணடில் புகையிரதத்தில் மோதுண்டு 15 யானைகள் உயிரிழந்துள்ளன. 2017 ஆம் ஆண்டில் 7 யானைகள் இவ்வாறு உயிரிழந்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

2017 ஆம் ஆண்டில் மொத்தமாக 256 யானைகள் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படும் அதேவேளை, 87 மனித உயிரிழப்புகளும் நிகழ்ந்துள்ளன. அத்துடன் வெடிப்பொருட்களால் உயிரிழந்த யானைகளின் எண்ணிக்கை 87 ஆகவும், புகையிரதத்தில் மோதுண்டு 48 யானைகளும் உயிரிழந்துள்ளதாக பதிவாகியுள்ளது.

2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 1,737 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அரசின் செயற்பாடுகளுக்கு ஜனாதிபதியே இடையூறு

## முஜிபுர் குற்றச்சாட்டு



(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இடையூறு விளைவிக்கிறார் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான முஜிபுர் ரஹ்மான் குற்றம்சாட்டியுள்ளார்.

இதனால், ஜனாதிபதி தேர்தல் ஒன்றுக்கு செல்வதே தற்போதைய நிலைமையில் சரியானதென அவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

வெற்றி மீது வெற்றி வந்து உன்னைச் சேரும்
அதன் பெருமையெல்லாம் கிளிநொச்சி மக்களை சென்று சேரும்

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் சாதனை வரிசையில்...




2016/2017 தேசிய உற்பத்தி திறன்
போட்டியில் தேசிய ரீதியில்
**முதலாம் இடத்தை** பெற்று
கிளிநொச்சி மாவட்டத்துக்கு பெருமை
தேடித் தந்த கிளிநொச்சி மாவட்டச்
செயலகத்தையும் மாவட்டச் செயலாளர்
திரு.சுந்தரம் அருமைநாயகம் அவர்களையும்
மற்றும் உத்தியோகத்தர்களையும்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்**
கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், கிளிநொச்சி.

(C-5096)

# “நாடாளுமன்றம் தொடர்பில் பேச வெட்கப்படுகின்றேன்”

(கரந்தெனிய)

**தற்போதைய நாடாளுமன்றத்துக்குள் ஒழுக்கம் கலாசாரம் இல்லையென்றும், நாடாளுமன்ற நிலைமைகள் தொடர்பில் பேசுவதற்கு வெட்கப்படுவதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**



நேற்று கரந்தெனிய மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட போதே பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தானும் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில் நாடாளுமன்ற நிலைமைகள் குறித்து வெட்கப்படுவதாகவும் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் பிக் மெச் முடிவடைந்து இரு ஆண்கள் பாடசாலை அணியினர் நடந்து கொள்வது போன்று இருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாம் இந்தத் தவறுகளை மறைக்கக் கூடாது. எமது நாடு ஏனைய நாடுகளுக்கு முன்மாதிரியாகக் காணப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# அநுரகுமார திஸாநாயக்க முதலிடம்

(கொழும்பு)

நாடாளுமன்ற அமர்வுகளில் சிறப்பாக செயற்பட்டவர்களின் தரவரிசைப் பட்டியல் நேற்று வெளியிடப் பட்டுள்ளது.



இந்த தரவரிசையில் முதலாமிடத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவும், இரண்டாம் இடத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மானும், மூன்றாமிடத்தில் இலங்கை தமிழ் அரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசனும் பெற்றுக் கொண்டுள்ளனர். இந்தப் பட்டியலில் கடந்த வருடம் இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வுகளையும் செயற்பாடுகளையும் மையமாக வைத்து தயாரிக்கப்பட்டுள்ளது. (இ-7)


**SHANTHIHAM**
Association for Health & Counselling

## Vacancy - Finance Manager

Shanthiham, Association for Health and Counselling is a Non-Governmental organization, based in Jaffna, committed to support the wellbeing and positive mental health of persons, families and communities through providing psychological and community based psychosocial services including trainings, publications and capacity building.

Shanthiham is interested to receive applications for the above position.

For the post of Finance Manager, a person with sound knowledge with managing theProject Accounting and Financial reporting with University degree in accounting or relevant professional qualifications with 5 years' experience in related area is needed. The Candidate should have the natural qualities of a team member and be able to handle challenging situations.

Remuneration (including the employee benefits) could be negotiated based on qualification, experience and knowledge.

Duration -1-year contract subject to renewal.

Applications for the above posts should be sent along with the CV and the letter of motivation to the following address on or before 22.01.2019. The candidate may also send his or her application via the following e-mail address but the original should be sent by post.

The Director, Shanthiham,
No. 8, Katpahavinayagar Lane,
Off Kachcheri Nallur Road, Jaffna.
Telephone No.: 021-222-3338
Email address: recruitment.shanthiham@gmail.com

(C-5089)



# 53 ஆவது பிறந்த நாள் நினைவஞ்சலி



## திரு. தியாகராசா மகேஸ்வரன்

(முன்னாள் இந்து கலாசார அமைச்சரும்,
யாழ்., கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும்)

காலமெல்லாம் எம் நெஞ்சத்தில் கனதியாய் உறைந்துள்ள அப்பாவே!!!!
சின்ன சின்ன ஆசையெல்லாம் சிகரமாக்கி சென்றீர்களே!!!
உங்களின் பிறந்த நாளில் நெஞ்சிருத்தி வணங்குகின்றோம்!!!
நீங்கள் கண்ட கனவுகளை நிச்சயம் சுமந்து வாழ்வோம்
ஆண்டவனின் திருவடியில் அர்ச்சிக்கப்பட்ட மலராயிருந்து
ஆசீர்வதியுங்கள் அப்பாவே...
இனிய பிறந்த நாள் வாழ்த்துக்கள் அப்பா.

பிள்ளைகள் - பவதாரணி (மகள்), பிரணவன் (மகன்), பவித்திரா (மகள்).

தகவல் : திருமதி விஜயகலா மகேஸ்வரன்
இல.32, 36ஆவது ஒழுங்கை, கொழும்பு - 06.
தொலைபேசி : 2360679

இல.276, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021-2221877


# இராசி பலன்

**மீனம்:** பயணங்களால் தேகநலன்கள் பாதிக்கப்படலாம், தூர தேசத்திலிருந்து வரும் செய்திகள் ஆச்சரியப்பட வைக்கும், சயனக்குறைவுகள் ஏற்படலாம்.

**மேடம்:** எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் திட்டுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும்.

**இடபம்:** புதிய முயற்சிகள் கைகூடும் நாள், அரசு வழிச்சலுகைகள் எதிர்பார்த்தபடி கைகூடும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாகப் பார்ப்பர், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**கும்பம்:** ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், தேவையற்ற கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.

**கடகம்:** மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்து செல்ல வேண்டிய நாள், உதவுதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம்.

**மகரம்:** கல்யாணக்கனவுகள் நனவாகலாம், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், நண்பர்கள் நம்பிக் கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**சிம்மம்:** சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், கனவு பலிதமுண்டு, இறை வழிபாட்டால் இன்பங்கள் கூடும் நாள், வருமானம் திருப்திதரும்.

கிரகநிலை: செவ் | சந் | ராகு | கேது | சூரி, புத, சனி | குரு, சுக்
சந்திராஷ்டமம்: மகம்

10.01.2019
மார்கழி 26, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு
சதுர்த்தி பிற்பகல் 3.42 மணிவரை
சதயம் பின்னிரவு 4.14 மணிவரை
சுபநேரம் 8.03-9.33 மணிவரை
இராகுகாலம் 2.03-3.33 மணிவரை
சதுர்த்தி விரதம்
வளவன்

**தனுசு:** அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருச்சிகம்:** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, பாராட்டும் புகழும் கூடும் நாள், வாய்ப்புக்கள் கூடும் நாள்.

**துலாம்:** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், வியாபார விருத்தியுண்டு, பிள்ளைகளின் கல்வி நலனில் அக்கறை காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.


**கன்னி:** கூட்டு முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள், உடல் நலன் சீராகி உற்சாகப்படுத்தும், நிலையான வருமானத்திற்கு வழியமைப்பீர்கள், போசன சுகமுண்டு.

### சாவகச்சேரி உணவகத்தில் அதிகாலை வேளை

# பத்து இலட்சம் பறிபோனது!

## சீ.சீ.ரி.வி.கமரா இணைப்பை நீக்கி துணிகரத் திருட்டு





(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு அருகாமையிலுள்ள உணவகம் ஒன்றில் நேற்றுப்புதன்கிழமை அதிகாலை 12.30 மணிக்கும் 3 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் பத்து இலட்சம் ரூபாய் பெறுமதியான பணம் மற்றும் பொருட்கள் திருட்டுப் போயுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

திருடர்கள் உணவகத்தின் மேல் கூரை வழியாக ஏறி மேல் கூரை மற்றும் உள்ளே போடப்பட்டுள்ள பாதுகாப்பு சீற்றினை உடைத்துள்ளனர்.

அதன் பின்னர் உணவகத்தில் பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்பு கமரா இணைப்பைக் கழற்றிய பின்னர் உணவகத்தினுள் இறங்கி அங்கிருந்த ஏழு இலட்சம் ரூபாய் பணம் மற்றும் சுமார் மூன்று இலட்சம் ரூபாய் பெறுமதியான மீள் நிரப்பு அட்டைகளை திருடிச் சென்றுள்ளனர்.

திருடர்கள் பாதுகாப்பு கமரா பிரதான இணைப்பு உள்ள இடத்தில் மாத்திரம் சீற்றினை உடைத்து பாதுகாப்பு கமராக்களின் இயக்கத்தினை துண்டித்திருப்பதாகவும், நன்றாக இடங்கள் தெரிந்தவர்கள் தான் இந்த துணிகர திருட்டில் ஈடுபட்டிருக்க முடியும் எனவும் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-30-89)

## யாழில் 119 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு தராசுகளுக்கு முத்திரையிடல் பணி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அரசாங்கஅதிபரின்பணிப்புரைக்கமைய அளவீட்டு அலகுகள் நியமங்கள் சேவைகள் உத்தியோகத்தர்களால் கொட்டடி, நாவாந்துறை, சின்னக்கடை, கல்வியங்காடு, குருநகர்வாடி, காக்கைதீவு, சாவகச்சேரி, கொடிகாமம் மீன்சந்தைகளிலும், மரக்கறிச்சந்தைகளிலும் மோசடி செய்யப்பட்ட தராசுகளும் பிழையான தராசுகளும் நடப்பாண்டிற்கு முத்திரையிடாத தராசுகளும் பயன்படுத்த வைத்திருந்த 60 வர்த்தகர்களுக்கு எதிராக யாழ்.நகர், பருத்தித்துறை, நெல்லியடி, கொடிகாமம், சாவகச்சேரி, நாவற்குழி, புத்தூர் இடங்களிலுள்ள பழக்கடைகள், நகைக்கடைகள், பலசரக்குக்கடைகள், விற்பனை நிலையங்கள், வெதுப்பகங்கள், இரும்பகங்கள், புடைவைக்கடைகள், உர விற்பனை நிலையங்களை வைத்திருந்த 59 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

யாழ்ப்பாண பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வர்த்தகர்களின் நிறுவை அளவை மற்றும் நிறுக்கும் அளக்கும் உபகரணங்களுக்கு யாழ். மாவட்ட செயலகத்திலுள்ள அளவீட்டு அலகுகள் நியமங்கள் சேவைகள் பிரிவில் இம்மாதம் 10, 11, 16 ஆம் திகதிகளில் முத்திரையிடல் பணி நடைபெறும்.

1995 ஆம் ஆண்டு 35 ஆம் இலக்க அளவீட்டு அலகுகளும் நியமங்களும் சேவைகளும் சட்டத்தின் பிரகாரம் நடப்பாண்டிற்குரிய முத்திரையிடாத நிறுக்கும் அளக்கும் உபகரணங்களை வர்த்தகத்திற்கு பாவிப்பது மாத்திரமல்லாது வைத்திருப்பதும் தண்டனைக்குரிய குற்றமாகும் என அறியத்தருகின்றோம்.

தராசுகள் நிறுவை அளவைகள் தொடர்பில் பொது மக்கள் யாழ்.மாவட்ட செயலகத்தில் உள்ள அளவீட்டு அலகுகள், நியமங்கள் சேவைகள் திணைக்களத்துடன் 021 221 7399 இலக்கத்துடன் தொடர்பு கொள்வதன் மூலமாக நேரடியாக அல்லது கடித மூலமாக தொடர்பு கொள்ளலாம் என அறியத்தருகின்றோம் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.(இ-9)

## சர்வதேச நீச்சல் தடாகம் ஏப்ரல் மாதம் திறப்பு

### சிவாஜிலிங்கம் தகவல்



(கரணவாய்)

வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரையில் அமைக்கப்பட்டு வரும் சர்வதேச நீச்சல் தடாகத்தை எதிர்வரும் ஏப்ரல் மாதமளவில் திறந்து வைக்க தீர்மானிக்கப்பட்டிருப்பதாக வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

ஏழு கோடி ரூபாய் செலவில் இந்த நீச்சல் தடாகம் அமைக்கப்பட்டு வருகிறது.

இது தொடர்பில் ஆராய்வதற்காக நிதி அமைச்சின் அதிகாரிகள், விளையாட்டு துறை அதிகாரிகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மதியம் வல்வெட்டித்துறைக்கு வந்து நீச்சல் தடாக வேலைகள் குறித்து ஆராய்ந்தனர்.

தற்போது அறுபது வீதமான வேலைகள் நிறைவடைந்துள்ளன.

சுழி ஓடுவதற்காக உயரத்தில் இருந்து குதித்து சாகசம் நிகழ்த்துவதற்காக 40 அடி உயரத்தில் கட்டு ஒன்று கட்டப்படவுள்ளது. இன்னும் நிதி தேவைப்படுவதனால் அவற்றை வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் மார்ச் மாதமள வில் இதன் வேலைகள் நிறைவடைந்து ஏப்ரல் முதல் வாரத்தில் நீச்சல் தடாகத்தை திறக்கக் கூடியதாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-60)



பாஷையூர் புனித அந்தோனியார் பாடகர் குழாம் அண்மையில் "அனைத்தும் அவரே" என்னும் பொருளில் தென்மோடி நாட்டுக்கூத்தை சே.வசம்பஜ் நெறிப்படுத்தலில் மேடையேற்றம் செய்தது. (படம்:-கொழும்புத்துறை செய்தியாளர்)

## வலி.மேற்கு பிரதேசத்துக்கான கீதம் உருவாக்கல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிற்கான ''பிரதேச கீதம்'' ஒன்றை உருவாக்கும் வகையில் வலி. மேற்கு பிரதேசத்தைச் சேர்ந்த துறைசார் படைப்பாளிகளிடமிருந்து ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

உருவாக்கப்படும் கீதம் அப்பிரதேசத்திற்குரிய வளங்கள், தொன்மங்கள், கலை மரபுகள், வழக்காறுகள் போன்றவற்றை பிரதிபலிப்பனவாக அமைய வேண்டும்.

கிடைக்கப்பெறும் ஆக்கங்களிலொன்று தகுதி வாய்ந்த நடுவர்குழுவினால் தெரிவு செய்யப்படும். இவ்வருடம் நடைபெறவுள்ள வலி.மேற்கு பிரதேச கலாசார விழாவில் தெரிவு செய்யப்படும் ஆக்கத்தின் படைப்பாளி பாராட்டிக் கௌரவிக்கப்படுவார்.

எனவே படைப்பாளிகள் தமது ஆக்கங்களை எதிர்வரும் 28.02.2019 ஆம் திகதிக்கு முன்னர் ''பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், வலி.மேற்கு, சங்கானை" என்னும் முகவரிக்கு நேரடியாகவோ அன்றி தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலாளர் திருமதி பொ.பிரேமினி கேட்டுக் கொண்டுள்ளார். (இ-7)

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் அருள்மிகு சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோவில் மஹோற்சவ விஞ்ஞாபனம் இன்று 10 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து 12 நாட்கள் நடைபெறவுள்ள மஹோற்சவத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 8.30 மணியளவில் தேர்த்திருவிழாவும் மறுநாள் 21 ஆம் திகதி காலை 9 மணியளவில் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (இ

## கைத்தொழில் சேவைகள் மையத்தில் வினைத்திறனான சேவையைப் பெறலாம்

### யாழ்.மாவட்ட அரச அதிபர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மாவட்டத்தின் தொழில் முயற்சியாளர்களின் நன்மை கருதி மாவட்ட செயலகத்தில் கைத்தொழில், சுற்றுலா மற்றும் ஏற்றுமதிக்கான ஒரே குடையின் கீழ் சேவைகள் மையம் 2019.01.01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் கைத்தொழில் துறையில் ஈடுபடுவோர் தங்கள் முயற்சியாண்மை தொடர்பான தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் பல்வேறுபட்ட அனுமதிகளைப் பெறுவதற்கும் வெவ்வேறு திணைக்களங்களுக்கு இங்கும் அங்குமாக அலைய வேண்டிய நிலை மாவட்டத்தில்காணப்படுவதுடன்சேவையைப் பெறுவதில் இழுபறி நிலையும் காணப்படுகின்றது.

மேலும் கைத்தொழில் துறையை ஊக்குவிக்கும் நோக்குடன் அரசாங்கத்தால் வழங்கப்படும் சலுகை மற்றும் வங்கிக்கடன்களை பற்றி தொழில் முயற்சியாளர்கள் அறிந்து கொள்வதும் கடினமாகக் காணப்படுகின்றது.

இது தொடர்பில் கைத்தொழிற்றுறையை அபிவிருத்தி செய்வதன் மூலம் வேலையற்றோர்களுக்கான வேலைவாய்ப்பை வழங்கும் முகமாக யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் 23 ஆம் இலக்க அறையில் இயங்கும் கைத்தொழில் மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான சகல நிறுவன உத்தியோகத்தர்கள் வாரத்தில் திங்கள் மற்றும் புதன்கிழமைகளில் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன்மூலம் தொழில் முயற்சியாளர்கள் சிரமமின்றிஇந்தமையத்திற்குவருகை தருவதன் மூலம் நேர விரயமின்றி வினைத்திறனான சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.(இ

## சி.வை.தாமோதரம்பிள்ளை நினைவுப் பேருரை யாழில்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் முன்னெடுக்கும் தமிழறிஞர் சி.வை.தாமோதரம்பிள்ளை நினைவுப் பேருரை நிகழ்வு எதிர்வரும் 16ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளரும் தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினருமாகிய கலாநிதி செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் இந்து மகளிர் கல்லூரி அதிபர் மிமலாதேவி விமலநாதன் வாழ்த்துரை வழங்குவார்.

கல்லூரி மாணவியரின் உரைகளைத் தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை முதுநிலை விரிவுரையாளரும் தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு உறுப்பினருமாகிய சாந்தினி அருளானந்தம் "19 ஆம் நூற்றாண்டில்தமிழர்வரலாற்றில்சி.வை. தாமோதரம்பிள்ளையின் வகிபாகம் " என்ற பொருளில் நினைவுப் பேருரை ஆற்றுவார். (இ-7)

# வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்
# பொது அறிவித்தல் - 2019

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் எல்லைக்குள் வசிக்கும் பொதுமக்களும் மற்றும் வர்த்தக நிலைய உரிமையாளர்களும் அரச தனியார் நிறுவனங்களின் தலைவர்களும், எமது சபையால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பின்வரும் நடைமுறைகளை பின்பற்றி சபையின் நிர்வாக நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியுதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

| இல | விடயம் | அறிவித்தல் |
|---|---|---|
| 01 | ஆதன வரி செலுத்துதல் | 2019ஆம் ஆண்டிற்கான ஆதனவரியை மானிப்பாய் கிராமம் (ஆனைக்கோட்டை), மானிப்பாய் பட்டினம் (மானிப்பாய்), பண்டத்தரிப்பு கிராமம் (மாதகல்),பண்டத்தரிப்பு பட்டினம் (பண்டத்தரிப்பு) ஆகிய உப அலுவலகங்களில் செலுத்தி சபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வரியிறுப்பாளர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். மேலும் ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவோரிற்கு வருட மொத்த வரியில் 10 % கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டிற்குமுரிய வரியை அந்த காலாண்டின் முதல் மாத முடிவிற்குள் செலுத்துவோரிற்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும். |
| 02 | ஆதனப்பெயர்மாற்றம் செய்தல் | எமது சபை எல்லைக்குள் ஆதனங்களை கொள்வனவு செய்பவர்களும் ஏற்கனவே ஆதன உடைமையினைக் கொண்டு எமது ஆதன இடாப்பில் பெயர்மாற்றத்தினை மேற்கொள்ளாதவர்களும் எமது உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு பெயர்மாற்றத்தினையும் ஆதனத்தில் பௌதீக மாற்றம் ஏற்படுத்தினால் ஆதனவகை மாற்றத்தினையும் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். |
| 03 | காணி உப பிரிவிடுதல் | எமது பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள ஆதனம் ஒன்றை துண்டங்களாக பிரிக்கும் போது எமது உபஅலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு உரிய ஆவணங்களை சமர்ப்பித்து காணி உப பிரிவிடுதலை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். |

**04 — கட்டட அனுமதி வழங்கல்**

1.பிரதேச சபையில் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே தங்கள் ஆதனத்தில் கட்டடங்கள், மதில்கள், முட்கம்பி வேலிகள், எல்லைத்தூண்கள், தொலைத்தொடர்பு கோபுரங்கள், மலசலகூடங்கள், குழாய்க் கிணறுகள் போன்றவற்றை அமைத்தல் அல்லது புதுப்பித்தல் அல்லது திருத்த வேலைகள் மேற்கொள்ளல் வேண்டும்.

கட்டட விண்ணப்பங்களிற்கான பரிசீலனைக் கட்டணம் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறவிடப்படும்.

| இல | விபரம் | வசிப்பிடம் | ஏனையவை |
|---|---|---|---|
| i | 1 - 500 சதுர அடிக்கு | 300.00 | 400.00 |
| ii | 501 - 1000 சதுரஅடி வரை | 350.00 | 500.00 |
| iii | 1001 - 2000 சதுரஅடி வரை | 400.00 | 900.00 |
| iv | 2001 - 3000 சதுரஅடி வரை | 1000.00 | 1750.00 |
| v | 3001 - 5000 சதுரஅடி வரை | 1750.00 | 2250.00 |
| vi | 5001 - 7500 சதுரஅடி வரை | 2000.00 | 2800.00 |
| vii | 7501 -10000 சதுரஅடி வரை | 2500.00 | 3500.00 |
| viii | 10000 சதுரஅடிக்கு மேல் ஒவ்வொரு 100 சதுர அடிக்கும் | 50.00 | 60.00 |

2. ஏற்கனவே அனுமதி பெற்று ஒரு வருட காலத்திற்குள் வேலை நிறைவேற்றாத பட்சத்தில் மேலும் கால நீடிப்பு அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும்.
3. அனுமதி பெற்று கட்டடம் கட்டி முடிக்கப்பட்டமை தொடர்பாக அலுவலகத்திற்கு அறியத்தந்து குடியமர்வுச் சான்றிதழை பெற்றுக்கொள்ள வேண்டும்.
4. சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச, தனியார் கட்டடங்கள், மதில்கள், முட்கம்பி வேலிகள், எல்லைத்தூண்கள், தொலைத்தொடர்பு கோபுரங்கள், மலசலகூடங்கள், குழாய்க் கிணறுகள் என்பவற்றை அமைத்தல் அல்லது புதுப்பித்தல் அல்லது திருத்த வேலைகள் செய்தல் என்பன தண்டனைக்குரிய குற்றமாகும்.

அனுமதியற்ற கட்டடங்களுக்கு பின்வருமாறு தண்டப்பணம் அறவிடப்படும்

| இல | விபரம் | கீழ்தளம் (1 சதுர அடிக்கு) | மேல்தளம் (1சதுர அடிக்கு) |
|---|---|---|---|
| i | அத்திபாரம் மட்டும் பூர்த்திசெய்தல் | 20.00 | - |
| ii | கூரை தவிர்த்து நிர்மாணித்தல் | 30.00 | 30.00 |
| iii | கூரை உட்பட நிர்மாணித்தல் | 40.00 | 40.00 |
| iv | முழுமையாக நிர்மாணித்தல் | 60.00 | 60.00 |

| இல | விடயம் | அறிவித்தல் |
|---|---|---|
| 05 | வீதி ஒழுங்கைப் பேணல் | எமது பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட அனைத்து வீதிகளின் (தரவேறுபாடின்றி) இருமருங்கிலும் எல்லை வேலி மற்றும் எல்லைச்சுவருக்கு வெளியே போக்குவரத்திற்கு இடையூறாக நாட்டப்பட்டுள்ள பூ மரக்கன்றுகள் மற்றும் புல்பூண்டுகள், அலங்கார சீமெந்துக்கட்டுக்கள் போன்றவற்றை அகற்றி துப்புரவாக வைத்திருக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். அத்துடன் எமது பிரதேசத்தில் அதிகரித்த வாகனப்போக்குவரத்து காரணமாக நெரிசல்கள் அதிகரித்துள்ளது. எனவே விபத்தை தவிர்ப்பதன் நோக்கமாக வீதி ஒழுங்கைப்பேணும் சைகை குறியீட்டுப்பலகை முக்கிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. அவற்றை அனுசரித்து நடக்கும்படி பொதுமக்கள் தயவுடன் வேண்டப்படுகின்றனர். மீறுவோர் மீது பொலிஸாரால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன். |
| 06 | வியாபார அனுமதிப் பத்திரம் - 2019 | இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர், நடமாடும் வாகன வியாபாரம், ஆட்டோத்தரிப்பிட அனுமதி மற்றும் எமது பிரதேசத்திற்குள் பொருட்களை விநியோகிப்போர் 2019 ஆம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரத்தை பெறுவதற்கான விண்ணப்பப்படிவத்தை 2019 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதிக்குள் பெற்று அதனை பூரணப்படுத்தி உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2019 ஆம் திகதிக்குள் செலுத்தி 2019 ஆம் ஆண்டுக்குரிய வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன |
| 07 | இறைச்சிவகைகள், மரக்கறிகள் விற்பனை | எமது பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட அனைத்து சந்தைகளின் அமைவிடத்திலிருந்து 500 m சுற்றுவட்டார தூரத்திற்குள் இறைச்சிவகைகள், மரக்கறிகள் விற்பனை செய்யக்கூடாது என்பதை அறியத்தருகின்றேன். |
| 08 | துவிச்சக்கர வண்டி மற்றும் மிருக உரிமம் | 2019 ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கரவண்டி மற்றும் மிருகங்களின் உரிமத்தை பங்குனிமாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். |
| 09 | சூழல் பாதுகாப்பு உரிமம் | மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் 1980 ஆம் ஆண்டின் 47ம் இலக்கத் தேசிய சூழல் பாதுகாப்பு சட்டத்தின் 26 ஆம் பிரிவின்கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் அடிப்படையில் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் நிர்வாக பிரதேசத்தில் 1533/16 இலக்க 2008.01.22ஆம் திகதிய மற்றும் 1534/18 இலக்க 2008.02.01 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப்பத்திரிகையில் விதந்துரைக்கப்பட்ட வியாபாரம் அல்லது தொழில்களுக்கு சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்கப்படுகின்ற பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டுள்ளது.<br>ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் தலைமையலுவலகத்துடன் தொடர்பு கொண்டு சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற்றுக்கொள்ளவும், ஏற்கனவே உரிமத்தினைப் பெற்றுக்கொண்டவர்கள் உரிமம் காலாவதியாகியிருப்பின் அதனைப் புதுப்பிக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். வலுவிலுள்ள சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் இல்லாமல் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்களை நடாத்தின் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடு தண்டப்பணமும் அறவிடப்படும். |
| 10 | படவரைஞர்களைப் பதிவு செய்தல் | 2019 ஆம் ஆண்டு படவரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும், ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2019 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறும், புதுப்பித்துக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன் மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் அறிந்து கொள்ள முடியும். |

**11 — விளம்பரங்களை அமைத்தல் / காட்சிப்படுத்தல்**

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் நிர்வாக பிரிவிலுள்ள பொது வீதிகளின் இருமருங்கும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் மற்றும் சுவர்களில் பொருத்தப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்கான கட்டணத்தை 31.01.2019 ஆம் திகதிக்கு முன் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

செலுத்த வேண்டிய விளம்பர கட்டணங்கள் விபரம்

| இல | விபரம் | 3 மாதங்களிற்கான கட்டணம் | 1 வருடத்திற்கான கட்டணம் |
|---|---|---|---|
| i | கொடி விளம்பரம் 1 சதுர அடிக்கு | 20.00 | 100.00 |
| ii | சுவர் விளம்பரம் 1 சதுர அடிக்கு | 50.00 | 75.00 |
| iii | ஒளிஊட்டப்படாத விளம்பரம் 1சதுர அடிக்கு | 50.00 | 75.00 |
| v | ஒளிஊட்டப்பட்ட விளம்பரம் 1 சதுர அடிக்கு | 100.00 | 200.00 |

இவ்வாறு அனுமதி பெறப்படாத முகவர்கள் / நிறுவனங்கள் / வர்த்தக நிலைய உரிமையாளர்கள் போன்றோரது சகல விளம்பரங்களும் உரிய நிலையங்களிலிருந்து 01.02.2019ஆம் திகதிக்கு பின் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

| இல | விடயம் | அறிவித்தல் |
|---|---|---|
| 12 | திண்மக் கழிவுகளை அகற்றுதல் | வீடுகள், வியாபார நிலையங்கள், அரச, தனியார் நிறுவனங்கள் தமது ஆதனத்தில் நுளம்பு பெருகுவதற்கேதுவான சூழலை வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்/ கழிவுப்பொருட்களை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட இடங்களில் அனுமதியின்றி கொட்டுதல் மற்றும் கொண்டு செல்லல் ஆகியன பொதுச்சுகாதாரத்தை கருத்திற்கொண்டு தடைசெய்யப்பட்டுள்ளது. எனவே அவற்றை தமது இடங்களிலேயே சூழலுக்குப் பாதிப்பற்ற வகையில் புதைத்தோ எரித்தோ சுத்தம் பேணுமாறு வேண்டப்படுகின்றீர்கள். அவ்வாறு அகற்றமுடியாதுள்ள கழிவுப்பொருட்களைத் தரம்பிரித்து, பிரதேசசபை உப அலுவலகங்களில் தொடர்பு கொண்டு அவற்றினை அகற்றிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். |
| 13 | நீர்வழங்கல் சேவை | பொதுமக்கள் மற்றும் வியாபார நிலையங்கள், அரச, தனியார் நிறுவனங்கள் தமது விசேட நிகழ்வுகளிற்கு குடிநீர் தேவைப்படின் பிரதேச சபையில் கட்டணம் செலுத்தி குடிநீரைப் பெற்றுக்கொள்ள முடியும். |
| 14 | கனரக வாகன சேவை | மலக்கழிவு மற்றும் திரவக்கழிவுகள் அகற்றும் வாகனத்தின் (கலி பௌசர்) சேவை தேவைப்பட்டால் எமது உப அலுவலகங்களில் கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும். வீதி உருளை வாடகைக்கு தேவைப்பட்டால் தலைமை அலுவலகத்தில் உரிய கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும். |
| 15 | கலாசார மண்டபம் மற்றும்விளையாட்டு மைதானம் | பொதுமக்கள் மற்றும் வியாபார , அரச, தனியார் நிறுவனங்கள் தமது விசேட நிகழ்வுகளிற்கு பிரதேச சபையில் கட்டணம் செலுத்தி மண்டப வசதி மற்றும் விளையாட்டு மைதான இடவசதி என்பவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும். |
| 16 | பொதுப் பயன்பாட்டு சேவைகள் | எமது சபையினால் நிர்வகிக்கப்படும் நூலகங்கள் , ஆயுர்வேத மருத்துவ நிலையங்கள் மற்றும் பாலர் பாடசாலை என்பன பொதுமக்கள் சேவையினை சிறப்பான முறையில் இலவசமாக வழங்கி வருகின்றன. எனவே அச்சேவைகளையும் முழுமையாகப் பெற்று பயனடையுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். |
| 17 | மயானங்கள் | எமது பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட சுடுகாடுகளில் பூதவுடலினை தகனம் செய்வதற்கான கட்டணமாக ரூபா 1000.00 எமது உபஅலுவலகங்களில் (வாரநாட்களில் உபஅலுவலகத்திலும், வார இறுதி, விடுமுறைநாட்களில் உபஅலுவலக பொதுநூலகத்திலும்) செலுத்தி அனுமதி பெற்று ஈமக்கிரியைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். மற்றும் எமது பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட இடுகாடுகளில் பூதவுடலினை நல்லடக்கம் செய்பவர்கள் உபஅலுவலகங்களில் அனுமதியினை பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன். |

இவ் அறிவித்தல் தொடர்பான மேலதிக விபரங்கள், கட்டண விபரங்களை எமது உப அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்பதையும் அறியத்தருகின்றேன்.

அ. ஜெபநேசன்,
தவிசாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
10.01.2019.

தொலைபேசி இல :
- தலைமை அலுவலகம் - 021 225 5381
- மானிப்பாய் பட்டினம் - 021 225 5382
- மானிப்பாய் கிராமம் - 021 225 5379
- பண்டத்தரிப்பு பட்டினம் - 021 225 2021
- பண்டத்தரிப்பு கிராமம் - 021 225 2022

## லசந்த கொலை குற்றவாளிகள் வெகு விரைவில் தண்டிக்கப்படுவர் மங்கள எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் ஊடகவியலாளர்களுக்கு சுதந்திரமாக தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய நிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளதாக நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் பத்தாவது நினைவு தின நிகழ்வு நேற்று முன்தினம் பொரளை கனத்தையில் இடம்பெற்றது. குறித்த நினைவஞ்சலி கூட்டத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

ஊடகவியலாளர்களுக்கு சுதந்திரமாக தமது நடவடிக்கைகளை புரிய கூடியதாகவுள்ள தோடு பேனாவுக்கும் மீண்டும் சரியான இடம் கிடைத்துள்ளது. மிகவும் நியாயமான, வெளிப்படையான ஊடகக்கலை இன்று நாட்டில் உருவாகியுள்ளது. லசந்த விக்கிரமதுங்க போன்ற ஊடகவியலாளர்களை கொலை செய்யாத சமூகமொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

லசந்த, கொலை தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றார்கள். வெகுவிரைவில் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள் என்றும் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர மேலும் தெரிவித்தார். (இ-7)

## கைக்குண்டுகளுடன் 'பப்பா' கைது

(கொழும்பு)

கொழும்பில் அண்மைக் காலமாக இடம்பெற்ற பல்வேறு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய, பாதாள குழு உறுப்பினரொருவர் கைக்குண்டுகள் மற்றும் போதைப்பொருளுடன் குற்ற விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாளிகாவத்தைப் பகுதியில் வைத்தே "பப்பா" எனப்படும் 28 வயதுடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளாரென்றும், மாளிகாவத்தைப் பகுதியில் பிரபல பாதாள குழுவொன்றின் உறுப்பினரும் தற்போது டுபாயில் மறைந்து வாழும் "கஞ்சிபானி இம்ரான்" எனப்படுபவரின் உதவியாள் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார். (இ-7)

# கடமைகளைப் பொறுப்பேற்றார் வடக்கு ஆளுநர் ராகவன்



(படங்கள்: பொ.சோபிகா)



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக பதவியேற்ற கலாநிதி சுரேன் ராகவன் உத்தியோகபூர்வமாக தனது கடமைகளை நேற்று முற்பகல் யாழ்ப்பாணத்திலுள்ள வடக்கு மாகாண புதிய ஆளுநர் செயலகத்தில் பொறுப்பேற்றுக் கொண்டார்.


புதிய ஆளுநரை ஆளுநருடைய செயலாளர் உள்ளிட்ட பணிக்குழாமினர் வரவேற்றதுடன் மதத்தலைவர்களின் ஆசியுடன் ஆளுநர் தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

அதனைத்தொடர்ந்து இடம்பெற்ற நிகழ்வில் விருந்தினர்களின் வாழ்த்துரையும் ஆளுநரின் உரையும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மதத்தலைவர்கள், வடமாகாணசபை அவைத்தலைவர் சீ.வீ.கே சிவஞானம், யாழ் மாநகர சபை முதல்வர் இ.ஆனோல்ட், யாழ்.இந்திய துணைத் தூதுவர் எஸ்.பாலச்சந்திரன், வடமாகாண பிரதம செயலாளர், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர்கள், யாழ். மாவட்ட பாதுகாப்பு படைகளின் பிரதானிகள், வடக்கு மாகாண அரச நிறுவனங்களின் உயரதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

வடக்கு மாகாணத்தின் 7 ஆவது ஆளுநராக கலாநிதி சுரேன் ராகவன் நியமிக்கப்பட்டுள்ளதுடன் முதன் முறையாக வடக்கு மாகாணத்துக்கு தமிழர் ஒருவர் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-9-101)

## கொடிகாமம்-பருத்தித்துறை வீதி காப்பெற் வீதியாக புனரமைப்பு





(யாழ்ப்பாணம்)

நீண்ட காலமாக புனரமைப்பு செய்யப்படாமலிருந்த கொடிகாமம்-கச்சாய்-பருத்தித்துறை வீதி (AB 31) வீதி MAGA நிறு வனத்தினரால் காப்பெற் வீதியாக புனரமைப்பு செய்யப்படவுள்ளது.

இதற்கான பூஜை நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றது.

இந்த வீதியை புனரமைப்பு செய்து தருமாறு பல நாட்களாக பொதுமக்கள் கோரிக்கை விடுத்திருந்த நிலையில் தற்போது இந்த வீதி புனரமைப்பு செய்யப்படுவதால் இலகுவான பயணத்தை மேற்கொள்ள முடியும் என மக்கள் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர். (இ-9)

## சீனக்குடாவிலிருந்து சிங்கப்பூர் சென்ற விமானம் தொடர்பில் விசாரணை!

### அமைச்சர் அர்ஜுன தெரிவிப்பு



(கொழும்பு)

உரிய அனுமதியின்றி திருகோணமலை, சீனக்குடாவிலிருந்து சிங்கப்பூருக்குச் சென்ற தனியார் விமானம் தொடர்பில் உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்படுமென சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

சீனா, சிங்கப்பூர், ஹொங்கொங் நாடுகளைச் சேர்ந்த ஐந்து முதலீட்டாளர்கள் கடந்த 3ஆம் திகதி தனியார் விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்திறங்கினர்.

இதனையடுத்து கிழக்கு மாகாண. முன்னாள் ஆளுநர் ரோஹித போகொல்லாகமவின் உதவியுடன், கட்டுநாயக்கவில் இருந்து தாம் வந்த விமானத்திலேயே சீனக்குடா விமானப் படைத்தளத்திற்கு இவர்கள் சென்றனர்.

கிழக்கு மாகாண ஆளுநராக இருந்த, ரோஹித போகொல்லாகம உள்ளிட்ட தரப்புகளுடன் பேச்சுக்களை நடத்திவிட்டு சீனக்குடா விமானப்படைத்தளத்தில் இருந்தே, சிங்கப்பூருக்கு அந்த ஜெட் விமானத்தில் குறித்த முதலீட்டாளர்கள் புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

அங்கீகரிக்கப்படாத விமான நிலையத்தில் இருந்து, சிவில் விமானப் போக்குவரத்துச் சட்டங்கள் மற்றும் குடிவரவுச் சட்டங்களை மீறி, குறித்த விமானம் இவ்வாறு புறப்பட்டுச் சென்றமைக்கு எதிராக பல்வேறு தரப்பினரும் எதிர்ப்புக்களை வெளியிட்டு வருகின்றனர்.


ரோஹித போகொல்லாகம மற்றும் அவரது மகனுடன் சிங்கப்பூர் முதலீட்டாளர்கள் பேச்சு நடத்தியமை குறித்து கேள்விகளை எழுப்பியுள்ள சிவில் சமூக செயற்பட்டாளர்கள், உரிய அனுமதியின்றி ஜெட் விமானம் சீனக்குடாவிலிருந்து புறப்பட்டுச் சென்றமை தொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

சீனக்குடா விமானப்படைத் தளத்தில் தரையிறங்குவதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், சிவில் விமானப் போக்குவரத்து துறையின் அனுமதி ஏதும் பெறப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையிலேயே, சிவில் விமானப் போக்குவரத்துத்துறை இதுகுறித்து விசாரணைகளை முன்னெடுக்கும் என்று போக்குவரத்து மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அர்ஜுன ரணதுங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## திருகோணமலையில் மான்களுக்கு உணவகம் மற்றும் உறைவிடம்







(திருகோணமலை)

திருகோணமலையில் மான்களுக்கான உணவகம் மற்றும் உறைவிடம் என்பன திறந்து வைக்கப்பட்டுள்ளன.

குறித்த உறைவிடத்தில் மான்களுக்கு உணவு, மற்றும் தண்ணீர் வசதிகளுடன் கூடிய கொட்டில் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து நீர் கிடைக்கக்கூடிய வகையில் நீர்த்தாங்கியும் அமைக்கப்பட்டுள்ளது.

உணவு மரக்கறி சந்தையிலிருந்து துப்புரவு செய்யப்பட்டு புதிதாக அமைக்கப்பட்ட சீமெந்து தரையில் இடப்படுகிறது.

திருகோணமலை றோட்டரிக் கழகமும் நகரசபையும் இணைந்து அவுஸ்திரேலியாவை சேர்ந்த விக்கி மற்றும் அவரின் மனைவி கரேன் ஆகியோரின் உதவியுடன் இத் திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது.

இதே போன்று மேலும் மூன்று உணவகம் மற்றும் உறைவிடம் அமைக்கப்படவுள்ளது. முதற்கட்டமாக திறந்து வைக்கப்பட்ட உணவுத் திறப்பு விழாவில் திருகோணமலை றோட்டரிக் கழக தலைவர் அருட்தந்தை லக்ஷ்மன் பீரிஸ், நகர சபைத் தவிசாளர் இராசநாயகம், திருகோணமலை நகரமும் சூழலும் பிரதேசசபையின் தவிசாளர் வைத்திய கலாநிதி ஞானகுணாளன், பிரதேச சபை செயலாளர் அருள் ராஜ், றோட்டரிக் கழக அங்கத்தவர்கள், நகர சபை உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களும் கலந்து கொண்டனர். (இ-9)

### இந்தியாவில் அடைக்கலம் கோரிய

# ஈழ அகதிகளை மீள அழைக்க போதுமான நடவடிக்கை இல்லை

## சாள்ஸ் எம்.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

யுத்த காலப்பகுதியில் இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு அகதிகளாக இடம்பெயர்ந்தவர்களை மீள இலங்கைக்கு அழைத்து வருவது தொடர்பில் மேற்கொள்ளும் முயற்சிகள் போதுமானதாக இல்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இராஜதந்திர சிறப்புரிமைகள் தொடர்பான பிரேரணை மீதான விவாதம் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.



இதேவேளை, இந்த விவாதத்தில் கலந்து கொண்ட பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.அரவிந்குமார், வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்களின் சிறப்பான செயற்பாடு என்பது கேள்விக்குறியாகவுள்ளதாக சுட்டிக் காட்டினார். (இ-7)

# மூன்று உயர் நீதிமன்ற நீதியரசர்களும் ஒரு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசரும் ஜனாதிபதி முன்பு பதவிப்பிரமாணம்





(கொழும்பு)

உயர் நீதிமன்ற நீதியரசர்கள் மூவரும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் ஒருவரும் புதிதாக நேற்று முற்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் பி.டீ.சூரசேன, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் எஸ். துரைராஜா, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் ஈ.ஏ.ஜீ.ஆர்.அமரசேகர ஆகியோர் உயர் நீதிமன்ற நீதியரசர்களாக புதிதாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டதுடன், மேல் நீதிமன்றத்தின் நீதிபதி கே.பி.பெர்னாண்டோ புதிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர்.செனவிரத்னவும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார். (இ-7)

# "அடுத்த ஜென்மத்தில் இதைவிட நல்ல பிறவியாய் பிறப்பாய்"

## மனைவியின் தலையை துண்டித்து பூஜை நடத்திய கணவன் கைது

(இரத்தினபுரி)

இரத்தினபுரியில் தனது மனைவியின் தலையைத் துண்டித்து அதனை பூஜை செய்து மறைத்து வைத்த கணவன் கைது செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம், கடந்த மாதம் 28 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

தனது தாயைக் கொலை செய்துள்ளதாக மகன் பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து, சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மகன் வழங்கியுள்ள வாக்கு மூலத்தில், தனது தந்தை சற்று மனநலம் பாதிக்கப்பட்டவர். சில நேரம் அதிக கோபத்துடன் காணப்படுவதோடு, தனக்கு தெய்வ சக்தி உள்ளதாக அடிக்கடி கூறிவருவார்.

இவரைக் குணப்படுத்துவதற்காக இந்தியாவரை அழைத்துச் சென்றிருந்தோம். எனினும் குணமடையாத காரணத்தினால் உள்ளூரிலும் சிகிச்சை வழங்கினோம்.

ஆனால் குடும்பத்திற்கு தோசம் ஏற்பட்டுள்ளதாக அடிக்கடி கூறிவருவார். இதனால் விரக்தியடைந்த அம்மா, நான் எல்லோரையும் விட்டு விட்டு செல்லப் போகிறேன் என கூறினார்.

இதனால் கோபமடைந்த அப்பா அம்மாவை கத்தியால் பல முறை வெட்டினார். இதனை தடுக்கச் சென்ற தங்கையையும் தாக்கினார்.

பின்னர் அம்மாவின் தலையைத் துண்டித்து விட்டு சடலத்தை வீட்டில் மறைத்து வைத்தார்.

துண்டித்த தலையை மோட்டார் சைக்கிளில் எடுத்து சென்றார் என மகன் வழங்கியுள்ள வாக்கு மூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர் பொலிஸாரின் மோப்ப நாயை பயன்படுத்தி துண்டிக்கப்பட்ட தலையை கண்டு பிடித்துள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான சிறுமி காயங்களுடன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில், துண்டிக்கப்பட்ட தலையை எடுத்து சென்று சுத்தப்படுத்தி, அடுத்த ஜென்மத்தில் இதைவிட நல்ல பிறவியாய் பிறப்பாய் என அவர் பூஜை செய்துள்ளதாக விசாரணையில் தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இரும்பு வர்த்தகத்தில் ஈடுபட்ட குறித்த நபர் தனது குடும்பத்துடன் செல்வச் செழிப்புடன் வாழ்ந்து வந்துள்ள நிலையில், மந்திர தந்திரங்களை நம்பி இன்று தனது வாழ்க்கையையும் மாத்திரமின்றி தனது இரண்டு பிள்ளைகளின் வாழ்க்கையும் கேள்விக் குறியாக்கியுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

### குறை'களை' பதிகம் 06



# மின் ஒளி கிடைக்குமா!

மீசாலை, புத்தூர்ச் சந்தியிலே
சன நடமாட்டம் அதிகம்
ஏ-9 வீதி ஒரு புறம்
வேம்பிராய் வீதி மறு புறம்
வீதியோரமாய் பல மின் விளக்குகள்
பல ஆண்டுகளாய் ஒளி பரப்பின

எதிர்பாராத விபத்து வேம்பிராய் வீதியில்
இதனால் மின்கம்பம் மின்குமிழ்கள் சேதம்
வீதி அதிகார சபைக்கவை சொந்தமாம்

நஷ்ட ஈடு கட்டி பல ஆண்டுகள் கழிந்தும்
வரவில்லையே ஒளி

திருடர்கள் ஒரு புறம் க்கவரிசை
சிறுவர்களோ பயத்தில் உறைய
மங்கையர்க்கும் பாதுகாப்பில்லையாம்

பொருத்துவார் யார்? தெரியவில்லை!
உடனடியாய் சீர் பெறுமா?

மீசாலை பபி

# சிங்கப்பூர் - இலங்கை உடன்படிக்கைக்கு எதிரான மனு மீள ஒத்திவைப்பு

(கொழும்பு)

சிங்கப்பூர் மற்றும் இலங்கை அரசாங்கங்களுக்கு இடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம், அரசியலமைப்பை மீறுவதாகவுள்ளது என்று தீர்ப்பளிக்கக் கோரி உச்சநீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனு மே மாதம் 22 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த மனுவை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் உட்பட எட்டு தரப்பினர் இணைந்து தாக்கல் செய்துள்ளனர்.

இந்த மனு நேற்று புவனேக அலுவிஹாரே, பிரியந்த ஜெயவர்த்தன மற்றும் எல்.டி.பீ. தெஹிதெனிய ஆகியோர் உள்ளடங்கிய நீதியரசர்கள் முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

குறித்த உடன்படிக்கை சம்பந்தமாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழு பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளித்திருப்பதாக மனுதாரர்கள் சார்பான சட்டத்தரணிகள் நீதிமன்றில் தெரிவித்தனர்.

அந்த அறிக்கை தொடர்பில் ஜனாதிபதி எடுக்கும் நடவடிக்கை சம்பந்தமாக தாம் அவதானித்துக் கொண்டிருப்பதாக கூறிய மனுதாரர்கள் சார்பான சட்டத்தரணிகள், அதன்பின்னர் மனு தொடர்பில் தீர்மானம் எடுப்பதாக நீதிமன்றில் தெரிவித்தனர். அதன்படி வழக்கை மே மாதம் 22 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தனர். (இ-7)

# இவ்வருட தேர்தலில் ஐ.தே.கட்சியே வெற்றிபெற்று ஆட்சி அமைக்கும்

(அட்டாளைச்சேனை)

இவ்வருடம் தேர்தல் ஆண்டாகவே அமையப் போகின்றது. அத்தேர்தல் அனைத்திலும் ஐக்கிய தேசிய கட்சியே வெற்றிபெற்று ஆட்சி அமைக்கும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் கிடையாது என ஐக்கிய தேசியக் கட்சியின் பொத்துவில் தொகுதி அமைப்பாளாரும், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் உறுப்பினருமான யூ.கே. ஆதம்லெப்பை தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை பிரதேசத்திற்கான ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களை தெரிவு செய்யும் கூட்டம் நேற்றுலொயிட்ஸ் வளாகத்தில் இடம்பெற்றது. இக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா முல்லைத்தீவில்

# ஒரு தொகுதி பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள்

## மாவட்ட செயலகத்தில் வைத்து வழங்கினார்








(பனிக்கன்குளம்)

**இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க முல்லைத்தீவு மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டு ஒரு தொகுதி பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கி வைத்துள்ளார்.**

நேற்று முற்பகல் 11 மணியளவில் உலங்குவானூர்தி மூலம் முல்லைத்தீவுக்கு வருகைதந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் வரவேற்றார்.

தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்ட செயலக அதிகாரிகளுடன் புகைப்படம் எடுத்துக்கொண்ட முன்னாள் ஜனாதிபதி முல்லைத்தீவு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் கலந்துகொண்டுள்ளார்.

அவருடைய அமைச்சினால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் மற்றும் கடந்த மாதம் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் தொடர்பான பாதிப்புக்கள் தொடர்பில் இதன்போது கேட்டறிந்து கொண்டு அதிகர்ரிகள் மத்தியில் உரை நிகழ்த்தினார்.

அதன் பின்னர் மாவட்ட செயலகத்தில் தெரிவு செய்யப்பட்ட ஒருதொகுதி பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்விலும் ஈடுபட்டார்.

நிகழ்வில் அமைச்சின் அதிகாரிகள், முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் உள்ளிட்ட அரச அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-281)




# மனித புதைகுழியின் எலும்புக்கூடுகளின் மாதிரிகள் 23-ம் திகதி புளோரிடாவிற்கு அனுப்பி வைக்கப்படும்

## சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(மன்னார்)

மன்னார் மனித எலும்புக் கூடுகளின் மாதிரிகள் காபன் பரிசோதனைக்காக எதிர்வரும் 23 ஆம் திகதி புளோரிடாவிற்கு அனுப்பி வைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக அகழ்வு பணிக்கு பொறுப்பான சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.



மன்னார் மனிதப் புதைகுழியின் அகழ்வு பணிகள் தற்போது மேலும் விரிவுபடுத்தப்பட்டு அகழ்வு பணிகள் இடம் பெற்று வருகின்றன.

128 ஆவது நாளாக அகழ்வு பணியானது நேற்று புதன் கிழமை அகழ்வு பணிக்கு பொறுப்பான சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம் பெற்று வருகின்றன.

இதன் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மனித எலும்புக்கூடுகள் அகழ்வு செய்யப்படும் பகுதி பாதிப்படைந்திருந்தது. அதனால் வளாகத்தை நாங்கள் முழுமையாக விரிவுபடுத்தியுள்ளோம்.


இந்த நிலையில் அவற்றை சீர செய்து அகழ்வு இடம் பெறும் பகுதியைச் சுற்றி மறைப்பு அமைக்கும் பணிகள் இடம் பெற்று வருகின்றன.

மேலும் பெற்றுக்கொள்ளப்பட்ட மனித எலும்புக் கூடுகளின் 6 இன் மாதிரிகளை தெரிவு செய்துள்ளோம். குறித்த மாதிரிகளானது வெவ்வேறு மண் தட்டுக்களில் இருந்து எடுக்கப்பட்ட பொதுவான மாதிரிகளாக உள்ளன. குறித்த மாதிரிகளில் எலும்பு மற்றும் பற்கள் உள்ளடங்கலாக பெண்கள் என சந்தேகிக்கின்ற மாதிரிகளும் உள்வாங்கப்பட்டுள்ளன. மாதிரிகள் அனைத்தும் காபன் பரிசோதனைக்காக புளோரிடாவுக்கு இம்மாதம் 23 ஆம் திகதி அனுப்பி வைக்கப்படவுள்ளன.

இதன் போது மரணம் தொடர்பிலும் ஏனைய விடயங்கள் தொடர்பாகவும் அறிந்து கொள்ள முடியும்.

தற்போது வரை 288 மனித எலும்புக்கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (2-285)

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(முல்லைத்தீவு)

அகில இலங்கை சமாதான நீதவானாக சரவணமுத்து கனகரத்தினம் சத்தியப்பிரமாணம் செய்துள்ளார்.

கோம்பாவில் புதுக்குடியிருப்பை நிரந்த முகவரியாகக் கொண்ட இவர் மு/வலைஞர்மடம் அ.த.க. பாடசாலை அதிபராவார்.

சமூக சேவையில்தன்னை முழுமையாக அர்ப்பணித்து சமூகநலனில்அக்கறைகொண்ட இவர் அண்மையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

இவர் மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பழைய மாணவன் என்பது குறிப்பிடத்தக்கது. (2)

# இரத்த சுத்திகரிப்பின் வெற்றிவிழா

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ள சிறுநீரக இரத்த சுத்திகரிப்பு நிலையத்தினால் நோயாளர்களுக்கு மேற்கொள்ளப்பட்டு வந்த இரத்த சுத்திகரிப்பின் ஆயிரம் தடவையாக வெற்றிகரமாக இரத்த சுத்திகரிப்பு சிகிச்சை மேற்கொண்டமையை முன்னிட்டு வெற்றி நிகழ்வு நேற்று முற்பகல் 10.30 மணியளவில் மன்னார் மாவட்ட பொது வைத் தியசாலையில் அமைக்கப் பட்டுள்ள சிறுநீரக இரத்த சுத் திகரிப்பு நிலையத்தில் இடம் பெற்றது.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் சிறுநீரக இரத்த சுத்திகரிப்பு நிலையத்தில் பொறுப்பதிகாரி வைத்தியர் ஏ.அன்ரன் சிசில் தலைமையில் இடம் பெற்றது. நோயாளர்களின் நல னைக் கருத்திற் கொண்டு சிறு நீரக இரத்த சுத்திகரிப்பு நிலை யம் மன்னாரில் திறந்து வைக் கப்பட்டுள்ளது. இங்கு நாளொன்றுக்கு நான்கு சிறுநீரக நோயாளர்களுக்கு இரத்த சுத்திகரிப்பு செய்யும் வகையில் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-285)

# வடமாகாண அலுவலகப்பணியாளர் சேவை போட்டி பரீட்சை வகுப்பு

(கிளிநொச்சி)

வட மாகாண அலுவலகப் பணியாளர் சேவைக்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை வட மாகாணத்தின் முதன்மை நகரப் பாடசாலைகளில் நடைபெற உள்ளது.

கிளிநொச்சி மாவட்டக் கல்வியியலாளர்களால் பொது அறிவு, மொழித்திறன், பொது உளச்சார்பு ஆகிய பாடங்களுக்கான இலவச வகுப்புகள் திங்கள்.புதன் ஆகிய நாட்களில் மாலை நேரத்தில் நடத்தப்பட்டு வருகின்றது.

அனுபவம் வாய்ந்த வளவாளர்களால் மாதிரி வினாத்தாள்கள் வழங்கப்பட்டு நடைபெறும் இவ் வகுப்புகளில் இணைய விரும்புவோர் 071 858 4886 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (2)

# முல்லைத்தீவில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தாயொருவர் உயிரிழந்தார்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தனது பிள்ளையைத் தேடி கடந்த 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் தொடர் கவனயீர்ப்பு போராட்டங்களில் ஈடுபட்டுவந்த மன உளைச்சலுக்குள்ளான புதுக்குடியிருப்பு தேவிபுரம் "அ" பகுதியைச் சேர்ந்த சண்முகராசா விஜயலட்சுமி என்ற தாயொருவர் சுகயீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

இந்த தொடர் கவனயீர்ப்பு போராட்டங்களை ஆரம்பித்ததன் பின்னர் பிள்ளைகளை இழந்து பிள்ளைகளை தேடி பல்வேறு மன உளைச்சலுக்கு ஆளாகி வரும் பெற்றோர் பலர் நோய் வாய்ப்பட்டு உயிரிழந்து வருகின்றனர்.

இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் தனது பிள்ளையை தேடி போராடி வந்த தேவிபுரம் "அ" பகுதியை சேர்ந்த சண்முகராசா விஜயலட்சுமி கடந்த 7 ஆம் திகதி சுகயீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

இவரோடு இன்றுவரை 19 தாய், தந்தையர்கள் உயிரிழந்துள்ளனர்.

பிரஸ்தாப தாய் கடும் நோயினால் பாதிக்கப்பட்டு கடந்த 4 ஆம் திகதி சுகயீனம் காரணமாக புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனளிக்காது கடந்த 7 ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

பிரஸ்தாப தாயார் ஒரு தற்காலிக கூடாரத்தில் மிகுந்த சிரமத்திற்கு மத்தியில் வாழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# கிளிநொச்சியில் காலபோக நெற்செய்கை அறுவடை ஆரம்பம்

## நெல்லுக்கான விலை நிர்ணயிக்கப்படவில்லை





(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் காலபோக நெற்செய்கையின் அறுவடைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் வெள்ளப்பாதிப்பினாலும் நெல்லுக்கான உரிய விலை நிர்ணயிக்கப்படாமையினாலும் தாங்கள் பாரிய இழப்பை சந்தித்து வருவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள காலபோக நெற்செய்கைகளின் அறுவடைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, பூநகரி கண்டாவளை ஆகிய பிரதேசங்களில் அறுவடைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில் கண்டாவளை, பெரியகுளம் ஆகிய பகுதிகளில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் இரணைமடுக் குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டமை என்பவற்றால் அறுவடையை அண்மித்த நிலையில் காணப்பட்ட பல ஆயிரக்கணக்கான ஏக்கர் வயல்நிலங்கள் வெள்ள நீரில் மூழ்கி காணப்பட்டன. இதனால் கூடுதலான விவசாயிகளின் நெற்செய்கைகள் அழிவடைந்துள்ளன.

இந்த நிலையில் தற்போது கண்டாவளை, பெரியகுளம் ஆகிய பகுதிகளில் காலபோக நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்ட நிலையில் அறுவடை செய்யும் நெல்லை உடனடியாக உரிய விலையில் விற்பனை செய்ய முடியாதநிலை காணப்படுகின்றமை மற்றும் நெல்லுக்கான உத்தரவாத விலையின்மை என்பவற்றால் நாங்கள் நட்டத்தை எதிர்கொள்வதாகத் தெரிவித்துள்ளனர். (2-315)

# கட்டுத்துப்பாக்கி வைத்திருந்த நபர் வவுனியாவில் கைதானார்

(பனிக்கன்குளம்)

வவுனியாவில் இராசபுரம் கனகராயன்குளம் பகுதியில் வைத்து கட்டுத்துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற பொலிஸாரின்




சோதனை நடவடிக்கையில் இரவு 11.30 மணியளவில் சட்டவிரோதமாக பதிவுகளின்றி கட்டுத்துப்பாக்கி ஒருவர் வைத்திருப்பதாக கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையிலேயே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராசபுரம் கனகராயன் குளத்திலுள்ள வீட்டிற்குச் சென்ற பொலிஸார் வீட்டினை சோதனை செய்த போது பதிவுகள் ஏதுமின்றி சட்டவிரோதமாக கட்டுத்துப்பாக்கி ஒன்றை வைத்திருந்ததன் பேரில் தர்ம தாசன் செல்வநாயகம் (வயது:-48) என்பவரையே கட்டுத்துப்பாக்கியுடன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை புளியங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக மேலும் தெரிவித்தனர். (2-281)

## கடனட்டை மோசடி

# சி.சி.ரி.வி.கமராக்கள் இயங்காமையால் நபரை அடையாளப்படுத்துவதில் சிரமம்

(பனிக்கன்குளம்)

வவுனியாவில் கடனட்டை மோசடியில் ஈடுபட்ட திருடனை அடையாளம் காண்பதற்காக "பூட்சிற்றி" மற்றும் "சதொச" விற்பனை நிலையங்களிலுள்ள கண்காணிப்பு கமராக்களை ஆய்வு செய்த பொலிஸார் பல மாதங்களாக குறித்த நிலையங்களில் கண்காணிப்பு கமராக்கள் இயங்காத நிலையில் இருப்பதை அறிந்து அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

வவுனியா கூமாங்குளம் பகுதியைச்சேர்ந்த இளைஞர் ஒருவரின் கடனட்டை திருடப்பட்ட நிலையில் தனது கடனட்டைகாணாமல்போனதை அறிந்தவுடன் வங்கிக்கு அறிவித்தல் வழங்கி கடனட்டையின் பணப்பரிமாற்றத்தை நிறுத்தியதுடன் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றையும் பதிவு செய்துள்ளார்.

திருட்டுப்போன கடனட்டையை பயன்படுத்தி வவுனியா கண்டி வீதியில் அமைந்துள்ள "பூட்சிற்றி" மற்றும் நெளுக்குளம் சந்தியில் அமைந்துள்ள "சதொச" விற்பனை நிலையங்களில் சுமார் எட்டாயிரம் ரூபாவிற்கு பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என வங்கியினால் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் குறித்த விற்பனை நிலையங்களில் கண்காணிப்பு கமராக்களை பொலிஸார் ஆய்வு செய்த போது வவுனியா "பூட்சிற்றியில்" கமராக்கள் பொருத்தப்பட்ட நிலையில் அவை இயங்கவில்லை என்றும், நெளுக்குளம் "சதொச" விற்பனை நிலையத்தில் கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்படவே இல்லை என தெரிவித்த பொலிஸார் இவ் விற்பனை நிலையங்களின் பொறுப்பற்ற தன்மை காரணமாக கடனட்டை திருடனை பிடிக்க முடியாத நிலைமை காணப்படுவதாக தெரிவித்தனர்.

இச்சம்பவம் குறித்து கருத்து தெரிவித்த பாதிக்கப்பட்ட இளைஞர், குறித்த திருடன் இங்கு கமராக்கள் இயங்காமல் இருப்பதை அறிந்தே எனது கடனட்டையை பயன்படுத்தி பொருட்களை கொள்வனவு செய்துள்ளான். இவ்வாறான நிலைமை எதிர்காலத்தில் ஏற்படக்கூடாது எனின் குறித்த விற்பனை நிலையங்கள் கண்காணிப்பு கமராக்களை சீராக இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் தெரிவித்தார். (2-281)

# சுண்டிக்குளம் சிறுகடலில் இறால் தொழில் பாதிப்பு



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை சுண்டிக்குளம் ஆகிய சிறுகடல் பகுதிகளில் இறால் தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதும் வெள்ளஅனர்த்தம் தமது தொழில்களை பெரிதும் பாதித்துள்ளதாக இப்பகுதி சிறுகடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் சுண்டிக்குளம், ஆனையிறவு, தட்டுவன்கொட்டி உள்ளிட்ட சுமார் 21 கிலோ மீற்றர் வரையான சிறுகடற் பகுதிகளில் சுமார் ஏழு கடற் தொழிலாளர்கள் கூட்டுறவுச்சங்கங்களைச் சேர்ந்த சுமார் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட சிறுகடற் தொழிலாளர்கள் தமது வாழ்வாதாரத் தொழில்களை முன்னெடுத்து வருகின்றனர்.

அதாவது, பருவமழை காலத்தில் குறித்த சிறுகடல் பகுதியையும் பெருங்கடலையும் இணைக்கும் வகையில் தொடுவாய் வெட்டிவிடப்படும் போது கடல் நீரும் நன்னீரும் கலந்து ஒருமாதம் அல்லது ஒன்றரை மாதத்தில் இயற்கையாக இறால் உற்பத்தியாகின்றன.

இம்முறை நவம்பர் மாதத்தில் தொடுவாய் வெட்டிவிடப்பட்ட நிலையில் இறால்கள் உற்பத்தியாகி விலையுயர்ந்த பெரிய இன இறால் வகைகள் உற்பத்தியாகியிருந்தன.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக வெட்டிவிடப்பட்டு கட்டப்பட்ட தொடுவாய் உடைப்பெடுத்து சிறுகடற் பகுதியில் இருந்து நீர் பெருங்கடலுக்கு வெளியேறியமையினால் உற்பத்தியாகிய பெரிய இறால் பெருங்கடலுக்குச் சென்றுள்ளது.

இதனால் தொழில் பாதிக்கப்பட்டுள்ளதாக மேற்படி சிறுகடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனைவிட வெள்ளத்தினால் கடலுக்கு செல்லும் பிரதானவீதி, கடற்றொழில் உபகரணங்கள் என்பன சேதமடைந்துள்ளமை, வெள்ளப்பெருக்கின் காரணமாக சிறுகடல் பகுதிகளில் முதலையின் பெருக்கம் அதிகரித்து காணப்படுகின்றமை என்பனவற்றால் தமது தொழில்கள் மேலும் பாதிக்கப்பட்டுள்ளதாக சிறுகடற்றொழிலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (2-315)

# வீடொன்றின் வளாகத்தினுள் ஏழு அடி நீளம் கொண்ட முதலை



(மன்னார்)

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தரவன் கோட்டை கிராமத்தில் உள்ள வீடு ஒன்றின் வளாகத்தினுள் நேற்று அதிகாலை உள்ளே நுழைந்த முதலை ஒன்றை குறித்த வீட்டின் உரிமையாளர்கள் பிடித்து கட்டி வைத்துள்ளனர்.

தரவன் கோட்டை கிராமத்தில் உள்ள குறித்த வீட்டு வளாகத்தினுள் பாரிய முதலை ஒன்றை நேற்றைய தினம் அதிகாலை கண்ட குறித்த வீட்டின் உரிமையாளர் கிராம மக்களின் உதவியுடன் பிடித்து கட்டியுள்ளார்.

குறித்த முதலை சுமார் 7 அடி நீளம் கொண்டது என தெரிய வருகின்றது.

குறித்த வீட்டை சுற்றி குளம் மற்றும் நீர்த்தேக்கம் எவையும் இல்லாத நிலையில், முதலை நீரையும், ஆடு, நாய், கோழி போன்றவற்றை வேட்டையாடும் நோக்கில் காட்டில் இருந்து கிராமத்திற்குள் வந்திருக்கலாம் என மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

குறித்த முதலை தொடர்பில் கிராம அலுவலகர் மற்றும் மன்னார் பொலிஸாருக்கும் தகவல் வழங்கப்பட்டது. (2-285)

# வீடுகள் முற்றாக சேதமடைந்த 86 குடும்பத்தினருக்கு நிதியுதவி



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வீடுகள் முற்றாக சேதமடைந்த 86 குடும்பத்தினருக்கு நிதியுத்வி வழங்கப்பட்டுள்ளது.

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக புலம்பெயர் வாழ் உறவுகளால் வெள்ள அனர்த்த பேரழிவுகளுக்கு வழங்கப்பட்ட நிதியானது பாதிக்கப்பட்ட மக்களுக்கு உள்நாட்டு, வெளிநாட்டு உறவுகள் சார்பாக வளர்மதி சனசமூக நிலையத்தினரால் நேற்றுமுன்தினம் மூன்றாவது கட்டமாக வழங்கப்பட்டது.

வெள்ளப் பேரழிவால் முல்லைத்தீவு மாவட்டத்தில் வீடுகள் முற்றாக சேதமடைந்த 86 குடும்பத்தினருக்கும் தலா ரூபா 5, ஆயிரம் ரூபா வீதம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வானது நேற்று முன்தினம் காலை புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் இடம்பெற்றது.


இந்நிகழ்வில் முல்லை. மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பணிப்பாளர் லிங்கேஸ்வரன் பிரதம விருந்தினராக மற்றும் உதவித் திட்டப் பணிப்பாளர், கணக்காளர், நிர்வாக அதிகாரி, வளர்மதி நிர்வாக குழுவினர், சனசமூக நிலையத்தின் உப அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து சிறப்பித்தனர்.

மூன்றாம் கட்டத்திற்கான திட்ட முன்மொழிவை ஏற்று வெளிநாட்டு உறவுகள் மிக வேகமாக தமது உதவிகளை செய்தமையாலேயே இந்நிகழ்வையும் எம்மால் வேகமாக முன்னெடுக்க முடிந்தது. முதலாம் கட்டமாக ஒரு இலட்சத்து 20ஆயிரம் ரூபா பெறுமதியான உலருணவுகள் பாரதிபுரம் மக்களுக்கும் இரண்டாம் கட்டமாக ஒரு இலட்சத்து 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் தேவிபுரம், கைவேலி மாணவர்களுக்கும் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-281)




## உரத்துக்கு பதில் இரும்பு

# ஈரானுடன் பண்டமாற்று வர்த்தகம் இந்தியா அடுத்த அதிரடித்திட்டம்



அமெரிக்காவின் மிரட்டலைப் புறக்கணித்து ஈரானிடம் இருந்து கச்சாய் எண்ணெய் வாங்கி வரும் இந்தியா அடுத்தகட்டமாக அந்நாட்டுடன் பண்டமாற்று முறையில் சில பொருட்களை வர்த்தகம் செய்யவும் திட்டமிட்டுள்ளது.

ஈரானிடம் இருந்து கச்சாய் எண்ணெய் வாங்கும் இந்தியா அதற்கான தொகையை இந்திய ரூபாயில் செலுத்துகிறது. இதனால் டொலர் விலையேற்றத்தால் ஏற்படும் பாதிப்பு, ரூபாய் மாற்று தொகை போன்ற பிரச்சினைகள் ஏற்படுவதில்லை. அந்நியச் செலாவணி கையிருப்பு பராமரிப்பிலும் சிக்கல் இல்லை.

இதன் தொடர்ச்சியாக அதிக ஏற்றுமதி வாய்ப்பு உள்ள நாடுகளுடன் சொந்த நாட்டு நாணயத்தில் பரிவர்த்தனை செய்ய முயற்சி மேற்கொண்டு வருகிறது. இதைத் தொடர்ந்து ஐக்கிய அரபு அமீரகத்துடனும் இந்தியா அண்மையில் ஒப்பந்தம் செய்தது.

இந்த நாணய மாற்று ஒப்பந்தத்தின்படி, இருநாடுகளும் தங்கள் சொந்த நாட்டு நாணயத்தின் மூலமே வர்த்தகம் செய்து கொள்ளலாம். ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு சொந்த நாட்டு நாணயங்கள் மூலம் பணம் செலுத்தலாம். இதற்காக மூன்றாவது நாட்டு நாணயமாக அமெரிக்க டொலரை தேட வேண்டிய அவசியமில்லை.

டொலர் மதிப்பில் வர்த்தகம் செய்வதால் ஏற்படும் பாதிப்புகள் இனி இருக்காது. இந்திய வர்த்தகர்களும் இந்திய ரூபாய் மதிப்பில் இந்திய சந்தைகளை கணக்கீட்டு ஐக்கிய அரபு அமீரகத்துடன் வர்த்தகம் செய்ய இயலும். இதுபோலவே தங்கள் சொந்த நாட்டு நாணயத்தை கணக்கில் கொண்டு இந்தியாவிடம் இருந்து பொருட்களை வாங்கவோ, விற்கவோ அந்நாட்டால் முடியும்.

இந்தநிலையில் ஈரானுடன் முந்தைய காலத்தில் இருந்ததுபோல பண்டமாற்று முறையில் சில பொருட்களை ஏற்றுமதி செய்வது தொடர்பாக பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. இந்தியா வந்த ஈரான் வெளியுறவு அமைச்சர் ஜாவேத் ஷெரிபுடன், மத்திய தரைவழி போக்குவரத்துத்துறை அமைச்சர் நிதின் கட்காரி பேச்சுவாரத்தை நடத்தினார்.

அப்போது ஈரானின் சாபர் துறைமுகத்தை மேம்படுத்துவது தொடர்பாக இருவரும் பேச்சுவார்த்தை நடத்தினர். மேலும், கச்சாய் எண்ணெய் வர்த்தகத்தை இந்திய ரூபாயில் செய்வதை போலவே, சில பொருட்களை பண்டமாற்று அடிப்படையில் வர்த்தகம் செய்வது குறித்தும் பரிசீலிக்கப்பட்டது.

குறிப்பாக ஈரானின் உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக அதிக அளவில் இரும்பு பொருட்கள் தேவைப்படுகின்றன. ஆனால் அவற்றை வாங்குவதற்கு நிதி சூழல் இல்லாத நிலையில் ஈரான் தவிக்கிறது. அதேசமயம், கச்சாய் எண்ணெய் தவிர பெற்றோலிய பொருட்கள் சார்ந்த உரமும் அதிகஅளவில் உற்பத்தி செய்யப்படுகிறது.

அமெரிக்காவின் மிரட்டல் காரணமாக இவற்றை ஏற்றுமதி செய்ய முடியாத நிலையில் ஈரான் உள்ளது. எனவே ஈரானிடம் இருந்து உரத்தை வாங்கிக் கொண்டு அதற்கு நிகரான தொகைக்கு இரும்புப் பொருட்களை ஈரானுக்கு ஏற்றுமதி செய்ய இந்தியா முன் வந்துள்ளது. ஈரான் அமைச்சர் ஜாவேத் துடன் நடந்த பேச்சுவார்த்தையில் இதற்கான பூர்வாங்க பேச்சுவார்த்தை முடிவடைந்துள்ளது.

இதைத்தொடர்ந்து விரைவில் ஒப்பந்தம் கையெழுத்தாகும் எனத் தெரிகிறது. அமெரிக்காவின் மிரட்டலையும் மீறி ஈரானிடம் இருந்து இந்தியா ஏற்கனவே கச்சாய் எண்ணெய் வாங்கி வருகிறது. தற்போது பண்டமாற்று அடிப்படையில் வர்த்தகம் செய்யவும் தயாராகி வருவது குறிப்பிடத்தக்கது. (4-7)

# ஸ்டெர்லைட் ஆலையை உடனே திறக்க முடியாது

## மாவட்ட ஆட்சியர் தெரிவிப்பு




(தூத்துக்குடி)

ஸ்டெர்லைட் ஆலையை உடனே திறக்க முடியாதென்று தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் சந்தீப் நந்தூரி தெரிவித்தார்.

தூத்துக்குடி மாவட்ட மாவட்ட ஆட்சியர் சந்தீப் நந்தூரி செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஸ்டெர்லைட் ஆலை விவகாரம் தொடர்பாக தேசிய பசுமைத் தீர்ப்பாய உத்தரவிலுள்ள அனைத்து விபரங்களையும் ஆய்வு செய்து, சட்டப்படி மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்குவிசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

அதன்பேரில் உச்சநீதிமன்றம் எதிர்மனுதாரர்களுக்கு கடிதம் அனுப்ப உத்தரவிட்டுள்ளது.

மேலும், உச்சநீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில் உடனே ஆலையை திறக்க எந்த இடத்திலும் கூறவில்லை.

இந்த வழக்குவிசாரணை முடியும் வரை ஸ்டேட்டஸ்கோ நீடிக்கும்.

தேசிய பசுமைத் தீர்ப்பாய உத்தரவில் பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. அந்த நிபந்தனைகளை ஆலை நிர்வாகம் சரி செய்த பிறகு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தில் விண்ணப்பிக்க வேண்டும். அதன்பிறகு மாசு கட்டுப்பாட்டு வாரியம் முடிவு செய்யும். தற்போது எந்தவிதமான முடிவும் எடுக்கவில்லை. நிபந்தனைகளை ஸ்டெர்லைட் நிர்வாகம் நிறைவேற்றியதாகவும் தெரியவில்லை.

நாங்கள் சட்டரீதியாக தொடர்ந்து போராடி வருகின்றோம். ஸ்டெர்லைட் ஆலையைத் திறக்கக்கூடாது என்பது அரசின் முடிவாகும்.

சட்ட வல்லுநர்களுடன் ஆலோசித்து அடுத்த கட்ட முடிவு எடுக்கப்படும்.

உடனடியாக ஆலையைத் திறப்பதற்கான எந்த உத்தரவும் உச்சநீதிமன்றத்திலிருந்து வரவில்லை" என மேலும் தெரிவித்துள்ளார். (4-7)

# துருக்கியில் கார் கவிழ்ந்து விபத்து; எட்டுப்பேர் உடல் நசுங்கி உயிரிழப்பு!

(இஸ்தான்புல்)

துருக்கி நாட்டில் கார் கவிழ்ந்த விபத்தில் குழந்தைகள் உட்பட 8 பேர் பரிதாபமாகப் பலியானது சோகத்தை ஏற்படுத்தியது.

துருக்கி நாட்டின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ள தெக்ரிடாக் மாநிலத்தில் கார் ஒன்று சென்று கொண்டிருந்த வேளை திடீரென நிலைதடுமாறி வீதியில் கவிழ்ந்து விழுந்தது.


இந்த விபத்தில் காரில் இருந்த குழந்தைகள் உட்பட 8 பேர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கிப் பரிதாபமாகப் பலியாகினர்.

தகவல் அறிந்து மீட்புக் குழுவினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றனர். அவர்கள் அங்கிருந்து 8 உடல்களை மீட்டனர். மேலும் படுகாயம் அடைந்தவர்களை மீட்டு அருகிலுள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

துருக்கியில் கடந்த சில நாட்களாக கடும் பனிப் பொழிவு நிலவி வரும் நிலையில், விபத்துக்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரித்து வருகின்றனர். (4-7)

## அமெரிக்கா-மெக்ஸிக்கோ இை

# நீண்டகால வாக்குறு காங்கிரஸிடம் நி



(வோஷிங்டன்)


தனது நீண்டகால வாக்குறுதியான அமெரிக்க-மெக்ஸிக்கோ எல்லைச் சுவரை அமைப்பதற்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் காங்கிரஸிடமிருந்து நிதி கோரியுள்ளார்.

அதன்படி, இந்த ஆண்டுக்குள் 5.7 பில்லியன் அமெரிக்க டொலர் நிதியை வழங்குமாறு ஜனாதிபதி ட்ரம்ப் நேற்று கோரிக்கை விடுத்துள்ளார்.

எல்லைச் சுவர் அமைக்கும் விவகாரத்திற்கு தொடர்ந்து எதிர்ப்பு கிளம்பி வருகின்ற நிலையில், பாதுகாப்பு நெருக்கடிகள் அதிகரித்துள்ளதால் எல்லைச் சுவர் அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக ட்ரம்ப் சுட்டிக் காட்டியுள்ளார்.

இது குறித்து தொடர்ந்து கருத்து தெரிவித்த, ட்ரம்ப், "தெற்கு எல்லையில் மனிதாபிமான மற்றும் பாதுகா


# பிரான்சில் மஞ்சள் உடை பொலிஸாரைத் தாக்கிய கு



(பாரிஸ்)

பிரான்ஸ் மஞ்சள் உடைப் போராட்டத்தில் பொலிஸாரைத் தாக்கிய குத்துச் சண்டை வீரர் கிறிஸ்டோப் தன்னுடைய செயலுக்கு வருத்தம் தெரிவித்து பொலிஸில் சரண் அடைந்தார்.

# சூரிய மண்டலத் புதிய கிரகம்



(பாஸ்டன்)

நாசாவின் டி.இ.எஸ்.எஸ். என்ற செயற்கைக் கோள் அண்மையில் சூரிய மண்டலத்துக்கு அப்பால் புதிய கிரகத்தைக் கண்டு பிடித்துள்ளது. இது மிகச் சிறிய கிரகமாகும்.

அமெரிக்காவின் 'நாசா' மையம் விண்வெளியில் புதிய கிரகங்களைக் கண்டு பிடிக்கவும் ஆய்வு மேற்கொள்ளவும் கடந்த ஆண்டு ஏப்ரலில் 'டி.இ.எஸ்.எஸ்.' என்ற செயற்கைக் கோளை விண்ணுக்கு அனுப்பியது.

இந்தச் செயற்கை கோள் அண்மையில் சூரிய மண்டலத்துக்கு அப்பால் புதிய கிரகத்தைக் கண்டு பிடித்துள்ளது. இது மிகச் சிறிய கிரகமாகும். இக்கிரகம் பூமியில் இருந்து 53 ஒளி ஆண்டுகள் தூரத்தில் உள்ளது.

இதற்கு எச்டி 21749 பி என பெயரிடப்பட்டுள்ளது. இந்த கிரகத்தின் அருகே அதிக வெளிச்சத்துடன் கூடிய நட்சத்திரம் காணப்ப

# வெளிநாடு

...டையே எல்லைச்சுவர் விவகாரம்

## ...றுதியை நிறைவேற்ற ...திகோரும் ட்ரம்ப்



ப்பு நெருக்கடிகள் அதிகரித்துள்ளன.

நாள்தோறும் ஆயிரக்கணக்கான சட்டவிரோத குடியேற்றவாசிகள் நாட்டிற்குள் நுழைவதற்கு முயற்சித்து வருகின்றனர்.

அவர்களை தடுப்பதும் நாட்டிற்குள் வந்தவர்களை மீண்டும் அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்புவதும் பாரிய சவாலாக அமைந்துள்ளது.

சட்டவிரோதக் குடியேற்றவாசிகளின் வருகையால் அமெரிக்கர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். சட்டவிரோதமாக நாட்டிற்குள் வந்தவர்களால் ஆயிரக்கணக்கான அமெரிக்கர்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டுள்ளனர். எனவே, இவ்விவகாரத்தில் உடனடியாகத் தலையிட்டு தீர்வு காண வேண்டும். இல்லையேல் மேலும் ஆயிரக்கணக்கானோரை நாடு இழக்க நேரிடும்" என மேலும் தெரிவித்தார். (4-7)

## எல்லைச் சுவர் அமைக்கும் பணிகள் தீவிரம்; நாம் ஒன்றும் மோசமானவர்கள் இல்லை

### ட்ரம்பிற்கு குடியேற்றவாசிகள் பதில்

(வோஷிங்டன்)

எல்லைச் சுவர் அமைப்பதற்கான ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் முயற்சிகள் தீவிரம் பெற்றுள்ள நிலையில், தாம் மோசமானவர்கள் அல்லர் என குடியேற்றவாசிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க- மெக்ஸிகோ எல்லைச் சுவர் அமைப்பதற்கு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்க காங்கிரஸிடமிருந்து 5.7 பில்லியன் நிதியை கடந்த செவ்வாய்க்கிழமை கோரியிருந்த நிலையிலேயே குடியேற்றவாசிகள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர். சட்டவிரோத குடியேற்றவாசிகளின் வருகை அமெரிக்காவின் பாதுகாப்பிற்குக் கடுமையான அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாகவும் ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்திருந்தார்.



இந்நிலையில் இது குறித்து கவலை வெளியிட்டு குடியேற்றவாசியொருவர் கருத்துத் தெரிவிக்கையில், "நாம் நாட்டிற்கு ஆபத்தானவர்கள் என்று அவர் கூறுவதன் பொருள் என்ன வென்று எனக்கு விளங்கவில்லை.

அவர் பாகுபாடுடன் செயற்படுகின்றார் என்றே நான் எண்ணுகின்றேன். எல்லைச் சுவர் அமைப்பதற்காக ஜனாதிபதி கோரும் நிதி வழங்கப்படாது என்று நம்புகிறோம்" எனத் தெரிவித்தார். மற்றுமொருவர் தெரிவிக்கையில்,

"நாம் அமெரிக்காவில் திருடச் செல்லவில்லை. எமது நிலையறிந்து ஜனாதிபதி ட்ரம்பின் உள்ளம் உருகும் என எதிர்பார்க்கிறோம்.

நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக முழு முயற்சியுடன் வேலை செய்யவும் நாம் எதிர்பார்த்துள்ளோம்.

நாம் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த உதவுவோமே தவிர அதனை ஒருபோதும் மோசமடையச் செய்ய மாட்டோம்" எனத் தெரிவித்தார். (4-7)

## ...டப் போராட்ட வன்முறை; ...குத்துச்சண்டை வீரர் சரண்

பிரான்ஸில் பெற்றோல் மற்றும் டீசல் மீதான வரி உயர்வை இரத்து செய்யக் கோரி வார இறுதிநாட்களில் மக்கள் வீதிகளில் இறங்கி போராடி வருகின்றனர்.

மஞ்சள் அங்கி போராட்டம் என அழைக்கப்படும் இந்தப் போராட்டம் 2 வாரங்களாக ஓய்ந்திருந்த நிலையில் கடந்த வாரம் மீண்டும் வலுப்பெற்றது.

மேலும் கடந்த வார போராட்டத்தில் வன்முறையும் வெடித்தது. போராட்டக்காரர்கள் வாகனங்களுக்குத் தீ வைத்து எரித்ததால் பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசி அவர்களை விரட்டி அடித்தனர். இதனால் இரு தரப்பினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. அப்போது அந்நாட்டின் முன்னாள் குத்துச் சண்டை சம்பியனான கிறிஸ்டோப் பெட்டிங்கர் என்பவர் பொலிஸாரை சரமாரியாகக் குத்தினார். இது தொடர்பான வீடியோ சமூகவலைத்தளங்களில் வைரலாகப் பரவியது.

இந்த நிலையில், தன்னுடைய செயலுக்கு வருத்தம் தெரிவித்து, கிறிஸ்டோப் பெட்டிங்கர் பொலிஸில் சரண் அடைந்தார். அவரை பொலிஸார் கைது செய்தனர். (4-7)

## எண்ணெய்க் கப்பலில் தீ விபத்து ஒருவர் பலி ; 7 பேர் படுகாயம்


- 21 பேர் பாதுகாப்பாக மீட்பு
- இருவர் மாயம்

(ஹொங்கொங்)

ஹொங்கொங் கடற்பரப்பில் எண்ணெய்க்கப்பல் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் ஏழு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

ஹொங்கொங்கின் Lamma Island தீவிற்கு அருகில் பயணித்துக்கொண்டிருந்த போதே நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை குறித்த கப்பலில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

இதன்போது குறித்த எண்ணெய்க்கப்பலில் இருந்த அனைவரும் கடலில் குதித்துள்ளதாகவும் இவ்வாறு குதித்தவர்களில் 21 பேர்




பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், கடலில் குதித்தவர்களில் இருவர் மாயமாகியுள்ளதாகவும் அவர்களை மீட்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இந்த நிலையில் எண்ணெய்க்கப்பலில் பரவியுள்ள தீயினைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.(4-7)

## ...துக்கு வெளியே ...கண்டுபிடிப்பு



டுகிறது. இதி குளிர்ச்சியான கிரகம்.

பூமியை விட 3 மடங்கு பெரியதாக உள்ளது. இந்த கிரகத்தில் பாறைகள் உள்ளன.

எனவே உயிரினங்கள் வாழத் தகுதியுடையவை. இங்கு அதிக ளவில் கியாஸ் நிரம்பியுள்ளது. நெப்டியூன் மற்றும் யுரேனஸ் கிரகங்களைப் போன்று அடர்த்தியான வளிமண்டலத்தால் ஆனது.

இங்கு அதிக அளவு நைதரசன் வாயு உள்ளது. எனவே இங்கு தண்ணீர் இருக்க வாய்ப்பு உள்ளது என்று மசாசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர் டயானா டிர கோமர் தெரிவித்துளார்.

'டி.இ.எஸ்.எஸ்.' விண்கலம் கடந்த 3 மாதங்களில் 3 புதிய கிரகங்களைக் கண்டுபிடித்து சாதனை படைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (4-7)

## இரு ரயில்கள் மோதல் நான்கு பேர் உயிரிழப்பு

### 200 பேர் படுகாயம்

(ஜோகன்னஸ்பெர்க்)

தென்னாபிரிக்காவில் ஒரே தண்டவாளத்தில் சென்ற இரண்டு ரயில்கள் மோதிய விபத்தில் 4 பேர் பலியாகினர். மேலும் 200 பேர் படுகாயமடைந்தனர்.

தென்னாபிரிக்காவில் பிரிடோரியா மற்றும் மபோபேன் பகுதிகளை இணைக்கும் வகையில் பயணிகள் ரயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

பிரிடோரியா மற்றும் மபோபேன் பகுதிகளை இணைக்கும் வழித்தடத்தில் இரண்டு ரயில்கள் ஒன்றன்பின் ஒன்றாக நேற்று



முன்தினம் பிற்பகல் சென்றுகொண்டிருந்தன. அதில் நூற்றுக்கணக்கான பயணிகள் பயணம் செய்தனர்.

இந்நிலையில், முன்னால் சென்றுகொண்டிருந்த ரயில் மீது பின்னால் வேகமாக வந்த ரயில் மோதியது. இந்த விபத்தில் ரயிலில் பயணம் செய்த 4 பயணிகள் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும், 200 பேர் படுகாயம் அடைந்தனர்.

தண்டவாளத்தில் ரயில்கள் மோதிய விபத்தால் அந்த வழித்தடத்தில் போக்குவரத்து பாதிப்பு அடைந்தது. தகவலறிந்து அங்கு விரைந்து சென்ற மீட்புக் குழுவினர் மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர்.

காயமடைந்தவர்களை மீட்டு அருகிலுள்ள வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

பயணிகள் ரயில் விபத்து குறித்து அறிந்த தென்னாபிரிக்க ஜனாதிபதி சிரில் ரமபோசா,


விபத்தில் பலியானவர்களுக்கு இரங்கல் தெரிவித்துள்ளார். (4-7)

ஒக்டோபர் 26 சதிப்புரட்சிக்கு ஆதரவு

# எல்லை மீறிச் செயற்படுகிறார் தயான்; குற்றச்சாட்டுக்களை அடுக்கினார் பிமல்

(கொழும்பு)

ரஷ்யாவுக்கான இலங்கைத் தூதுவர் கலாநிதி தயான் ஜெயதிலகவின் எல்லை மீறிய செயற்பாடுகள் தொடர்பாக, உயர் பதவிகளுக்கான நாடாளுமன்றக் குழுவின் அண்மைய கூட்டத்தில் கரிசனை காட்டப்பட்டதாக ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.





நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இராஜதந்திர சிறப்புரிமைகள் சட்டத்தின் கீழான ஒழுங்குமுறைகள் குறித்த விவாதத்தில் உரையாற்றிய அவர்,

"ஒரு தூதுவராக தயான் ஜெயதிலகவின் செயற்பாடுகள் கேள்விக்குரியது. தயான் ஜெயதிலக சரியான கல்வித் தகைமையைக் கொண்டிருக்கலாம்.

ஆனால், அவரது செயற்பாடுகள் ஒரு அரசியல் விஞ்ஞானி என்பதை விட, அரசியல் பரப்புரையாளர் என்பதாகவே உள்ளது. அவரது நடத்தைகள் அதனைத் தெளிவாகப் புலப்படுத்தியுள்ளன.

உயர் பதவிகளுக்கான நாடாளுமன்றக் குழுவில் இவரது பெயர் முன்மொழியப்பட்ட போது, இவரைப் போன்ற ஒருவரை தூதுவராக நியமிப்பது சரியானதா? என்று கேள்வி எழுப்பப்பட்டது.

குழுவில் நடந்த நீண்ட விவாதங்களையடுத்து, ரஷ்யாவுக்கான தூதுவராக அவரது பெயரை அங்கீகரிக்க முன்னர், வெளிவிவகார அமைச்சுடன் இணங்கிச் செயற்பட வேண்டும் என்று தயான் ஜெயதிலகவுக்கு சபாநாயகர் கரு ஜெயசூரிய ஆலோசனை கூறியிருந்தார்.


இந்த ஆலோசனையை மீறி அவர். தனது அரசியல் பரப்புரையை இன்னமும் மேற்கொள்கிறார். ஒக்டோபர் 26 அரசியல் சதிப்புரட்சிக்கு இவர் ஆதரவு அளித்தார். ஒரு இராஜதந்திரி அவ்வாறு செயற்பட முடியாது.

இது நாடாளுமன்ற சிறப்புரிமையை மீறும் செயல். உயர்பதவிகளுக்கான நாடாளுமன்றக் குழு இதுகுறித்து அண்மைய கூட்டத்தில் கலந்துரையாடியது.

இப்போது, தயான் ஜெயதிலக உடன்பாட்டுக்கு அமைய செயற்படுகிறாரா? என்பதைக் கண்டறிய வெளிவிவகார அமைச்சு விசாரணை நடத்த வேண்டும். அதுபற்றி நாடாளுமன்றத்திற்கு அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும்" என்றும் அவர் கோரிக்கை விடுத்தார். (இ-7)

# களுகங்கை நீர்த்தேக்கம் மக்களிடம் கையளிப்பு





(கொழும்பு)

தும்பர பள்ளத்தாக்கினை வளமாக்கும் களுகங்கை நீர்த்தேக்கத்தை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் இடம்பெற்றது.

"மைத்திரி ஆட்சி - பேண்தகு யுகம்" பொருளாதார மற்றும் கலாசார மறுமலர்ச்சி ஐந்தாவது ஆண்டில் அடியெடுத்து வைப்பதை முன்னிட்டு இந் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவியேற்று நேற்று முன்தினத்துடன் நான்கு ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ளன.

ஜனாதிபதி பதவியேற்று நான்கு ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு நேற்று முன்தினம் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அதன் ஒரு கட்டமாக இந்த புதிய அபிவிருத்தி செயற்றிட்டம் நேற்று முன்தினம் மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# திருகோணமலை துறைமுகம் அமெரிக்காவின் கட்டுப்பாட்டில்

## உடன்படிக்கை உண்டா? அரசிடம் விமல் கேள்வி

(கொழும்பு)


கிழக்கின் திருகோணமலை துறைமுகத்தை அமெரிக்கக் கடற்படையின் கட்டுப்பாட்டில் கொண்டுவரும் உடன்படிக்கையை அரசாங்கம் செய்யவுள்ளதா? என எதிர்க்கட்சி உறுப்பினர் விமல் வீரவன்ச எம்.பி. ஆளும் தரப்பிடம் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இராஜதந்திர சிறப்புரிமைகள் சட்டத்தின் கீழான கட்டளைகள் மீதான விவாதத்தின் போது கேள்வி எழுப்பிய எதிர்க்கட்சி உறுப்பினர் விமல் வீரவன்ச,

அமெரிக்கக் கடற்படையின் கடற்படை பயிற்சிகளுக்கும் அவர்களின் இராணுவ நகர்வுகளுக்கும் இலங்கையின் கிழக்கில் முகாம் ஒன்றை வழங்க அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளதாக அறிய முடிகின்றது.

குறிப்பாக கிழக்கில் திருகோணமலை துறைமுகத்தை அவ்வாறு வழங்க உடன்படிக்கை செய்துள்ளதாக தகவல்கள் மூலமாக அறிய முடிகின்றது.

உண்மையில் அரசாங்கம் அவ்வாறான தீர்மானம் ஒன்றை முன்னெடுத்துள்ளதா? அமெரிக்கக் கடற்படை அவ்வாறு கைப்பற்றியுள்ளதா? என வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன விடம் கேள்வி எழுப்பினார்.



இதற்குப் பதிலளித்த வெளிவிவகார அமைச்சர், அவ்வாறு எந்தவொரு உடன்படிக்கையும் செய்துகொள்ளப்பட்டுள்ளதா? என எனக்குத் தெரியாது, இதனை பாதுகாப்பு அமைச்சரிடமே கேளுங்கள் எனத் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## ஒட்டும் மருத்துவம்

நமது உடம்பு இருக்கிறதே... அது நடமாடும் கோயில் என்று சொல்லுவார்கள்! அதனால்... கோயிலை எப்படி வைத்திருக்க வேண்டுமோ அப்படி வைத்திருக்க வேண்டும் நமது உடம்பையும்!

அப்படி வைத்திருக்கிறோம் என்பது வேறு விடயம். உடம்பும் சுத்தமாக இருக்க வேண்டும்! மனதும் சுத்தமாக இருக்க வேண்டும்! அப்படி இருந்து விட்டால் போதும்... அதைவிடப் பெரிது வேறு எதுவும் இல்லை!

நோயில்லாத வாழ்வு தான் குறைவில்லாத செல்வம்... ஆனால்...அப்படி யார் இருக்கிறார்கள்? இப்போது இருப்பவர்களை மூன்று விதமாகப் பிரித்து விடலாம்!

ஆகாரத்துக்கு முன் மருந்து சாப்பிடுபவர்கள் உண்டு, ஆகாரத்துக்குப் பின் மருந்து சாப்பிடுபவர்கள் உண்டு, மருந்தையே ஆகாரமாகச் சாப்பிடுபவர்களும் உண்டு.

நோயே வராத அளவுக்கு இருந்து விட்டால் ரொம்ப நல்லது. நோய் வந்து விட்டால்... அதற்குப் பின் மருந்து மாத்திரை எதையாவது உடம்புக்குள்ளே அனுப்பி நோயை வெளியே அனுப்ப வேண்டியிருக்கு!

உடம்புக்குள்ளே மருந்தை அனுப்புவது எப்படி? ஒரு முறை, வாய் வழியாகச் சாப்பிடுவது! இன்னொரு முறை, ஊசி மூலமாக உடம்பில் செலுத்துவது. இப்போது இன்னொரு சுலபமான முறை வந்திருக்கிறது. அதற்கு TCDD என்று பெயர்.

அதாவது "Transdermal Controlled Drug Delivery System" Polymer களால் தயாரிக்கப்பட்ட ஒரு சாதாரண பிளாஸ்டர் மாதிரி இது. இதிலே நமது உடம்புக்குள்ளே போக வேண்டிய மருந்தையும் சேர்த்திருப்பார்கள்! .

இப்போது... உடம்பிலே ஏதாவது காயம் பட்டால் பிளாஸ்டரை ஒட்டிக் கொள்கிறோம் அல்லவா. அதே மாதிரி இதையும் உடம்பிலே ஒட்டிக்கொள்ள வேண்டியது தான்!

இதிலே உள்ள மருந்து தோல்வழியாக உள்ளே போய்விடும்! இதிலே சில சௌகரியம் உண்டு! எப்படி என்றால்... ஊசி போட்டால் வலிக்கிறது...

மாத்திரை சாப்பிட்டால்... வயிற்றில் சில தொந்தரவு எல்லாம் கொடுக்கிறது! அதிகமாக வேறு சாப்பிட வேண்டி இருக்கிறது! அதுமட்டுமில்லை, வயிற்றில் அமிலத்தன்மை இருப்பதனால் சில மருந்தினுடைய வீரியம் ஓரளவுக்குப் பாதிக்கப்படும்.

ஆனால் இந்த TCDD முறையில் அந்தக் கஷ்டம் கிடையாது! இதை விடப் பெரிய சௌகரியங்கள் உண்டு! சாதாரணமாக நாம் சாப்பிடும் மருந்து ஆரம்பத்தில் கொஞ்சம் கல்லீரலுக்குள்ளே போய் கழிவுப் பொருளாக விரயமாகிவிடும்! இதை Initial by Pass by the liver என்று சொல்வார்கள்... ஆனால்... Transdermal Patch வழியாக உள்ளே போகும் மருந்து நேராக இரத்தத்தில் கலந்து விடுகிறது.

அதனால் மருந்தினுடைய அளவையும் குறைத்துக் கொள்ளலாம். இன்னொரு நன்மை என்னவென்றால்... ஒரு நாளைக்கு ஒரு தடவை ஒட்டிக் கொண்டால் போதும் தினம் எத்தனை வேளை? ஆகாரத்துக்கு முன்னராக... பின்னராக... என்று எல்லாம் கேட்டுக் கொண்டிருக்க வேண்டியதில்லை!

ஏன் என்றால்... Polymer இல் சேர்க்கப்பட்ட மருந்து கொஞ்சம் கொஞ்சமாகத் தேவையான அளவுக்கு உடம்புக்குள்ளே போய்விடும். ஒரு இதய நோயாளிக்கு மாரடைப்பு வரலாம் என்று டாக்டர்கள் சந்தேகப்படுகிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள்! உடனே Nitroglycerine சேர்ந்த Transdermal பிளாஸ்டரை ஒட்டிக்கொண்டால் போதும்!

இரவில் நிம்மதியாகத் தூங்கலாம். இது ஒரு முன் ஜாக்கிரதையான தடுப்பு முறை. இது மாதிரி Scopolamine Transdermal Patches எல்லாம் இருக்கிறது! இன்னும் கொஞ்சக் காலத்தில் எத்தனையோ விதமான மருந்துகளை உடம்பில் செலுத்துவதற்கு இந்த முறை உபயோகமாக இருக்கும்! ஏன் என்றால் ஒவ்வொரு மனிதனிடம் இருக்கும் தோலினுடைய பரப்பு 3 ஆயிரம் சதுர அங்குலம். 3 இல் ஒரு பங்கு இரத்தம் இங்கே தான் சுத்திக்கொண்டிருக்கிறது. அதனால் இன்னும் கொஞ்ச நாளில் யாராவது ஒருத்தர் உடம்பில் பிளாஸ்டர் ஒட்டிக்கொண்டு வந்தால் அவர்கள் எங்கேயோ அடிபட்டு வருகிறார்கள் என்று மட்டும் நினைத்துவிட வேண்டாம்!

அவர்கள் வைத்தியசாலையிலிருந்து வருபவர்களாகவும் இருக்கலாம்! தோல் வழியாக மருந்து செலுத்துவது பற்றி இப்போது பேசிக்கொண்டிருந்தோம் இல்லையா!

தோல் மூலமாக காய்ச்சலை நேரடியாகத் தெரிந்துகொள்வதற்கும் இப்போது வசதி வந்திருக்கிறது! சாதாரண காய்ச்சல் என்று சொல்லிக்கொண்டு வைத்திய சாலைக்குப் போனோம் என்றால்...

நமது உடம்புக்கு என்ன என்று சொல்வதற்கு வாயைத் திறப்போம்... திறந்த வாயை மூடுவதற்குள்ளே அதில் ஒரு தெர்மா மீற்றரைக் கொண்டுவந்து வைத்து விட்டுப் போய்விடுவார் ஒருத்தர் .

சிலபேர் பழக்க தோசத்தில் ஏதோ சாப்பிடுவதற்குத் தான் கொடுத்தார்க்ள் என்று நினைத்துக் கொண்டு வாயை அசைபோட ஆரம்பிப்பதும் உண்டு. இனிமேல் இந்த பிரச்சினை இருக்காது! ஏன் என்றால் Fore Head Thermomtere வந்தாச்சு! I M G Fever Metre என்று இதற்குப் பெயர்!

Liquid Crystals அடிப்படையில் இதை உருவாக்கி இருக்கிறார்கள்! இது ஒரு மிக உயர்ந்த தொழில் நுணுக்கம். தெர்மா மீற்றர் கூட ஒரு சின்னப் பட்டை இருக்கும் . இந்த Stripe ஐ நெற்றியில் ஒட்டி வைத்துவிட வேண்டியது! கொஞ்ச் நேரத்திலேயே எத்தனை டிகிரி காய்ச்சல் என்பதை "கிரிஸ்டல்" இல் நேரடியாகப் படித்துக் கொள்ளலாம்.

இப்படி மருத்துவம் எவ்வளவோ வளர்ந்து கொண்டுதான் இருக்கிறது! இருந்தாலும் மருத்துவமே தேவைப்படாத அளவுக்கு நமது உடம்பையும் மனதையும் வைத்துக்கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். அது தான் நல்லது!

# புத்தாண்டுப் பலன்கள் -2019

## இனிய ஆண்டு மலர்கிறது, இலட்சியப் பாதை தெரிகிறது!



எண்ணம் நல்லதானால் எல்லாம் நல்லதாகும் என்று எடுத்துரைக்கும் கும்ப இராசி வாசகர்களே!

புத்தாண்டு பிறக்கப் போகின்றது. பொன்னான எதிர்காலம் உங்களுக்கு அமையப் போகின்றது. ஆண்டின் தொடக்கத்தில் 6 இல் இருக்கும் ராகுவும் 12 இல் இருக்கும் கேதுவும் பெப்ரவரி 13 இல் பெயர்ச்சியாகி பின்னோக்கிச் செல்கின்றார்கள். இதுவரை 10 இல் இருந்து பலவித தொல்லைகளைக் கொடுத்த குருபகவான் இனி 11 ஆம் இடத்திற்கு வரப்போகின்றார். தன இலாபாதிபதியாக விளங்கும் குருபகவான் இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகும் இந்த ஆண்டில் தனலாபம் குவியும். தங்கு, தடைகள் அகலும். இனத்தாரும் இனிய நண்பர்களும் ஒத்துழைப்பு செய்ய முன்வருவர்.

நீங்கள் ஒருசிலரிடம் மட்டுமே நெருங்கிப் பழகுவீர்கள். உள்ளத்தில் உள்ளதை ஒளிவு மறைவின்றி சொல்வதால் பலருக்கும் பகையாளி ஆகலாம். மனோதிடம் உங்களுக்கு குறைவாகவே இருந்தாலும், பிடிவாத குணம் உங்களுக்கு அதிகமாகவே இருக்கும். மற்றவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்குவீர்கள்.

புத்தாண்டின் தொடக்க நிலை

புத்தாண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு 6 இல் ராகுவும் 10 இல் குருவும் இருந்து அஷ்டலட்சுமி யோகத்தை உருவாக்குகிறார்கள். எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேறும். தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். குடும்ப முன்னேற்றம் கூடுதலாக இருக்கும். உத்தியோகத்தில் கூடுதல் சம்பளம் கிடைக்கும் வாய்ப்பு உருவாகும். உடல் ஆரோக்கியம் சீராகும். வியாபாரம், தொழில் வெற்றிநடை போடும்.

2 இல் செவ்வாய் இருப்பதால் தொழில் வளம் சிறப்பாக இருக்கும். உங்கள் இராசிக்கு 3, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். சகாய ஸ்தானம் மற்றும் தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியான செவ்வாய் தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது தொழிலை விரிவு செய்யும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக நடைபெறும்.

குரு மங்கள யோகம் இருப்பதால் இல்லத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறிகள் தென்படும். இலாப ஸ்தானத்தில் சூரியன், புதன், சனி ஆகிய மூன்று கிரகங்களும் இணைந்திருக்கின்றார்கள். சப்தமாதிபதி சூரியன் இலாப ஸ்தானத்தில் இருப்பதால் வாழ்க்கைத் துணை வழியே வருமானம் வரும் வாய்ப்பு உண்டு. எனவே அவர்கள் படிப்பிற்கேற்ற உத்தியோகமோ, தொழிலோஅவர்களுக்கு ஏற்ற விதத்தில் அமைந்து அதன் மூலமும் உதிரி வருமானமும் உங்களுக்கு கிடைக்கும்.

புத ஆதித்ய யோகம் இருப்பதால் கல்வி முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும். பிள்ளைகள் வெளிநாடு செல்லும் முயற்சிகளில் அனுகூலம் கிடைக்கும். கண் சம்பந்தப்பட்ட தொல்லை அகலும். பஞ்சமாதிபதியான புதன் இலாப ஸ்தானத்தில் இருப்பது யோகம்தான். அவரோடு சப்தமாதிபதி சூரியனும் இராசி நாதன் சனியும் இருப்பதால் அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும் பதவிகளும் கிடைக்கும்.

ராகு-கேது பெயர்ச்சிக் காலம்

ஆண்டின் தொடக்கத்தில் கடகத்தில் சஞ்சரிக்கும் ராகு பெப்ரவரி 13 ஆம் திகதி மிதுனத்திற்குச் செல்கின்றார். 12 இல் சஞ்சரிக்கும் கேது இலாப ஸ்தானத்திற்கு செல்கின்றார். பஞ்சம ஸ்தானத்தில் ராகு பலம் பெற்றிருக்கும் பொழுது அஞ்ச வேண்டியதில்லை. அதற்குரிய பரிகாரங்களையும் வழிபாடுகளையும் முறையாக மேற்கொண்டால் நெஞ்சம் மகிழும் வாழ்க்கை உங்களுக்கு அமையும். குறிப்பாக புத்திர ஸ்தானம் என்பதால் பிள்ளைகளால் பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும்.

அதே நேரத்தில் பஞ்சம ஸ்தானத்தை பூர்வ புண்ணிய ஸ்தானம் என்று வர்ணிப்பது வழக்கம். எனவே பூர்வ புண்ணியத்தின் பலனாகக் கிடைக்க வேண்டிய யோகங்களை எல்லாம் இந்த ராகு பகவான் உங்களுக்கு வழங்குவார். கலைத்துறை மற்றும் கட்டடம், இரும்பு எந்திரத்துறையில் பணிபுரிவோர் பலன்களை அதிகம் காண்பர். பூர்வீகச்-சொத்துக்கள், பாகப் பிரிவினைகள் ஆகவில்லையே என்ற கவலை அகலும்.

இலாப ஸ்தானத்தில் கேது சஞ்சரிப்பது யோகம் தான். ஆன்மீகப் பெரியவர்களின் ஆசி கிட்டும். பெரிய அளவில் தொழிலினை விரிவு செய்ய வேண்டும் என்று விரும்புபவர்களுக்கு மூலதனம் போட முக்கிய புள்ளிகள் முன்வருவர். கடன் உதவிகள் கேட்ட இடத்தில் கிடைக்கும். ராகு-கேதுக்கள் சுயபலமற்ற கிரகம் என்பதால் எந்த வீட்டில் சஞ்சரித்தாலும் அந்த வீட்டிற்கு அதிபதியுடைய பலம் அவருக்கு கிடைக்கும். அதற்குரிய காரகத்துவத்தின் படியே நன்மை-தீமைகளை உங்களுக்கு வழங்குவார்.

கேதுவின் மாற்றம் இப்பொழுது குரு வீட்டிற்கு வருகின்றது. எனவே குருதிசை நடந்தால் என்ன பலன் உங்களுக்கு கிடைக்குமோ அந்தப் பலன்களை இந்த கேதுப் பெயர்ச்சியின் மூலம் கேது பகவான் உங்களுக்கு வழங்குவார். குரு உங்கள் இராசிக்கு 2,11 இற்கு அதிபதியாவார். அங்ஙனம் தன ஸ்தானத்திற்கும் இலாப ஸ்தானத்திற்கும் அதிபதியாக விளங்கும் ஒரு கிரகத்தின் வீட்டில் கேது பகவான் சஞ்சரிக்கும் பொழுது கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். தனவரவு தாராளமாக வந்து சேரும். உத்தியோகம் பார்ப்பவர்கள் சுயதொழில் செய்ய முன்வருவர். விருப்ப ஓய்வில் வெளிவந்து நண்பர்களைக் கூட்டாகச் சேர்த்து நலமோடு வாழ வழிகாட்டும் தொழில் ஒன்றைச் செய்ய முன்வருவர். மூத்த சகோதரர்கள் உங்கள் முன்னேற்றத்திற்கு வழிவகுத்துக் கொடுப்பர்.

குருப்பெயர்ச்சிக் காலம்

2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் 28 ஆம் திகதி குருப்பெயர்ச்சி நிகழ இருக்கின்றது. இதுவரை 10 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான் இப்பொழுது இலாப ஸ்தானத்திற்கு வரப்போகின்றார். இக்காலம் ஓர் பொற்காலமாகும். எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். இதுவரை இருந்த கசந்த காலங்கள் மாறி இனி வசந்தகாலம் உருவாகப் போகின்றது. நண்பர்கள் நல்ல தகவல்களைக் கொண்டு வந்து சேர்ப்பர். தொழில் வெற்றி நடை போடும். புதிய பங்குதாரர்களை இணைத்துக்கொண்டு தேர்ந்தெடுத்த தொழிலை திறம்பட நடத்துவீர்கள். வெளிநாட்டு முயற்சி வெற்றி தரும்.




தனுசு இராசியில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை 3, 5, 7 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே சகோதர ஒற்றுமை பலப்படும். நெருங்கிய உறவினர்கள் உங்கள் நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்து தருவர். பிள்ளைகளால் பெருமை சேரும். பிறர் போற்றுமளவிற்கு வாழ்க்கைத் தரம் உயரும். கல்யாண முயற்சிகள் கைகூடும். கடமையில் கண்ணும் கருத்துமாக இருந்து பாராட்டுப் பெறுவீர்கள். வீடு கட்டும் அல்லது வாங்கும் யோகம் உண்டு. வெளிநாட்டில் பணிபுரிய நினைத்தவர்களுக்கு அதுவும் கைகூடும். இக்காலத்தில் யோகம் தரும் குரு பீடங்களுக்குச் சென்று வழிபட்டு வந்தால் தேகநலனும் சீராகும், செல்வ வளமும் பெருகும்.

குருவின் அதிசாரமும் வக்கிரமும்

ஆண்டின் தொடக்கத்தில் விருச்சிகத்தில் சஞ்சரிக்கும் குரு அதிசாரமாக மார்ச் 13 ஆம் திகதி தனுசு இராசிக்குச் செல்கின்றார். இடையில் வக்கிரமாகவும் இருக்கின்றார். எனவே இக்காலத்தில் கொஞ்சம் கவனமுடன் இருப்பது நல்லது. குடும்பத்தில் குழப்பங்கள் அதிகரிக்கும். ஒற்றுமை குறையும். எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. முன்கோபத்தின் காரணமாக பல நல்ல வாய்ப்புகளை இழக்க நேரிடும். விரயங்களைச் சமாளிக்க முடியாமல் திணறுவீர்கள். பட்டமங்கலம், ஆலங்குடி, திருச்செந்தூர் போன்ற ஆலயங்களுக்குச் சென்று வழிபட்டு வந்தால் உங்கள் பணியில் இருக்கும் தொய்வு அகலும்.

கவனமுடன் செயற்பட வேண்டிய காலம்

7.5.2019 முதல் 3.6.2019 வரை செவ்வாய், சனி பார்வை இருக்கின்றது. மிதுனச் செவ்வாயைத் தனுசு சனி பார்க்கின்றது. எனவே இக்காலத்தில் பிள்ளைகள் வழியில் பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். பண நெருக்கடி அதிகரிக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாது. இளைய சகோதரத்தோடு பிரச்சினைகள் ஏற்பட்டு மன நிம்மதி கெடும். வெளிநாட்டு முயற்சியில் தடை ஏற்படும். அரசு வழி தொல்லைகளுக்கும் ஆளாக நேரிடலாம்.

5.6.2019 முதல் 29.6.2019 வரை உள்ள காலம் இனிய காலமாகும். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். வாங்கிய கடனைக் கொடுத்து மகிழ்வீர்கள். கூட்டு முயற்சியில் வெற்றி கிடைக்கும். குடியிருக்கும் வீட்டை ஒருசிலர் விலைக்கு வாங்கும் யோகம் உண்டு. தங்கம், வெள்ளி, ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை ஏற்படும். வியாபார விரோதங்கள் விலகும்.

வளர்ச்சி தரும் வழிபாடு

அமாவாசை அன்று முன்னோர் வழிபாட்டையும் பௌர்ணமி அன்று மலை வலம் வந்து மால்மருகன் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள். திருவாடானையில் உள்ள ஆதிரத்னேஸ்வரர், சிநேகவல்லியம்மனை வழிபட்டு வளமும் நலமும் காணுங்கள்.

சனியின் வக்கிர காலம்

8.5.2019 முதல் 3.9.2019 வரை தனுசு இராசியில் பூராட நட்சத்திரக் காலில் சனி வக்கிரம் பெறுகின்றார். இந்த வக்கிர காலத்தில் உடல்நலத்தில் அதிக கவனம் தேவை. உள்ளத்தில் தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்வது நல்லது. வீண் பிரச்சினைகள் அதிகரிக்கும். வேலை செய்யும் பணியாளர்களால் பிரச்சினைகள் உருவாகும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் மேலதிகாரிகளின் வெறுப்பிற்கு ஆளாக நேரிடும். ஆதியந்தப் பிரபு வழிபாடு அனுகூலம் தரும்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

கும்ப இராசியில் பிறந்த பெண்களுக்கு இந்தப் புத்தாண்டு உங்களுக்கு சீரும் சிறப்பும் தரும் ஆண்டாக அமையப் போகின்றது. செல்வ நிலை உயரும். குருமங்கள யோகத்தோடு ஆண்டு பிறப்பதால் கொடுக்கல்-வாங்கல்களும் ஒழுங்காகும். குடும்பத்தில் நடைபெற வேண்டிய கல்யாணம் கைகூடும். உடல் நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். வாங்கிய கடனைக் கொடுக்க வழி பிறக்கும்.

கணவன்-மனைவி உறவில் கனிவும் பாசமும் பிறக்கும். ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்பட்டு புதிய வாழ்வை அமைத்துக்கொள்வீர்கள். பிள்ளைகளால் பெருமை உண்டு. தாயின் ஆதரவு தடையின்றிக் கிடைக்கும். உடன்பிறப்புகள் உறுதுணையாக இருப்பர். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். உயர் பதவியும் ஊதிய உயர்வும் எதிர் பார்த்தபடி வந்து சேரும். சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. புனித ஸ்தலங்களுக்கும் சென்று வருவீர்கள். குலதெய்வ வழிபாடும், ஆறுமுகப் பெருமான் வழிபாடும் குடும்பத்தில் மகிழ்ச்சியைக் கூட்டும்.

ஜோதிடக் கலாமணி
- சிவல்புரி சிங்காரம் -

## "கலரியிலிருந்து கைதட்டியவர்களை நிர்வகிப்பது யார்?

# வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு இணங்க செயற்படுவதை அரசு நிறுத்த வேண்டும்

## அநுர பிரியதர்ஷன அறிவுரை



(கொழும்பு)

**வெளிநாட்டுத் தூதுவர்களின் பேச்சுக்கு இணங்க, அரசாங்கம் செயற்படுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "கடந்த காலங்களில் நாம் அனைத்துத் தேர்தல்களையும் உரிய நேரத்தில் நடத்தினோம்.

ஆனால், இன்று மாகாண சபைத் தேர்தல்கள் பிற்போடப்பட்டுள்ளன.

ஜனநாயகம் தொடர்பில் கதைக்கும் அரசாங்கத் தரப்பினர் தேர்தலை நடத்த முற்படவில்லை. எம் அனைவருக்கும் ஜனநாயகம் தொடர்பில் அக்கறை இருக்கிறது.

அத்தோடு, இன்று சில தூதுவர்கள் தமது அதிகாரத்துக்கும் மீறிய சில செயற்பாடுகளை மேற்கொள்வதையும் எம்மால் காணக்கூடியதாக இருக்கிறது.

நாடாளுமன்றில் சர்ச்சை இடம்பெற்றபோது, கலரியைப் பார்வையிட வந்த சில தூதுவர்கள் கைதட்டுவதைக் காணக்கூடியதாக இருந்தது. இவர்களை நிர்வகிப்பது யார் என்ற கேள்வி எழுகிறது? தூதுவர்களுக்கு சுதந்திரமாக செயற்பட அனுமதி இருக்கிறது.

ஆனால், எமது நாட்டின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு செயற்பட வேண்டும் என்பதை அவர்களுக்கு தெரிய வைக்க வேண்டும். தூதுவர்களின் பேச்சுக்களை கேட்டு அரசாங்கத்தைக் கொண்டு செல்ல முடியாது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



## ஏழாலை தெற்கு களபாவோடை வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்

தேவஸ்தானத்தினது விளம்பி வருட மகோற்சவமானது *11.09.2019 (வெள்ளி) காலை 9.00 மணிக்கு* கொடியேற்றத்தோடு ஆரம்பமாவதுடன் *19.01.2019 (சனி) காலை 9.00 மணிக்கு* இரதோற்சவம் இடம்பெறும் என்பதனை அம்பாளின் அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

**தேவஸ்தானம்**

*(6995)*


## தமிழ்நாட்டில் கம்பவாரிதிக்கு "ஸ்ரீஇராமானுஜர்" விருது



(சென்னை)

தமிழ்நாட்டின் "பாரத் பல்கலைக்கழகமும்" "ஆழ்வார்கள் ஆய்வு மையமும்" இணைந்து இம்மாதம் 6 ஆம் திகதி சென்னையில் நடத்திய மார்கழிப் பெருவிழாவில் மூன்று தமிழறிஞர்கள் "இராமானுஜர் விருது" வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்திய முன்னாள் மத்திய அமைச்சர் எஸ்.ஜெகத்ரட்சகன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் உச்ச நீதிமன்ற நீதியரசர் வெ.இராமசுப்பிரமணியன் தொடக்கவுரையாற்றினார்.

இவ்விழாவில் ஸ்ரீ பெரும்புதூர் ஸ்ரீமத் பரமஹம்ஸ ஸ்ரீ அப்பன் பரகால ராமானுஜ எம்பார் ஜீயர் சுவாமிகள் இத்தமிழறிஞர் மூவர்க்கும் விருது வழங்கி ஆசியுரை செய்தார்.

தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக்கழக முன்னார் துணைவேந்தர் பத்மஸ்ரீ ஔவை நடராஜன், தமிழ் வளர்ச்சித் துறை முன்னாள் இயக்குநர் முனைவர் நிலம்பொலி செல்லப்பன், நம்நாட்டின் கம்பவாரிதி இ.ஜெயராஜ் ஆகிய மூவர்க்குமே மேற்படி விருது வழங்கப்பட்டது.

விருதுக்கேடயமும் இந்தியப் பணம் ரூபா ஐம்பதாயிரம் பொற்கிழியும் பொன்னாடையும் வழங்கி மேற்படி அறிஞர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

மேற்படி விழாவில் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பலம் அடிகளார், வேதவித்தகர் வேளுக்குடி கிருஷ்ணன் சுவாமிகள், திருக்கோஷ்டியூர் மாதவன் சுவாமிகள் போன்ற அறிஞர்கள் விருது பெற்றோர்க்கு ஆசி வழங்கினர்.

கம்பவாரிதிக்கு தமிழ்நாடு அரசு 2017 ஆம் ஆண்டு "கம்பர்விருதையும்", திருவாவடுதுறை ஆதீனம் 2015 ஆம் ஆண்டு "சிவஞான கலாநிதி விருதையும்", தருமபுர ஆதீனம் 2017 ஆம் ஆண்டு "சித்தாந்த கலாநிதி விருதையும்" வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 4<br>கி.பா: 90 செவ் 8 இல்<br>உயரம்: 5' 9"<br>தகைமை/தொழில்:A/L, பிரான்ஸ்<br>எதிர்பார்ப்பு: A/L படித்த பெண்<br>தொ.இ: B/9071 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 4<br>கி.பா: 55 செவ் 7 இல் உயரம்: 5'<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார்,சொந்த தொழில், விவாகரத்தும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/1849 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 2<br>கி.பா: 64 செவ் 8 இல்<br>உயரம்: 5' 6"<br>தகைமை/தொழில்:A/L,கல்வியியற் கல்லூரி, ஆசிரியர், அரச தொழில்<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ: B/9076 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 1<br>கி.பா: 16 1/2<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BA, ஆசிரியர், அரச தொழில்<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ: G/1861 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 2<br>உயரம்: 5' 9"<br>தகைமை/தொழில்: B.sc, I.T Consultant, தனியார்,UK P.R இல்லை<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: B/9077 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 2<br>கி.பா: 57 1/4 செவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/1870 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BA,தனியார்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு Canada PR<br>தொ.இ: B/9079 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 06 செவ் 8 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BBA,MCA ஆசிரியர் தனியார்<br>எதிர்பார்ப்பு: அரச,தனியார் தொழில்<br>தொ.இ: G/1873 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


## 1000 ரூபா வழங்க முடியாது

# தோட்டத் தொழிலாளர்களுக்கு 600 ரூபாவே வழங்க முடியும்

## அமைச்சர் நவீன் திட்டவட்டம்



(கொழும்பு)

தோட்டத்தொழிலாளர் சம்பள பிரச்சினை நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. எனினும் தோட்டத்தொழிலாளர்களுக்கு 1000 ரூபா அடிப்படை சம்பளத்தை வழங்க முடியாது, 600 ரூபா அடிப்படை சம்பளமே வழங்க முடியும் என பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரம் தொடர்பில் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நேற்று முன்தினம் மாலை பாராளுமன்றத்தில் கொண்டு வந்த சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் அமைச்சராக பொறுப்பேற்றுக்கொண்ட பின்னர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமானுடன் பேசி தொழிலாளர்களுக்கு சாதாரண தீர்வை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளேன்.

இந்தப் பிரச்சினையில் தோட்ட கம்பனிகளுக்கு அழுத்தம் கொடுத்து குறித்த தொழில் துறையை வீழ்ச்சிபாதைக்கு கொண்டுசெல்ல முடியாது. தொழிலாளர்களுக்கும் தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும். இதில் நியாயமான தீர்வை இரண்டு தரப்பினருக்கும் ஏற்றால் போல் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும்.

தோட்டத் தொழிலாளர் பிரச்சினைகள் உக்கிரம் அடைந்த போதிலும் அப்போது நாட்டில் ஏற்பட்டிருந்த அரசியல் நெருக்கடியின் காரணமாக இந்தப் பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்க முடியாது போனது. எனினும் அரசியல் நெருக்கடி முடிவுக்கு வந்தாலும் கூட தோட்டத் தொழிலாளர் பிரச்சினைக்கு துரித கதியில், தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டியுள்ளது.

நானும், ஜனாதிபதியும், பிரதமரும் இந்தப் பிரச்சினையை தீர்ப்பதில் உறுதியாக உள்ளோம்.

1000 ரூபா அடிப்படை சம்பளத்தை பெற்றுக்கொள்ள முடியாது. தொழிற்சங்கவாதிகளுக்கு இதனை வெளிப்படையாக கூற முடியாவிட்டாலும் இதுதான் உண்மை. இம்முறை 17 வீதம் சம்பளத்தை அதிகரிக்கவுள்ளோம்.

அடிப்படைச் சம்பளமாக 600 ரூபாவுடன் ஏனைய கொடுப்பனவுகள் அடங்கலாக 940 ரூபாவை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். கம்பனிகளுக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுக்கப் போனால் பெருந்தோட்டத்துறை வீழ்ச்சியடையும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சுரக்ஷா காப்புறுதியின் நன்மைகள் அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது சுரக்ஷா காப்புறுதியின் நிதி மற்றும் நன்மைகளை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு இந்த வருடத்தில் அதிகரிக்க எதிர்பார்த்துள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

45 இலட்சம் பாடசாலை மாணவர்களுக்கு இந்த காப்புறுதி வழங்கப்பட்டுள்ளதாக அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

அவசர நோய் விபத்து மற்றும் உபாதைகளின் போது துரித சுகாதார சேவைக்காக இது பயன்படுத்தப்படுகிறது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

141


Samuel Newell Daniel Poor

> மக்கள் மீண்டும் சைவத்தைத் தழுவினர் என்பது அவர்கள் தமது பாரம்பரிய நம்பிக்கைகளில் உண்மையான பற்று வைத்திருந்தார்கள் என்பதைக் காட்டுகின்றது. இன்னுமோர் கிறிஸ்தவ அதிகாரத்துக்கு அவர்கள் உட்பட வேண்டியிருந்தமையினாலேயே இந்நிலை உருவாகியிருந்தது. டச்சுக்காரர் காலத்தில் உண்மையில் நிகழ்ந்தது மக்கள் கிறிஸ்தவத்தைக் கட்டாயமாகத் தழுவ வேண்டுமென்ற நிலை ஏற்பட்டதனாலேயே அவர்கள் வெளிப்படையில் மதம் மாறினர்

## பிரித்தானியரின் ஆரம்ப ஆட்சிக்காலமும் தமிழரும் (கி.பி. 1796-கி.பி. 1850)

வெவ்வேறு மிஷனரிமார் குடும்பங்கள் கைக்கொண்ட சுதந்திரமான தொடர்புகளும் குறிப்பாக மிஷனைச் சேர்ந்த பெண்மணிகள் விசேடமாக நடத்தப்பட்டதையும் இந்த மக்கள் தமது ஒழுக்கம், நடத்தை என்பவற்றுடன் ஒப்பிட்டு மிஷனரிமாரின் நடத்தையைத் தரக்குறைவாகவே பார்த்தனர்.

ஆயினும் இவர்கள் மிஷனரிமாருடன் நெருங்கிப் பழகி அவர்களுடைய இரக்கத்துக்குப் பாத்திரமானபோது இந்த உணர்வுகள் படிப்படியாக மறையலாயின.

சுதேசிப் பெற்றோரிடம் அவர்களது பிள்ளைகளை மிஷனின் வழிகாட்டலில் விடும்படியான யோசனை முன்வைக்கப்பட்டபோது அவர்கள் தம் பிள்ளைகளை மிஷனரிமார் அடிமைகளாக்கப் போகின்றனரோ எனவும் ஆண் பிள்ளைகளைப் படையாட்களாக்கி நாட்டின் உட்பிரதேசங்களுக்கோ அல்லது வெளிநாடுக்கோ அனுப்பப் போகின்றார்களோ எனவும் பயங்கரமாகக் கற்பனை செய்து கொண்டனர்.

பிற நாட்டைச் சேர்ந்தவர்கள், கருணையின் நிமிர்த்தமாக மட்டும் தங்கள் பிள்ளைகளுக்கு உணவு, உடை, கல்வி என்பவற்றை வழங்க முன்வர வேண்டும் என்பதை அவர்களில் ஒருவராலும் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

தமிழர் சந்தேகத்துடன் மிஷனரிமாரைப் பார்த்தனர் என்பதை இந்த அறிக்கை காட்டுகின்றது. இச்சந்தேகமே பிரித்தானியரின் ஆரம்ப ஆட்சிக் காலத்தில் மூன்று தசாப்தங்களுக்கு கிறிஸ்தவத்திற்கு மதம் மாற்றும் நடவடிக்கை பெரும்பாலும் வெற்றியளிக்காததற்குக் காரணமென மிஷனரிமார் கருதினர்.

அதே அறிக்கையில், புறமதங்களைக் கைக்கொண்டதனால் திருச்சபையில் இருந்து கிட்டத்தட்ட 100 அங்கத்தவர்கள் வெளியேற்றப்பட்டனர் எனக் கூறுவதுடன் எஞ்சியவர்களில் எத்தனை பேர் உண்மைக் கிறிஸ்தவர்களாக இருந்தனர் என்பது கடவுளுக்குத் தான் தெரியும் என்றும் கூறுகின்றது.

தமிழர் தொடர்ந்தும் தமது பாரம்பரிய நம்பிக்கைகளை அனுஷ்டித்தனர் என்பதற்கு மேலே காட்டப்பட்ட அறிக்கைப் பகுதியை விட இவ்விரு சிறு கூற்றுகள் அதிகமான வற்றை எமக்குத் தெரிவிக்கின்றன.

பிரித்தானியர் டச்சுக்காரரை வெளியேற்றிப் பதினைந்து வருடங்களுள் புரட்டஸ்தாந்தினர் எனக் கருதப்பட்ட பலர் மறுபடியும் சைவத்தை தழுவ ஆரம்பித்தனர் என்பது மேற்படி உண்மைக்குச் சான்றாகும்.

தம்மைப் புரட்டஸ்தாந்துக் கிறிஸ்தவர்கள் எனச் சொல்லிக் கொண்டவர்கள் உண்மையிலேயே கிறிஸ்தவ விசுவாசம் கொண்டவர்களாக்வோ கிறிஸ்தவத்தை உணர்வுபூர்வமாகத் தழுவியவர்களாகவோ இருந்திருப்பின் இவர்களது மதமாற்றம் விளக்கமளிக்க முடியாதிருந்திருக்கும்.

மக்கள் மீண்டும் சைவத்தைத் தழுவினர் என்பது அவர்கள் தமது பாரம்பரிய நம்பிக்கைகளில் உண்மையான பற்று வைத்திருந்தார்கள் என்பதைக் காட்டுகின்றது. இன்னுமோர் கிறிஸ்தவ அதிகாரத்துக்கு அவர்கள் உட்பட வேண்டியிருந்தமையினாலேயே இந்நிலை உருவாகியிருந்தது.

டச்சுக்காரர் காலத்தில் உண்மையில் நிகழ்ந்தது மக்கள் கிறிஸ்தவத்தைக் கட்டாயமாகத் தழுவ வேண்டுமென்ற நிலை ஏற்பட்டதனாலேயே அவர்கள் வெளிப்படையில் மதம் மாறினர்.

ஆனால் அவர்கள் தமது பிரத்தியேக வாழ்வில் தமது பாரம்பரிய நம்பிக்கைகளைக் கைவிடாது சைவ நியமங்களைத் தொடர்ந்தும் அனுசரிக்கலாயினர்.

வரலாற்றாசிரியர் அரசரட்ணம் சொல்கின்றார்: சிங்களவர், தமிழர் இரு பகுதியினரிலுமே கிறிஸ்தவ மயப்படுத்தப்பட்ட ஆளும் வர்க்கம், இரட்டை வாழ்க்கை வாழ்ந்தனர் என்பதற்கு எல்லாச் சான்றுகளும் உண்டுபோல் தோன்றுகின்றது.

ஒருபுறத்தில் இவர்கள் நிறுவனமயப்படுத்தப்பட்ட சீர்திருந்திய திருச்சபையில் அங்கத்தவர்களாகவிருந்து அதன் செயற்பாடுகளில் பங்குபற்றி முக்கியஸ்தர் எவராவது ஆலயத்துக்கு' வருகையில் அங்கு பிரசன்னமாயிருந்து தங்கள் பிள்ளைகளுக்கு ஞானஸ்தானம் கொடுத்து அவர்களைத் திருச்சபைப் பாடசாலைகளுக்கு அனுப்பி அவர்களுக்கு ஆலயத்திலேயே திருமணமும் செய்து வைத்தனர்.

இந்தவகையில் பதவிகளைப் பெறுவதற்கான அவர்களது முன்னுரிமை உறுதிப்படுத்தப்பட்டது. அதேசமயம் பாரம்பரியக் கொண்டாட்டங்களை விட்டுச் சடங்குகள் போலக் கைக்கொண்டு ஒரு பிரத்தியேக வாழ்வையும் தொடர்ந்தனர். அடக்கமாகக் கோவிலுக்குச் சென்று அவர்கள் வழிபடுவது அதிகரிக்கலாயிற்று.

மேலும் சாமுவேல் நியூவெல் (Samuel Newell) என்ற அமெரிக்கன் மிஷனரி தமிழர் மத்தியிலான கிறிஸ்தவம் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார். 'புரட்டஸ்தாந்துக் கிறிஸ்தவரைக் கொண்ட ஒவ்வொரு சபைதான் உள்ளது.

அதுவும் யாழ்ப்பாண நகரில் தான் உள்ளது. இவர்களையும் பிரதானமாக றோமன் கத்தோலிக்கராயிருக்கும் ஒரு சில ஆயிரம் கத்தோலிக்கர்களையும் விட தற்போதுள்ள சந்ததியினர் யாவரும் விக்கிரக ஆராதனை செய்பவர்களே.

அமெரிக்கன் சிலோன் மிஷனைச் சேர்ந்த இன்னொருவரான டானியல் புவர் (Daniel Poor) பின்வருமாறு கூறியுள்ளார்.

பல்லாண்டுகளாக மக்களை அழுத்தி அவர்களின் ஆத்மாக்களை உலரச் செய்ததொரு வெளி 'அழுத்தம் பிரித்தானியரின் ஆட்சி வந்ததும் அகன்றபோது தாம் தமது இனிமையான விக்கிரக ஆராதனையை மீண்டும் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டதை அவர்களால் நம்பமுடியவில்லை.

(தொடரும்)

### சுமந்திரனின் கணக்கு பிழைத்துவிட்டது

# புதிய அரசியலமைப்புக்கு போதுமான ஆதரவில்லை

## கம்மன்பில சுட்டிக்காட்டு

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து, அதற்கான ஆதரவைப் பெற்றுக்கொள்ள போதுமான உறுப்பினர்கள் ஆதரவு இல்லை என பிவித்துரு ஹெல உறுமய கட்சித் தலைவர் உதய கம்மன்பில எம்.பி. தெரிவித்துள்ளார். திட்டமிடப்பட்டுள்ள புதிய அரசியலமைப்பை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற 24 உறுப்பினர்கள் குறைவாகவுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



நேற்றுமுன் தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கட்சி மாறிய பின்னர் தற்போது ஐக்கிய தேசிய கட்சிக்கு 101 உறுப்பினர்களே உள்ளனர். ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்கள் 6 பேரை சேர்த்தால் 107 பேர் மாத்திரமே உள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் 14 பேரும், மக்கள் விடுதலை முன்னணியில் 6 பேர் உள்ளனர். அவர்களைச் சேர்த்தால் 127 பேராகும்.

சபாநாயகரால் வாக்களிக்க முடியாது என்பதால் நாட்டைப் பிரிக்கும் அரசியலமைப்பிற்கு வாக்களிக்க 126 பேர் மாத்திரமே உள்ளனர்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருந் தால் மாத்திரமே சமஷ்டி அரசியலமைப்பைச் சமர்ப்பிக்க முடியும்.

அதற்கு நாடாளுமன்றத்தில் 150 உறுப்பினர்களின் ஆதரவு தேவை.

அதற்கமைய சமகால அரசாங்கத்திற்கு மேலும் 24 உறுப்பினர்களின் ஆதரவு அவசியமாகவுள்ளது. இவ்வாறான நிலை யில் 21 சுதந்திரக் கட்சி உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்று அரசியலமைப்பு சமர்ப்பிக்கப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனால் எவ்வாறு கூற முடியும்?

சுமந்திரனின் கணக்கு தற்போது பிழைத்துள்ளது. 21 அல்ல 24 பேரின் ஆதரவு இன்றி அரசியலமைப்பை சமர்ப்பிக்க முடியாது.

இந்த அரசியலமைப்பை சமர்ப்பிக்க ஒரு போதும் இடமளிக்க மாட்டோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஆனந்த தேரர் குற்றச்சாட்டு திணைக்களம் நிராகரிப்பு



(கொழும்பு)

வனவள பாதுகாப்பு மற்றும் வனவிலங்கு திணைக்களமும் இணைந்து உரிய ஆய்வுகள் இன்றி பாரிய சுற்றுலா அபிவிருத்தி வேலைத்திட்டத்தை திட்டமிட்டமை காரணமாக சிங்கராஜவனம் மற்றும் கன்னெலிய உள்ளிட்ட மேலும் பல வனங்களில் பெரும் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்பட்டு வருவதாக பாஹியங்கல ஆனந்த சாகர தேரர் குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடக சந்திப்பொன்றில் வைத்து அவர் இதனைத் தெரிவித்தார்.

எனினும் வனவள பாதுகாப்பு திணைக்களம் ஊடகங்களுக்கு அறிக்கையொன்றை வெளியிட்டு குறித்த குற்றச்சாட்டை நிராகரித்துள்ளது.

குறித்த வீதியின் மறுசீரமைப்பின் போது 10 அடி அகலமான வீதியில் மீண்டும் புதுப்பித்தல் நடவடிக்கை மாத்திரமே இடம் பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் சுற்றுச்சூழலுக்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்படவில்லை என அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது. (இ-7)

# அறிக்கை வெளியிட்டமைக்கு எதிராக வேலைநிறுத்தத்தில் ஈடுபட வேண்டும்

(கொழும்பு)

சம்பள முரண்பாடுகள் தொடர்பில் விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் வெறும் அறிக்கைக்கு மாத்திரம் கட்டுப்பட்டுள்ளதாக தேசிய தொழிற்சங்க முன்னணி தெரிவித்துள்ளது.

குறித்த அறிக்கையை வெளியிட்டமைக்கு எதிராக வேலைநிறுத்தத்தில் ஈடுபட வேண்டும் எனவும் தேசிய தொழிற்சங்க முன்ன ணியின் தலைவர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேசிய தொழிற்சங்க முன்னணி கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1611


### குயிலி

கை நழுவ விடாதீர்கள்
வாய்ப்பு கண்ணாடி போன்றது



### ஐஸ்வர்யா

முள்ளின் பெருமையைப் பாருங்கள்
தன்னைக் காலால் மிதித்தவரையும்
குனிந்து கையால் எடுக்க வைக்கின்றது



### கயல்விழி

அதிகமாக கட்டுப்படுத்தப்படும் உணர்வுகள்
அதிகமாக வெளிப்படும்! அதிகமாக
மறுக்கப்படும் உணர்வுகள் அதிகமாக வளரும்



### கண்மணி

தோல்வியைப் பார்க்காத வெற்றி
என்றும் நிலைக்காது



### பார்வதி

வாழ்க்கையில் எதுவும் சொல்லிவிட்டு
வருவதில்லை... ஆனால் வந்த எதுவும் எதையும்
சொல்லிக் கொடுக்காமல் விடுவதில்லை



### ராஜினி

கடும் கோபத்திலும் அடுத்தவரைக்
காயப்படுத்தக்கூடாது என்ற எண்ணம்
இருந்தால் நீங்களும் கடவுள் தான்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பாதாளக்குழுவை கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை

## ஐ.தே.க. அரசு மீது நாமல் குற்றச்சாட்டு



(கொழும்பு)

**பாதாளக்குழுவினரைக் கட்டுப்படுத்த ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசாங்கம் எந்தவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.**

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இராஜதந்திர சிறப்புரிமைகள் சட்டத்தின் கீழான கட்டளைகள் மீதான விவாதத்தில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குற்றம் சாட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "இன்று அரசாங்கத்துக்கு வெளிநாட்டுக் கொள்கையென்ற ஒன்று இருக்கிறதா எனும் சந்தேகம் எழுந்துள்ளது. இன்று யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அதிகமாக பேசுகிறார்கள்.

ஆனால், இவர்கள் தான் கடந்த காலங்களில், அமெரிக்காவுடன் இணைந்து இலங்கை இராணுவத்துக்கு எதிராக கூட்டுப் பிரேரணையை நிறைவேற்றியிருந்தார்கள். இலங்கையில் யுத்தக்குற்றம் இடம்பெற்றதாக ஐ.நாவில் கூறினார்கள்.

இப்போது இராணுவத்தை சர்வதேசத்திடமிருந்து காப்பாற்றிவிட்டதாக கூறிக்கொண்டிருக்கிறார்கள். இன்று நாட்டின் வெளிநாட்டுக் கொள்கை முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது. அமைச்சர்கள் கூட தனிப்பட்ட தேவைக்கு இணங்கவே நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

மேலும், பாதாளக்குழுவினரின் நடமாட்டமும் கடந்த நான்கு வருடங்களாக அதிகரித்துள்ளது. ஜனாதிபதியை கொலை செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட சதித்திட்டம் தொடர்பில் கூட, அடுத்தக் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. இது தான் இலங்கையின் இன்றைய நிலைமையாகும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## வெளிநாட்டு பணியாட்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி

(கொழும்பு)

2017 ஆம் ஆண்டுக்கு நிகராக 2018 ஆம் ஆண்டில், வெளிநாடு சென்ற பணியாட்களின் எண்ணிக்கை 0.24 சதவீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளதாக, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள் ளது.


2018 ஆம் ஆண்டில் இரண்டு இலட்சத்து 11,502 பேர் பணியாட்களாக வெளிநாடு சென்றுள்ளதுடன், இவர்களில் ஒரு இலட்சத்து 44 ஆயிரத்து 531பேர் ஆண்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த எண்ணிக்கையானது வெளிநாடு சென்ற மொத்த பணியாளர்களின் 68.3 சதவீதமாகும். 2017 ஆம் ஆண்டில் ஒரு இலட்சத்து 43 ஆயிரத்து 673 ஆண்கள் பணியாட்களாக சென்றுள்ளதுடன், 2018 ஆம்ஆண்டுடன் ஒப்பிடுகையில் 0.3 சதவீத வளர்ச்சியை இது காட்டுகிறது.

இதேவேளை, 2017 ஆம் ஆண்டு பணிப்பெண் களாக 68,319 பேர் வெளிநாடு சென்றுள்ளதுடன், 2018 ஆம் ஆண்டில் 0.3 சதவீதமாக இது வீழ்ச்சி கண்டுள்ளது.

அத்துடன் ஜப்பான் நாட்டுக்கு தொழில்வாய்ப்பு பெற்றுச் சென்றோரின் எண்ணிக்கை, 2017 ஆம் ஆண்டை விட 2018 ஆம் ஆண்டில் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## "மனைவியையும் பிள்ளைகளையும் கீழே வீசிவிட்டே நானும் குதித்தேன்"




(கண்டி)

கட்டடத்தில் ஏற்பட்ட பாரிய புகை மண்டலத்தை கண் டதும் எப்படியாவது எனது மூன்று பிள்ளைகளையும் மனைவியையும் காப்பாற்ற வேண்டும் என்ற எண் ணமே எனக்குத் தோன்றியது. பிள்ளைகளை ஜன்னல் வழியே வீசும்போது என்ன நடக்கும் என்பது பற்றி சிந்திக்கவில்லை.

காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் மட்டும் தான் இரு ந்தது. கீழே வந்து பார்த்த போது அவர்கள் உயிருடன் இருப்பதை கண்டு எனது உயிர் திரும்பி ஆனந்தமடைந்தேன் என கண்டி, யட்டிநுவர நக ரில் ஆறு மாடிக் கட்டடத்தில் நேற்று முன்தினம் காலை திடீரென ஏற்பட்ட தீயிலிரு ந்து தனது குடும்பத்துடன் தப்பிய இராமராஜ், கண்டி வைத்திய சாலையில் சிகிச்சை பெறும் நிலையில் தான் முகம்கொடுத்த அந்த சூழ்நிலையை விளக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## நீதிமன்ற வளாகத்தில் தங்கச் சங்கிலி அறுப்பு



(ஹற்றன் )

ஹற்றன் மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் பெண் ஒருவரின் கழுத்தில் இருந்து தங்க சங்கிலியை அறுத்துச் சென்ற நபரை பொலிஸாரும் பிரதேசவாசிகளும் இணைந்து மடக்கிப் பிடித்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை 6 மணி அளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹற்றன் மாவட்ட நீதிமன்றத்தை அண்மித்த பகுதியில் நடந்து சென்று கொண்டிருந்த பெண் ஒருவரின் கழுத்தில் இருந்த ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்கச்சங்கிலியையே இவ்வாறு அறுத்துச் சென்றுள்ள நிலையில், பிரதேசவாசிகளும் ஹற்றன் பொலிஸாரும் சுற்றிவளைத்து மடக்கிப்பிடித்து தங்கச் சங்கிலியை மீட்டுள்ளனர். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 120 | 140 | 140 |
| உருளைக்கிழங்கு | 100 | 60 | 60 | 80 |
| பச்சைமிளகாய் | 300 | 80 | 120 | 300 |
| தக்காளி | 150 | 100 | 70 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 60 | 30 | 50 |
| கோவா | 100 | 100 | 70 | 120 |
| கரட் | 120 | 100 | 110 | 120 |
| பூசணி | 50 | 40 | 30 | 60 |
| புடோல் | 80 | 80 | 70 | 80 |
| வாழைக்காய் | 60 | 70 | 55 | 100 |
| சின்ன வெங்காயம் | 120 | 150 | 120 | 150 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 75 | 80 |
| பாகற்காய் | 200 | 200 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 90 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 40 | 80 |
| பயற்றங்காய் | 150 | 140 | 120 | 120 |
| லீக்ஸ் | 140 | 140 | 110 | 120 |
| பீற்றூட் | 120 | 140 | 40 | 150 |
| கறிமிளகாய் | 200 | 200 | 200 | 240 |
| முருங்கைக்காய் | — | 800 | — | 600 |
| போஞ்சி | 120 | 130 | 100 | 120 |
| கத்தரிதம்புள்ள | 120 | 140 | 100 | 120 |
| கீரை-1பிடி | 40 | 60 | 40 | 50 |
| தேசிக்காய் | 150 | 150 | 140 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 35 | 20-40 |
| இராசவள்ளி | 130 | 150 | 150 | 150 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 210 | 300 |
| முள்ளங்கி | 40 | 80 | 30 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 20 | 50 |
| வல்லாரை | 20 | 30 | 15 | 30 |
| ஈரப்பலா | 50 | 60 | 110 | 60 |

# செய்தித்துளிகள்

## சிங்கராஜவனம் இரண்டாகப் பிரியும்

(கொழும்பு)

சிங்கராஜ தேசிய வனத்திற்கான லங்காகம - கெகுனஎல்ல வீதியை அபிவிருத்தி செய்யும் பாணியில் பாரியளவில் காடழிப்பு இடம் பெற்றுக் கொண்டிருப்பதாக சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை ஆய்வு மையத்தின் தேசிய அமைப்பாளர் வேகடவல ராகுல தேரர் தெரிவித்தார்.

இந்த வீதியை அபிவிருத்தி செய்வதன் ஊடாக சிங்கராஜவனம் இரண்டாக பிரியும் அபாயம் நிலவுவதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## புதையல் அகழ்வு; அறுவர் கைது

(குருநாகல்)

குருநாகல், மொரகனே பகுதியிலுள்ள வீடொன்றுக்கு அருகில் புதையல் தேடும் நோக்கில் அகழ்வுப் பணியில் ஈடுபட்ட 6 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சம்பவத்தில் கம்பஹா, கடஹெர மற்றும் கட்டுபொத்த ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 25-73 வயதுக்கு இடைப்பட்டவர்களே நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர். இதன் போது சந்தேகநபரிடமிருந்து அகழ்வுப் பணிக்கு பயன்படுத்திய உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (இ-7)

### குடும்பத்தகராறு காரணமாக

## தம்பி துப்பாக்கிப் பிரயோகம் அண்ணன் வைத்தியசாலையில்!

(திருகோணமலை)

திருகோணமலையில் குடும்பத் தகராறு காரணமாக தம்பி மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த அண்ணன் நேற்று முன்தினம் இரவு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்தவர் தோப்பூர், அல்லை நகர் பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான கே. எம். இக்பால் (வயது-40 ) எனத் தெரியவருகின்றது.

குடும்பத் தகராறு காரணமாக இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தை நடத்திய சந்தேகநபரை பொலிஸார் கைது செய்ய சென்ற போது தப்பியோடி உள்ளார். அவரை கைது செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## அச்சுறுத்தி கப்பம் பெற முயற்சித்த இருவர் கைது

(கொழும்பு)

தொலைபேசி ஊடாக அச்சுறுத்தல் விடுத்து 35 இலட்சம் ரூபா பணத்தை கப்பமாக பெற முயற்சித்த இரண்டு பேர் மிரிஹானை விசேட குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹோமாகம பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவரை அச்சுறுத்தி கப்பம் பெற முயற்சித்தமை தொடர்பில் மேல் மாகாண தெற்கு பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு தகவல் கிடைத்துள்ளது. அதன்படி மிரிஹானை விசேட குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகளால் விசாரணை செய்யப்பட்டு நேற்று முன்தினம் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-7)

## 105 வீடுகள் இன்று கையளிப்பு

(ஹற்றன்)

புதிய கிராமங்கள் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு சமூக அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரத்தின் பிறந்த நாளை முன்னிட்டு போகாவத்தை தோட்டத்தில் 105 வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு இன்று 10ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் இடம்பெறும். (இ-7)

## துப்பாக்கியுடன் ஒருவர் கைது


(கண்டி)

அனுமதிப்பத்திரமின்றி துப்பாக்கி ஒன்றை கைவசம் வைத்திருந்த நபர் ஒருவர், கண்டி - கடுகஸ்தொட பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சந்தேக நபரிடம் இருந்து 05 துப்பாகி ர்வைகள் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கடுகஸ்தொட பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)




# அவரவர் விதி



இமயமலை உச்சியில் புத்த மடம் ஒன்று இருந்தது. அங்கே எப்போதும் பனி படர்ந்து இருக்கும். அந்த மடத்திற்குச் செல்வதே கடின முயற்சியாக விளங்கியது. புத்த துறவிகள் இருவர் அந்த மடத்திற்குச்செல்வதற்காக மலை ஏறிக் கொண்டிருந்தனர்.

அவர்களில் ஒருவர், "காற்று வேகமாக வீசுகிறது. பனியும் மிகுதியாகக் கொட்டுகிறது. நாம் வேகமாக நடந்தால்தான் மடத்தை அடைய முடியும். இல்லையேல் வழியிலேயே சாக வேண்டியதுதான்!" என்றார்.

இருவரும் வேகமாக நடக்கத் தொடங்கினர். அவர்கள் சென்ற வழியில் முதியவர் ஒருவர் விழுந்து கிடந்தார். வலி தாங்க முடியாமல் அவர் முனகிக் கொண்டிருந்தார். இருவரும் அருகே சென்று அவரைப் பார்த்தனர்.

"மலைப் பாதையில் உருண்டு விழுந்ததால் இவர் கால் ஒன்று உடைந்துவிட்டது. இனி இவரால் நடக்க முடியாது. தாமதம் செய்தால் நம்மாலும் மடத்தை அடைய முடியாது. உடனே நாம் இங்கிருந்து புறப்படுவோம்!" என்றார் அவர்களில் ஒருவர்.

"இந்த நிலையில் இவரை எப்படி இங்கே விட்டுச் செல்வது? நாம் இருவரும் இவரை எப்படியாவது மடத்திற்குத் தூக்கிச் செல்வோம். அங்கே உள்ளவர்கள் இவரைப் பார்த்துக் கொள்வர்!" என்றார் இன்னொருவர்.

"நாமே உயிருடன் மடத்தை அடைவோமா என்பது தெரியவில்லை. அவரவர் வினையை அவரவரே அனுபவிக்க வேண்டும்.

இங்கேயே சாக வேண்டும் என்பது இவர் விதி. நீர் வந்தால் வாரும் நான் போகிறேன்!" என்று சொன்னார் அவர். அடுத்தவரின் பதிலுக்குக் காத்திராமல் அங்கிருந்து வேகமாக நடக்கத் தொடங்கினார்.

கால் உடைந்து கிடந்தவரை அப்படியே விட்டுச் செல்ல இன்னொருவருக்கு உள்ளம் வரவில்லை. தன் உயிர் போனால் போகட்டும் என்று அவரைத் தோளில் தூக்கிக் கொண்டார். மலைப்பாதையில் ஏறத் தொடங்கினார்.

மிகுந்த எடையைத் தூக்கிச் சென்றதால் அந்தக் கடுங்குளிரிலும் அவருக்கு வியர்த்தது. துன்பத்தைப் பொறுத்துக் கொண்டு மலை உச்சியை நெருங்கினார்.

அவருக்கு முன்னே சென்ற துறவி அங்கே வழியில் இறந்து கிடந்தார். குளிர் தாங்காமல் அந்தத் துறவி விறைத்துப் போய் இறந்து விட்டார் என்பது அவருக்குத் தெரிந்தது.

அவரைப் போல இந்தக் குளிரில், தான் ஏன் இறக்கவில்லை என்று சிந்தித்தார் அவர். அந்த முதியவரைத் தூக்கி வந்ததால் அதிகமாக மூச்சு வாங்கியது. அதனால் உடல் எங்கும் கூடுதலாக இரத்தம் பாய்ந்து வெப்பம் ஏற்பட்டது. அத்துடன் அந்த முதியவரின் உடல் சூட்டால் இருவரது உடலும் சூடு கண்டது. அதனால், கடுமையான குளிர் தன்னைக் கொல்லவில்லை என்பது அவருக்குப் புரிந்தது. பிறருக்கு உதவி செய்வதால் நம்மையே விளையும். அந்த உதவியே தன் உயிரைக் காப்பாற்றியது என்ற உண்மை அவருக்குப் புரிந்தது.

## தெரியுமா உங்களுக்கு?



மழைத்துளிகள் என்றாலே ஒரு வித பரவசம் மனதில் எழுவது இயல்பு. இயற்கை அன்னையின் அந்த சவரில் (shower) குளிக்க விரும்பாத ஜென்மங்களே இருக்க முடியாது எனலாம்.

அந்த மழைத்துளிகள், வளிமண்டலத்திலுள்ள நீராவி வெப்ப நிலைக் குறைவால்... தூசித்துணிக்கைகளில் படிந்து முகிலாக அந்த முகில்கள் மேலும் குளிர்ச்சியடையும் போது நீர்த்துளிகளாகி நிறை அதிகரிப்பின் விளைவாக பூமியை நோக்கி விழுகின்றன.

அவ்வாறு விழும் நீர்த்துளிகள் கோளமாக வெவ்வேறு அளவுகளில் இருப்பதைக் கூர்ந்து அவதானித்தால் மட்டுமே காணலாம். ஏன் அவை அப்படி இருக்கின்றன என்பதை விஞ்ஞானிகளும் ஆராயத் தவறவில்லை.

வளிமண்டலத்திலுள்ள காற்றின் கூறுகள் மழைத் துளிகளின் பூமி நோக்கிய இயக்கத்தை எதிர்ப்பதால் மழைத்துளிகளுக்கும் காற்றுத் துணிக்கைகளுக்கும் மிடையே உராய்வு உருவாகி ஒன்றின் பயணத்தை மற்றையது இடையூறு செய்ய முற்படுவதால் அந்த உராய்வைக் குறைக்கும் நோக்கோடு மழைத் துளிகள் சாத்தியமான சிறிய மேற்பரப்பை உருவாக்கும் வகையில் கோள அமைப்பைப் பெறுவதாகவும் இதற்கு நீரின் மேற்பரப்பு இழுவிசை (Surface tension) உதவுவதாக விஞ்ஞானிகள் கண்டறிந்தனர்.

அப்போ ஏன் மழைத்துளிகள் ஒரு சீராக இன்றி வெவ்வேறு அளவுகளில் இருக்கின்றன என்று கேட்டால் அதற்கு மழைத்துளிகள் விழும் போது ஒன்றை ஒன்று முட்டி மோதி சேர்வதும் பிரிவதும் நிகழ்வதால் அவற்றின் பருமன் மாறுபடுகின்றன என்றும் கூறினர் விஞ்ஞானிகள்.

## கண்ணாடி பற்றிய தகவல்கள்

சுமார் எழுபதாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஆதி மனிதன் கண்ணாடிகளை உபயோகப்படுத்தினான். அந்தக் கண்ணாடிகள். எரிமலைக் குழம்பு காய்ந்து கெட்டியாகும்போது உண்டானவை. இந்தக் கட்டிகளைக் கத்தி செய்வதற்கும் அம்புகள் செய்வதற்கும் பயன்படுத்திக்கொண்டான்.

கண்ணாடிகளை மனிதனே படைக்கும் முறை கி.மு. மூவாயிரம் ஆண்டளவில் மத்திய கிழக்கு நாடுகளில் உண்டாகியிருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். கி.மு. ஆயிரம் ஆண்டுவாக்கில் வெட்ட வெளிகளில் கண்ணாடிக் குழம்புகளை வார்த்து கண்ணாடி செய்யும் முறை எகிப்தியர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. இதன் பிறகு ரோமானியர்கள் கி.பி. முதல் நூற்றாண்டளவில் கண்ணாடிகளாலான சிறிய பொருட்களை உருவாக்கிக் கொண்டார்கள்.

பன்னிரண்டாம் நூற்றாண்டு வரை இஸ்லாமிய நகரங்களான பக்தாத் மற்றும் கெய்ரோவில் கண்ணாடி செய்யும் கலை வளர்ந்தது. இதனால் தான் இந்தக் காலகட்ட கண்ணாடிகளை இஸ்லாமியக் கண்ணாடிகள் என்று அழைத்தார்கள். பன்னிரண்டிலிருந்து பதினாறாம் நூற்றாண்டுவரை வெனிஸ் நகரில் இந்தக் கலை உச்சக்கட்டம் தொட்டது. பாதரசத்தைப் பயன்படுத்தி முகம் பார்க்கும் கண்ணாடிகளை செயற்கையாகச் செய்யும் தொழில் நுட்பத்தையும் அவர்கள் அறிந்திருந்தனர். ஆனால், இந்த நுணுக்கங்களை அவர்கள் இரகசியமாக வைத்திருந்தார்கள். ஆனால், பதினேழாம் நூற்றாண்டளவில் இந்த இரகசியம் கசிந்து. ஐரோப்பிய நாடுகள் பலவும் கண்ணாடிகள் செய்தன. 17 முதல் 19 ஆம் நூற்றாண்டு வரை கண்ணாடிகளால் டெலஸ்கோப், தெர்மாமீற்றர், மைக்ரோஸ்கோப் போன்ற பல அறிவியல் தொழில்நுட்பங்கள் வளர்ந்தன.



இதன் தொடர்ச்சியாக பார்வைக் கோளாறுக்கான கண்ணாடிகள் ஜேர்மனியில் கண்டுபிடிக்கப்பட்டன. 1903 ஆம் ஆண்டில் தான் அமெரிக்காவில் ஒரு நிமிடத்தில் ஆயிரக்கணக்கான கண்ணாடிகளை தயாரிக்கும் தானியங்கி இயந்திரம் உருவானது. இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருப்பது கண்ணாடியின் அடிப்படை மூலக்கூறு ஆகும். கொல்கத்தாவில் உள்ள ஒரு ஆய்வுக் கூடத்திலிருந்து 1959 இல் இங்கு கொண்டு வரப்பட்டது என்றார் அவர். கண்ணாடியில் உள்ள சுத்தத் தன்மையை வைத்தே அது எந்தக் காலத்தில் செய்யப்பட்டது என்பதைக் கண்டுபிடிக்கலாம். நம் உருவங்களைப் பிரதிபலிக்கும் கண்ணாடிகள், அந்தந்த காலகட்டத்தின் தொழில்நுட்ப வளர்ச்சியையும் பிரதிபலிப்பது ஒரு அழகான ஆச்சரியம்தான்.

நல்ல காரியங்களைச் செய்ய ஒருபோதும் பயப்படாதீர்கள்! தாமதமின்றி உடனே நல்ல காரியங்களைச் செய்யுங்கள்! ~ *நெப்போலியன் ஹில்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சென்று சந்தியுங்கள்

வடக்கு மாகாணத்தின் ஆளுநராக தமிழர் ஒருவர் நியமிக்கப்பட்டு அவர் நேற்றைய தினம் தனது கடமையை ஆரம்பித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தின் ஆளுநராக தமிழர் ஒருவரை நியமித்தமை வரவேற்கத்தக்க விடயமாக இருந்தபோதிலும் தமிழர் என்பதால் ஆளுநர் பணியில் பாரிய சவால்களை அவர் எதிர்கொள்ள நேரிடும் என்பது பற்றி நேற்றைய தினம் இவ்விடத்தில் பிரஸ்தாபித்திருந்தோம்.

எனினும் ஆளுநராகப் பதவியேற்றுள்ள கலாநிதி சுரேன் ராகவன் அவர்களின் சேவையை மதிப்பீடு செய்கின்றவர்கள் பொதுமக்கள் என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டும்.

பொதுவில் ஆளுநர் பதவி ஒரு கௌரவத்தோடு நடமாடுகின்ற பதவியாகவே இனங்காணப்பட்டுள்ளது.

இந்நிலைமையானது பொதும்க்களுக்கும் ஆளுநருக்குமிடையில் கணிசமான இடைவெளியை ஏற்படுத்தியிருந்ததை ஏற்றுத்தானாக வேண்டும்.

தவிர, மொழித் தொடர்பாடலில் இருந்த கடினத்தன்மையும் ஆளுநரையும் தமிழ் மக்களையும் இடைவெளிப்படுத்தியதென்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

எனவே இத்தகைய குறைபாடுகள் முதலில் நிவர்த்திக்கப்பட வேண்டும். இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்வதாக இருந்தால், வடக்கு மாகாணத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் நேரில் சென்று பார்வையிடுவதும் அப்பகுதி மக்களைச் சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து அவற்றுக்கு நிவாரணம் தேடுவதும் அவசியமாகும்.

இதனுடன் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் அவலங்கள் சீவனோபாயத்துக்கு அவர்கள் நாளாந்தம் படும் கஷ்டங்கள் என்பவற்றை நேரில் அறியும்போதுதான் விசேட ஏற்பாட்டின் கீழ் அவர்களுக்கான நிவாரணப் பணிகளைச் செய்ய வேண்டும் என்ற நியாயமான சிந்தனை எழுகை பெறும்.

இவற்றுக்கு மேலாக நலன்புரி முகாம்களில் வாழுகின்ற மக்கள், இதுவரை வீட்டுத் திட்டம் கிடைக்காதவர்கள், சொந்த நிலங்களை படையினர் ஆக்கிரமித்திருப்பதனால் விவசாயம் போன்ற முயற்சிகளில் ஈடுபட முடியாத பரிதாபம் போன்ற விடயங்களையும் அறிந்து கொள்வது புதிய ஆளுநரின் பெரும் பொறுப்பாக இருக்கும்.

இவற்றைச் செய்கின்ற அதேநேரம் ஆளுநரின் சேவையில் பங்கு போடவும் தமது கோரிக்கையின் பேரிலேயே சில நடவடிக்கைகளை ஆளுநர் எடுத்ததாகக் கூறி அரசியல் இலாபம் தேடவும் சில அரசியல் கட்சிகள் முனையலாம்.

இத்தகைய அநாகரிகத்தனங்களுக்கு இம்மியும் இடமளிக்காமல், சகல தரப்புக்களையும் சமமாக நடத்தி பொதுமக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கின்றபோது,

ஆளுநரின் இலக்கு மகத்தான வெற்றியை அடைந்து கொள்ளும் என்பது சர்வ நிச்சயம்.

# தமிழ் மக்கள் நிராகரித்த ஒற்றையாட்சியை அரசுடன் இணைந்து கூட்டமைப்பு திணிக்கின்றது

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றச்சாட்டு

தமிழ் மக்கள் பலமுறை நிராகரித்த ஒற்றையாட்சி அடிப்படையிலான தீர்வையே தமிழ் மக்கள் மீது திணிக்கும் நடவடிக்கையை அரசுடன் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மேற்கொண்டு வருவதாக தெரிவித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஒற்றையாட்சியின் அடிப்படையிலான ஒற்றையாட்சித் தீர்வை தமிழ் மக்கள் ஒட்டுமொத்தமாக எதிர்க்க வேண்டுமெனறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பில் யாழ் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் பொறுப்புக்கூறல் மற்றும் அரசியல் தீர்வு வேண்டுமென்பதே கோரிக்கையாக உள்ளது. அதனடிப்படையில் சர்வதேச விசாரணையொன்றை கோரி நிற்கின்றனர்.

அதேபோன்றே தங்களது அபிலாசைகளை தீர்க்கக் கூடிய தீர்வையும் எதிர்பார்க்கின்றனர். ஆனால் தற்போது நடக்கின்ற சம்பவங்கள் அனைத்தும் இதற்கு மாறாகவே காணப்படுகின்றன.

குறிப்பாக பொறுப்புக் கூறல என்ற விடயத்தை எடுதது்க் கொண்டால் சர்வதேச விசாரணையோ அல்லது கலப்பு பொறிமுறையோ தேவையில்லை என்றும் உள்நாட்டு விசாரணையே போதுமானது என்றும் கூறப்படுகின்ற அதேவேளையில் உள்நாட்டு விசாரணை கூட தேவையில்லை என்று கூறுகின்ற நிலைமையும் உள்ளது.

மேலும் அரசியல் தீர்வை எடுத்துக் கொண்டால் தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய வகையில் தங்களைத் தாங்களே ஆளுகின்ற தீர்வை தமிழ் மக்கள் எதிர்பார்ப்பதுடன் அதுவே அவர்களது நீண்ட காலக் கோரிக்கையாக இருக்கின்றது.

மேற்படி இந்த இரு விடயங்களையும் முனனிலைப் படுத்தியே கூட்டமைப்பு மக்களிடம் ஆணையும் கேட்டது. ஆனால் இன்றைக்கு அதற்கு மாறாகவே அவர்களது செயற்பாடுகள் அனைத்தும் அமைந்துள்ளன.

குறிப்பாக அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ் மக்கள் கடந்த மூன்று முறை எதிர்த்த ஒற்றையாட்சி அடிப்படையிலான தீர்வையே தற்போதும் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கின்றனர். கடந்த காலங்களில் இந்த ஒற்றையாட்சித் தீர்வைக் கொண்டு வருகின்றபோது தமிழ் மக்களின பிரதிநிதிகளும் எதிர்க்கின்ற நிலைமையே இருந்தது.

ஆனால் இன்றைக்கு தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொண்டிருக்கின்ற கூட்டமைப்பினர் அதற்கு தமது ஆதரவைத் தெரிவித்து அரசாங்கத்துடன் இணைந்து ஒற்றையாட்சித் தீர்வை தமிழ் மக்களை ஏமாற்றி அவர்கள் மீது திணிக்க முற்படுகின்ற நிலைமையே காணப்படுகின்றது.

ஆகவே இந்த விடயங்களில் மக்கள் மிகவும் அவதானத்துடன் இருக்க வேண்டும். அதர்வது ஒற்றையாட்சியின் அடிப்படையிலான தீர்வையே ஒருமித்த நாடு என்று கூறிக் கொண்டு வர முயற்சிக்கின்றனர்.

ஆகையினால் ஒற்றையாட்சி அடிப்படையிலான தீர்வை ஒட்டுமொத்த தமிழ் மக்களும் எதிர்க்க வேண்டுமென்று நாம் கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்ற பொறுப்புக் கூறல் மற்றும் அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ் மக்களை ஏமாற்றி அரசாங்கம் நினைத்ததைச் செய்வதற்கு கூட்டமைப்பு இணங்கியுள்ளது. இதனால் தமிழ் மக்களுக்கே பல்வேறு வகையிலும் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

இன்றைய நிலைமையில் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்காக அல்லாமல் அரசாங்கத்திற்காகவே அவரகள் சொல்வது போன்று செயற்பட்டு வருகின்றது.

இவ்வாறு தமிழ் மக்களை ஏமாற்றி அவர்களை நடுவீதியில் விட்டிருக்கின்றனர். ஆகவே இதனையெல்லாம் மக்கள் நன்றாக விளங்கிக் கொண்டு செயற்பட வேண்டுமென மேலும் தெரிவித்தார். (ம-9)

## ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பொதுச் 'சேவையின்மாகாண இணைந்த சேவையில் அலுவலகப் பணியாளர் சேவை தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையானது எதிர்வரும் 2019.01.26ஆம் திகதி சனிக்கிழமை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த பரீட்சைக்கு விண்ணப்பித்த தகைமையுடைய பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுளஎன.

எனவே 2019.01.26ஆம் திகதிக்கு முன்னர் அனுமதி அடடைகள் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் "செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல. 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்" எனும் முகவரியுடனோ அல்லது 021 2219939 என்னும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

எவ்வாறாயினும் பரீட்சார்த்திகளுக்குரிய அனுமதி அட்டைகள் இருந்தால் மட்டுமே பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன் என வடமாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அ.சிவபாலசுந்தரன் அறிவித்துள்ளார். (இ)

## வெளிநாட்டு பணத்துக்கான வருமான வரி நீக்கம்

வெளிநாடுகளிலிருந்து வங்கிகளூடாக இலங்கைக்கு அனுப்பப்படும் பணத்திற்கான வருமான வரி நீக்கம செய்யப்பட்டுள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது.

அந்த வகையில், கடந்த 2018ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15ஆம் திகதி அல்லது அதற்கு பின்னர் வணிக வங்கிகளினூடாக இலங்கைக்கு வெளிநாடுகளில் இருநது அனுப்பப்பட்ட பணதிற்கான வருமான வரி விலக்கு அளிக்கப்படுவதாக நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். (ம-3)

## ஆசையைக் கட்டுப்படுத்த...

- வீணான ஆசைகளை மனதில் தூக்கிச் சுமக்காதீர்கள். அளவு கடந்த ஆசை என்பது ஆபத்திற்கு அறிகுறி என்பதை அறிந்திடுங்கள். "தீராத ஆசைகள்" மனதை பாதிக்கும் விபத்து என்று உணர்த்திடுங்கள்.
- ஆசையை நாம் அடக்கி ஆளவில்லை எனில் நம்மை மெல்ல மெல்ல கொல்லும் ஆயுதம் "ஆசை" என்று அறிந்து கொள்ளுங்கள். ஆசை இரண்டு வகை: அடையக்கூடிய ஆசை, அடையாத ஆசை.
- அடையக்கூடிய ஆசையை அன்பினால் வெல்லலாம். அடைய முடியாத ஆசையை தவிர்த் தால் நல்லது. இல்லையேல் நம்மையே அழித்து விடும். ஆசையே துன்பத்திற்கு காரணம். ஆகவே ஆசையை அளவோடு வளர்த்துக் கொண்டு அன்பை மகிழ்வோடு பெருக்கி கொள்ளுங்கள்
- உங்கள் ஆசையை நீங்கள் கட்டுப்படுத்தி வாழலாம்.

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநி யோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை மணிவரை கிளிநொச்சி பிரதேசத்தில திருவையாறு, இரணைமடு, சாந்தபுரம், SFHQ இரணைமடு ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில லக்ஸபானா வீதி, தோணிக்கல, ஆண்டிய புளியங் குளம், புதுக்குளம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில நானாட்டான் பிரதேசம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (9)

## சத்திய தரிசனம்

### எல்லாம் அவன் செயல்



❖ இறைவன் அன்பு வடிவானவன் என்பதால் மனிதர்களுக்கு இடையிலும் உறவு உருவாக வேண்டும். அன்பு தத்துவத்தை உணர்ந்து வாழ்வதே மனிதனின் கடமை.

❖ உனக்கு ஆற்றல் இருக்கலாம். ஆனால், தெய்வத்தின் துணையைக் கடைசி வரையில் நீ கெட்டியாகப் பிடித்துக் கொண்டால் தான் வெற்றி கிடைக்கும்.

❖ பழிப்பவர்களிடம் அன்பு காட்ட வேண்டும். அனைத்து ஜீவன்களிலும் இறைவன் இருக்கிறார். ஜீவ சேவையே தேவ சேவை.

❖ நம்மால் முடியும் என்று நம்பிக்கையில் வாழ்ந்தால், கடவுளின் அருள் கிடைப்பதில்லை. அனைத்தும் நீயே என்று கடவுளிடம் சரணாகதி அடைந்தால் நிச்சயம் உதவுவார்.

❖ இறைவனின் புகழைக் கேட்பது, பாதத்தை வணங்குவது, நமக்கு கிடைக்கும் வெற்றியை அவர் தந்ததாகக் கருதுவது ஆகியவை பக்தி மார்க்கத்துக்கு உரியனவாகக் கருதப்படுகின்றன.

❖ தெய்வத்தின் நாமத்தை நெஞ்சில் இருத்தி, வாயினால் உச்சரித்து பணி செய்வதுடன், தெய்வ சிந்தனையில்இருந்து நழுவாமலிருந்தால் தெய்வ அருள் கிடைக்கும்.

# தேசியத்தில் தடம் பதித்த இந்துக்கள் சம்பியனாகிய யாழ்ப்பாணம் இந்து




யாழ்.இந்துக் கல்லூரி அணி




யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி அணி

மிகவும் அசாத்தியமான முறையில் முதற்சுற்று முதற்கொண்டு ஆடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி, கிண்ணம் வெல்லும் முழுத் தகுதியுடன் இறுதிப்போட்டி வரையில் சென்று, இறுதிப்போட்டியில் எந்தவித தடுமாற்றமுமின்றி தர்மபால அணியை இலகுவாக எதிர்கொண்டு வெற்றிகொண்டு சம்பியனாகியது. யாழ்.மாவட்ட பாடசாலைகள் கூடைப்பந்தாட்ட வரலாற்றில் இது ஒரு மைக்கல்லாகவும் அமைந்துள்ளது.

அதேபோல், கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் தமக்கான சிறப்பாட்டத்தை வெளிப்படுத்தி, கடுமையான போராட்டங்கள் சுவாரஸ்யமான ஆட்டங்கள் என மூன்றாமிடத்தை தனதாக்கியது.

தேசிய மட்டம் 19 வயது பிரிவு பி அணிகளுக்கிடையிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கொழும்பு வெஸ்லிக் கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் கடந்த 4 ஆம் திகதி தொடக்கம் 7 ஆம் திகதி வரையில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இந்தச் சுற்றுப் போட்டியில் முதலாவது ஆட்டத்தில், டீ மசனோல்ட் கல்லூரி அணியை 75:55 என்ற புள்ளிகள் அடிப்படையிலும் இரண்டாவது போட்டியில் கண்டி கிங்ஸ்வூட் கல்லூரி அணியை 64:45 என்ற புள்ளிகள் அடிப்படையிலும் வென்று காலிறுதிக்குத் தகுதி பெற்றது. காலிறுதியில் கண்டி தேஸ்ரன் கல்லூரியை 58:51 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

அரையிறுதியில் லைசியம் சர்வதேசப் பாடசாலை அணியை, 71:52 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றிருந்தது.

இறுதிப்போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு தர்மபாலா கல்லூரி அணி மோதியது.

இதில், அபாரமாக ஆடிய யாழ்ப்பாணம் இந்து வீரர்கள் தர்மபாலா வீரர்களை திக்கு முக்காடச் செய்தனர்.

முடிவில், 74:39 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று சம்பியனாகினர்.

இந்தத் தொடரின் சிறந்த ஓவ்வென்சிப் பிளேயராக யாழ்ப்பாணம் இந்துவின் சஞ்சயனும் மிக முக்கியம் வாய்ந்த வீரராக கீர்த்தனனும் தெரிவு செய்யப்பட்டனர்.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் லைசியம் சர்வ தேசப் பாடசாலை அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதியது.

மிகுந்த விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில், கொக்குவில் இந்துக் கல்லூரி அணி, 62:61 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று மூன்றாமிடத்தைத் தட்டிச் சென்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி அணி இந்தச் சுற்றுப்போட்டியில், முதலாவது போட்டியில் பாணந்துறை லைசியம் சர்வதேசப் பாடசாலை அணியை 60:58 என்ற புள்ளிகள் அடிப்படையிலும் இரண்டாவது போட்டியில் குருநாகல் சென். ஆன்ஸ் கல்லூரியை 72:67 என்ற புள்ளிகள் அடிப்படையிலும் கொழும்பு வெஸ்லிக் கல்லூரி அணியை 50:46 என்ற புள்ளிகள் அடிப்படையிலும் வென்று காலிறுதிக்குத் தகுதி பெற்றது.

காலிறுதியில் அம்பாலங்கொடை களுரத்ன கல்லூரியை 45:42 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து அரையிறுதியில் கொழும்பு தர்மபால கல்லூரி அணியுடன் மோதியது.

எனினும் அந்தப் போட்டியில், தர்மபால கல்லூரி அணி, 54:51 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றதினால், கொக்குவில் இந்து இறுதிப்போட்டிக்குச் செல்லும் வாய்ப்பை தவறவிட்டது. (க-26)

# அரையிறுதிக்கு முன்னேறியது யாழ்.மத்திய கல்லூரி அணி

பி.ஏ.கஜனின் மிகப் பொறுப்பு வாய்ந்த சதத்தின் உதவியுடன், மாறப்பொல மகா வித்தியாலய அணியை வென்று அரையிறுதிக்குள் நுழைந்தது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி.

இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில், பாடசாலைகளின் 15 வயதுக்குட்பட்ட பிரிவு-3 அணிகளுக்கிடையிலான 2018-2019 பருவ காலச் சுற்றுப்போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

ஒரு நாளில் மட்டுப்படுத்தப்பாத ஓவர்களைக் கொண்ட போட்டியாக இந்தச் சுற்றுப் போட்டியானது நடைபெற்று வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியின் காலிறுதியாட்டம் ஒன்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

இதில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து வியாங்கொட மாறப்பொல மகா வித்தியாலய அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற மாறப்பொல அணியினர் முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டனர்.

அதற்கிணங்க களமிறங்கிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியினர், தொடக்கத்தில் விக்கெட்டுகளை அடுத்தடுத்து பறிகொடுத்தாலும் பி.ஏ.கஜன் - எஸ்.சாரங்கன் ஜோடியின் இணைப்பாட்டத்தால் எழுச்சி கண்டது.

கஜன் மிகவும் அபாரமாக ஆடி சதம் கடந்தார். 126 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்து கஜன் ஆட்டமிழந்தார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியினர் 60.1 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 240 ஓட்டங்களைப் பெற்ற போது, ஆட்டத்தை இடைநிறுத்தினர்.

துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் எஸ்.சாரங்கன் 47, ரி.கௌதம் 37 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் மாறப்பொல அணி சார்பாக, ஹிமேஸ் ஹன்சாயித் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருந்தார்.

தொடர்ந்து பதிலுக்குத் தமது முதலாவது இனிங்ஸினை ஆட ஆரம்பித்த மாறப்பொல அணியினர் ஆரம்பத்தில் தொடக்கத்தை சிறப்பாக ஏற்படுத்தினர். இதனால், அதிக விக்கெட் இழப்பில்லாமல் இரண்டு விக்கெட்டுகள் இழப்பிற்கு முதலாவது நூறு ஓட்டத்தைக் கடந்தனர்.

எனினும், அதன் பின்னரே அவர்களின் சரிவு ஆரம்பமாகியது. தொடர்ச்சியாக மத்தியின் பந்து வீச்சுக்கு மாறப்பொல துடுப்பாட்ட வீரர்கள் இரையானார்கள்.

35.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 155 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

துடுப்பாட்டத்தில் லக்சித உதேஸ் 58 ஓட்டங்களையும் நிமேஸ் தஸின 38, சாயுன் பண்டார 36 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி சார்பாக வி.கவிதர்சன் 3 விக்கெட்டுக்களையும்எஸ்சயந்தன் 2 விக்கெட்டுக்களையும் ரி.விதுசன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

முதல் இனிங்ஸில் முன்னிலை பெறும் அணி வெற்றி பெற்ற அணியாகக் கொள் எப்படும் போட்டி விதிமுறைக் கமைய, முதல் இனிங்ஸில் முன்னிலை வகித்த யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்று அரையிறுதிக்குள்நுழைந்தது.(க-26)

# பலம் வாய்ந்த இரண்டு அணிகள் களத்தில்





உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழக 7 பேர் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் மோதிய, ஊரெழு றோயல் மற்றும் இளவாலை யங்ஹென்றிஸ் அணிகள் மீண்டும் ஒரு தடவை 7 பேர் கால்பந்தாட்ட இறுதிப்போட்டியில் மோதவுள்ளன. கடந்த முறை யங்ஹென்றிஸ் அணி வென்றிருந்தமையால், இம்முறை றோயல் அணி அதற்காக பதிலடி கொடுக்க காத்திருக்கின்றது.

வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில், அழைக்கப்பட்ட 12 கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் அணிக்கு 7 பேர் கொண்ட கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியானது உரும்பிராய் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியில் 12 அணிகள் பங்குபற்றின. அணிகள் 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட முதற்சுற்று ஆட்டங்கள் லீக் முறையில் நடைபெற்றன.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களைப் பெற்ற அணிகள் காலிறுதிக்கு தகுதிபெற்றன.

காலிறுதியாட்டங்கள் நடைபெற்று அவற்றில் வெற்றியீட்டிய ஊரெழு றோயல், இளவாலை யங்ஹென்றிஸ், கிளிநொச்சி உருத்திரபுரம் மற்றும் நாவாந்துறை சென். மேரிஸ் அணிகள் அரையிறுதிக்குத் தகுதி பெற்றன.

முதலாவது அரையிறுதியாட்டம் கடந்த 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து கிளிநொச்சி உருத்திரபுரம் அணி மோதியது.

முதற்பாதியாட்டத்தில் இரண்டு அணிகளும் தலா 2 கோல்களைப் பெற்றுச் சமநிலையில் இருந்தன.

இரண்டாவது பாதியாட்டத்தில் றோயல் அணி, ஒரு கோல் அடித்து ஆட்டத்தில் முன்னிலை பெற்றது. எனினும் அந்தக் கோல் முறையற்ற விதத்தில் அடிக்கப்பட்டது எனத் தெரிவித்து உருத்திரபுரம் அணியினர் மைதானத்தைவிட்டு வெளியேறினர்.

இதனையடுத்து போட்டி குழுவின் தீர்மானத்தின்படி றோயல் அணி, 03:02 என்ற கோல்கள் கணக்கில் வென்றதாக அறிவிக்கப்பட்டது.

றோயல் அணி சார்பாக எடிசன் இரண்டு கோல்களையும் நிதர்சன் ஒரு கோலையும் அடித்ததுடன், உருத்திரபுரம் அணி சார்பாக அடிக்கப்பட்ட இரண்டு கோல்களையும் தேனுஜன் அடித்தார்.

இரண்டாவது அரையிறுதியாட்டம் கடந்த 7 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்றது. இதில் இளவாலை யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் அணி மோதியது. இதில், இளவாலை யங்ஹென்றிஸ் அணி, 06:02 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது.

ஹென்றிஸ்சார்பாக ஞானரூபன் 3 கோல்களையும் மகீபன் இரண்டு கோல்களையும் தனேஸ் ஒரு கோலையும் அடித்தனர்.

சென்.மேரிஸ் சார்பாக அடிக்கப்பட்ட கோல்களை அருள்ராசா ஜூட் மற்றும் யுனைட்டன் ஆகியோர் பெற்றுக் கொடுத்தனர்.

இறுதிப்போட்டி எதிர்வரும் 13 ஆம் திக்தி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. (க-26)

## இரசாயனக் குண்...

கூட்டமைப்பு முன்வைத்த குற்றச்சாட்டுகளையும் மறுப்பதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற இரசாயன ஆயுதங்கள் சமவாய (திருத்தச்) சட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த யுத்தத்தின் போது கொத்தணி குண்டுகள் பயன்படுத்தியதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் மறுக்கப்பட வேண்டியது. இதனை நிராகரிக்கின்றேன். அதற்கான ஆதாரம் இல்லை.

சில பாராளுமன்ற உறுப்பினர்கள் கூறியதை போல அவர்கள் அரசியல் இலாபத்துக்காக இந்த உரையை ஆற்றி இருக்கலாம் என நினைக்கின்றேன்.

குறிப்பாக கடந்த காலத்தில் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டவேளை முப்படையினர் மனிதாபிமான அடிப்படையிலேயே செயற்பட்டனர் இந்த செயற்பாடு வெளிப்படையாக காணக்கிடைத்தது.

ஆனால் இதனை கூறாமல் விக்னேஸ்வரன் போன்ற இனவாத உறுப்பினர்கள் எமது இராணுவத்தினருக்கு எதிராக குற்றச்சாட்டை முன்வைத்து வெளிநாடுகளில் பிரச்சினைகளை எழுப்புகின்றனர்.

சர்வதேசத்திற்கு ஏற்றால் போல் நாம் செயற்பட வேண்டிய அவசியம் எமக்கு இல்லை. நாட்டில் தேர்தலை நடத்தி, ஜனநாயகத்தை நிலைநிறுத்தி மக்களுக்கு சிறந்த செயற்பாடுகளை மேற்கொள்ளவே நாம் முயற்சி செய்கின்றோம். அந்த நடவடிக்கைகளை நாம் சிறப்பாக முன்னெடுப்போம்.

கொத்துக்குண்டுகள் போட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டுக்கு சர்வதேச விசாரணைகள் அவசியமில்லை, உள்நாட்டு விசாரணைகளை நடத்த முடியும். இருப்பினும் கொத்தணி குண்டுகள் பயன்படுத்தியதற்கான ஆதாரங்கள் இல்லை என கூறினார். (ம-3)

## அரச ஊழியர்களி...

இந்த சம்பள அதிகரிப்பானது இந்த மாதத்தில் இருந்து நடைமுறைப்படுத்தப்படுமெனவும் நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

அரசின் ஆரம்பப் பணியாளர்களின் அடிப்படைச் சம்பளம் 2ஆயிரத்து 500 ரூபாயால் அதிகரிக்கப்படவுள்ளதுடன் உயர்மட்ட அதிகாரிகளின் சம்பளம் 10 ஆயிரம் ரூபாயால் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து இன்று வரை அரச பணியாளர்களின் சம்பளம் 85 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் நிதியமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (ம-3)

## புதிய அரசியலமை...

எதிர்க்கட்சித் தலைவராக மகிந்த நேற்று புதன்கிழமை வெளியிட்டுள்ள முதலாவது அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை மூன்று பாரிய ஆபத்துக்களை எதிர்கொண்டுள்ளது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எச்சரித்துள்ளார்.

நான்கு வருடங்களிற்கு முன்னர் ஜனவரி 2015 ஒன்பதாம் திகதியில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் காரணமாக நாடு மிகப்பெரும் 3 ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது. பொருளாதாரம் எவ்வேளையிலும் கவிழக்கூடும் என்பதே முதல் ஆபத்து. கடந்த நான்கு வருடங்களில் தேசிய கடன் ஐம்பது வீதத்தினால் அதிகரித்துள்ளது.

19வது திருத்தத்தின் காரணமாக அரசின் அனைத்து நடவடிக்கைகளும் முடங்கும் ஆபத்து காணப்படுகின்றது. அதுவே இரண்டாவது ஆபத்தாகும்.

19வது திருத்தத்தின் கீழ் பாராளுமன்றத்தை எந்த சூழ்நிலையிலும் கலைக்கமுடியாது. வரவு செலவு திட்டத்தில் அரசு தோற்கடிக்கப்பட்டாலும்,நம்பிக்கையில்லா தீர்மானத்தில் தோல்வியடைந்தாலும் பாராளுமன்றத்தை கலைக்கமுடியாது.

புதிய அரசியலமைப்பு தொடர்பான நகல் வடிவே இலங்கை எதிர்கொள்ளும் மூன்றாவது ஆபத்தாகும். புதிய அரசியலமைப்பை தயாரித்தவர்களால் அது நிறைவேற்றப்பட்டால் இலங்கை என்பது இல்லாமல் போகும்.

புதிய அரசமைப்பிற்கு ஆதரவாக வாக்களிப்பதற்காக பாராளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கும் நடவடிக்கைகள் இடம்பெறுவதாக அறிகின்றோம்.

இந்த ஆபத்துக்கள் யதார்த்தமாவதை தடுப்பதற்கான அரசியல் சக்தியாக எனது தலைமையிலான எதிர்க்கட்சி கூட்டணியே காணப்படுகின்றது என கூறியுள்ளார்.(ம-3)

## மண்டைதீவில்...

செய்ய வேண்டும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் வலியுறுத்தியுள்ளார்.

குறிப்பாக யாழ்ப்பாணம் மண்டைதீவில் தோமையார் தேவாலயம் அருகிலுள்ள கிணற்றிலும், செம்பாட்டுபிள்ளையார் கோயில் அருகிலுள்ள கிணற்றிலும் இராணுவத்தினரால் இளைஞர்கள் கொலைசெய்யப்பட்டு கிணறுகளில் போடப்பட்டதாகவும், அவற்றை தோண்டியெடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றம் நேற்று புதன்கிழமை பிற்பகல் பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தலைமையில் கூடியது. நேற்றைய அமர்வில், இரசாயன ஆயுதங்கள் சமவாய (திருத்தச்) சட்டத்தின் மீதான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றியபோது அவர் இவ்விடயத்தை வலியுறுத்தியுள்ளார்.

குறிப்பாக யுத்தகாலத்தில் நீர்வேலி, மண்கும்பான் மற்றும் வேலணை உள்ளிட்ட பகுதிகளிலிருந்து சுமார் 120இற்கு மேற்பட்ட இளைஞர்கள் அழைத்துவரப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டு கிணறுகளில் போட்டு மூடப்பட்டதாக சிறீதரன் கூறியுள்ளார். அவற்றை சீமெந்து இட்டு இராணுவத்தினர் மூடியுள்ளனர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இவற்றை தோண்டியெடுத்து, உரிய விசாரணைகள் நடத்தப்பட்டு, உண்மைகள் வெளிக்கொண்டுவரப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார். (ம-3)

## உடல் மோசமான...

தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இவர் தனது குடும்ப உறுப்பினர்களை ஒவ்வொன்றாக இழந்துவரும் நிலையில் மிகவும் மன அழுத்தத்துக்கு உள்ளாகியிருப்பதால் தன்னை உடனடியாக விடுவிக்கும்படி கோரி கடந்த சனிக்கிழமையில் இருந்து உணவு தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்திருந்தார்.

இவர் கடந்த 2009 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டுள்ளார். இவருக்கு எதிராக வழக்கு உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவருடைய தாய் மற்றும் சகோதரன் ஆகியோர் ஏற்கெனவே உயிரிழந்துள்ள நிலையில் தற்போது கடந்த 16 ஆம் திகதி தந்தையும் உயிரிழந்துள்ளார்.

இதனால் மிகவும் மனஅழுத்தத்துக்குள்ளாகியுள்ளார். இந்த நிலையில் தன்னை உடனடியாக விடுதலை செய்யும்படி கோரி போராட்டத்தை ஆரம்பித்திருந்தார். நேற்று உடல்நிலை மிகவும் கவலைக்கிடமான நிலையில் மூச்சு எடுப்பதற்கு சிரமப்பட்ட போது ஏனைய கைதிகளின் உதவியுடன் சிறைச்சாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதுவரை குறித்த கைதியை எந்த ஒரு மக்கள் பிரதிநிதிகளும் சென்று பார்வையிடவில்லை என ஏனைய கைதிகள் தமது உறவினரிடம் தெரிவித்துள்ளனர். (ம-9)

## அதிகரிக்கும் சாத்...

யுள்ளன.

உலக சந்தையில் கச்சா எண்ணெய் கொள்கலன் ஒன்றின் விலையில் 57 டொலர்கள் அதிகரிக்கப்பட்டுள்ளமையினால் குறித்த விலை அதிகரிப்பு இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த டிசம்பர் மாதம் 21ஆம் திகதி அரசு எரிபொருள் விலையினை குறைத்த போது, உலக சந்தையில் கச்சா எண்ணெய் கொள்கலன் ஒன்றின் விலையில் 53 டொலர்கள் வரையில் குறைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-3)

## வடக்கு - தெற்கு...

பெறாமல் இருப்பது வருத்தமளிப்பதாக தனது உரையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு மாகாணத்துக்கான புதிய ஆளுநராக நியமனம் பெற்றுள்ள கலாநிதி சுரேன் ராகவன், உத்தியோகபூர்வமாக தனது கடமைக்ளை பொறுப்பேற்கும் நிகழ்வு நேற்று ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்.

எனக்கு கொடுக்கப்பட்டுள்ள பொறுப்பு ஆளுநராக மட்டுமல்ல விழுந்திருக்கும் ஒரு தேசத்தினை மீள வைப்பதற்கு அடியாக இருக்க வேண்டும் என்பதே எனது நோக்கம் மற்றும் அவாவாக உள்ளது.

நான் இந்த மண்ணின் மைந்தன் இல்லை என்றாலும் வடக்கு - கிழக்கு, வடக்கு- தெற்குக்கு இடையில் கட்டக்கூடிய பாலத்தின் அணிலாக இருந்துவிட்டு போக வேண்டும் என்பது எனது விருப்பம்.

ஜனநாயகத்துக்கு அடிப்படையாக குறைந்த அளவு மூன்று விடயங்கள் தேவையாகவுள்ளது. முதலாவது ஒப்பந்தம் செய்யக்கூடிய ஆளுமை எமக்கு தேவை, இரண்டாவது சட்டத்தின் ஆட்சி இருக்க வேண்டும், மூன்றாவதாக யுக்திக்கும் சுதந்திரத்துக்குமான ஒரு தாக்கமும் அடிப்படையான தேவையும் இருப்பது ஜனநாயகத்துக்கு முக்கிய பங்கை வகிக்கும் விடயங்கள் அதற்கு அடிப்படையாக இருக்கும் காரணிகள் இரண்டு உள்ளது. அந்த வகையில் இரு விடயங்களை நடைமுறைப்படுத்த விரும்புகிறேன்.

யுத்தத்துக்கு பின்னர் 10 ஆண்டுகள் முடிந்தும் வடமாகாணத்தில் இன்னும் மொழி, தமிழ் மொழியாக உச்சகட்டத்தில் இல்லாது இருப்பது வருத்தமாக உள்ளது.

உங்கள் உதவியுடனும் ஆலோசனையுடனும் எதிர்வரும் ஏப்ரல் 9 ஆம் திகதிக்கு முன்னால் வடக்கு மாகாணத்தில் இருக்கும் அனைத்து அரச நிலையங்களிலும் குறைந்த பட்சம் இரண்டு மொழிகளில் பதாதைகள் இருக்க வேண்டும் என்பது எனது தேவையும் வேண்டுகோளுமாகும். மொழி என்பது அடிப்படை உரிமை, எனவே வடக்கில் அமைக்கப்படும் பெயர்ப்பலகைகள் குறைந்தது தமிழ் - சிங்களத்திலாவது இருக்க வேண்டும்.

இரண்டாவதான காரணி ஊழலை இல்லாது ஒழிக்க வேண்டும். ஊழலுக்கு எதிரான அனைத்து போராட்டமும் முயற்சியும் முன்னெடுக்க வேண்டும். ஊழல் என்பது தர்ம விரோதமான காரியம். அடிப்படை மக்களின் உரிமைகளை பறித்துக்கொள்ளும் காரியம். எனவே இதை இல்லாமல் செய்வதற்கு அனைவரும் என்னுடன் ஒன்றிணைய வேண்டும்.

இந்த விடயம் தொடர்பில் எனக்கு ஆலோசனைகளை வழங்க முடியும் ஊழலுக்கு எதிரான போர் நாம் செய்யவேண்டும். அபிவிருத்தி அடைந்தும் அதன் பலன்கள் மக்களை போய் சேராது இருப்பதற்கான காரணம் ஊழல் தான். ஊழல் புற்றுநோய் போன்றது. ஆரம்பித்தால் எங்கு போய் முடியும் என தெரியாது எனவே அதற்கு எதிராக ஒன்றாக சேர்ந்து போராட வேண்டி உள்ளது. எனவே அனைவரும் எனக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என மேலும் அவர் தெரிவித்துள்ளார். (ம-9)

## பிள்ளையானுடன்...

என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனும் ஜோசப் பரராஜசிங்கம் கொலையுடன் தொடர்புடையவர் என்று எதிரிகளின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன், பிள்ளையான் உள்ளிட்ட 6 எதிரிகளுக்கும் எதிரான குற்றச்சாட்டு வழக்கை மேற்கொண்டு விசார்ணைகளை முன்னெடுக்க சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுமதியளித்த மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி எம்.வை.எம். இஸர்தீன், வழக்கை பெப்ரவரி 21, 22ஆம் திகதிகளுக்கு ஒத்திவைத்தார்.

முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினரான பிரதீப் மாஸ்டர் என அழைக்கப்படும் எட்வின் சில்வா கிருஸ்ணானந்தராஜா, கஜன் மாமா என அழைக்கப்படும் ரெங்கசாமி கனகநாயகம் பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன், இராணுவ புலனாய்வில் பணியாற்றிய மீராலெப்பை கலீல் உள்ளிட்ட ஆறு பேர் மீது 11 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வழக்கு முன்னெடுக்கப்படுகிறது. இந்த வழக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி எம்.வை.எம். இஸர்தீன் முன்னிலையில் நேற்று புதன்கிழமை விசாரணைக்கு வந்தது. எதிரிகள் ஆறு பேரும் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.

முதலாவது மற்றும் இரண்டரவது எதிரிகளால் மட்டக்களப்பு நீதிவான் முன்னிலையில் வழங்கிய குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் பிள்ளையான் உள்ளிட்ட ஏனைய நால்வருடன் இணைந்தே பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தை கொலை செய்ததாகத் தெரிவித்துள்ளனர்.

அந்தக் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் எதிரிகளால் சுயமாக வழங்கப்பட்டது என ஏற்றுக் கொண்ட மட்டக்களப்பு மேல் நீதிமன்றம், 6 எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் மேலதிக விளக்கத்தை முன்னெடுக்குமாறு வழக்குத் தொடுனரான சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு பணித்தது.

மூத்த அரச தரப்பு சட்டவாதி மாதவ தென்னக்கோன், அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந்த் ஆகியோர் முன்னிலையாகினர். எதிரிகள் 6 பேர் சார்பிலும் ஜனாதிபதி சட்டத்தரணி அனில் சில்வா முன்னிலையானார்.

மட்டக்களப்பு புனித மரியாள் பேராலயத்தில் 2005 ஆம் ஆண்டு நத்தார் தின நள்ளிரவு ஆராதனையின்போது பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்த சம்பவம் தொடர்பில் 2015ஆம் ஆண்டு முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசத்துரை சந்திரகாந்தன் மற்றும் முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் பிரதீப் மாஸ்டர் என்றழைக்கப்படும் எட்வின் சில்வா கிருஸ்ணானந்தராஜா உட்பட 6 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ம-3)

## ஜனாதிபதி மைத்...

பட்ட 19 ஆம் அரசியலமைப்பு சீர்திருத்தத்தை நிறைவேற்றுவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேரடியாக செயற்பட்டிருந்தார்.

கட்சி பேதமின்றி அனைத்து உறுப்பினர்களையும் சந்தித்து இது தொடர்பில் கலந்துரையாடியிருந்தார்.

எனினும் அதுவே அண்மையில் இடம்பெற்ற அரசியல் நெருக்கடியின் போது ஜனாதிபதியால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு தடையாக அமைந்தது என சுதந்திர கட்சியின் ஊடக பேச்சாளர் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தசமரசிங்க தெரிவித்தார். (ம-3)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 09-01-2019
சீட்டிழுப்பு இலக்கம் 907
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 0 0 6 9 6 9
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 09/01/2019
சீட்டிழுப்பு இலக்கம் 329
வெற்றி எழுத்து O
சுப்பர் இலக்க 24
வெற்றி இலக்கங்கள் 15 23 37 71
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2019.01.09
சீட்டிழுப்பு இலக்கம் 1999
ஆங்கில எழுத்து O
வெல்லப்பட்ட இலக்கங்கள் 01 19 30 57
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி 2019-01-09
சீட்டிழுப்பு இலக்கம் 99
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 02 68 70 71
தேசிய லொத்தர் சபை

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

(C-4942)

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

DELIVERY IN 3-5 DAYS

0768226240

V2 TRAVELS

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

## குவைத் வேலைவாய்ப்பு

மோட்டார் சைக்கிள் டிலிவரி ஆட்கள்
(இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம் போதுமானது)

மோ. சைக்கிள் மெக்கானிக்

கார் சாரதி
(மத்தியகிழக்கு சாரதி அனுமதிப்பத்திரம்)

உணவு, தங்குமிட வசதி, போக்குவரத்து, மருத்துவ ஏற்பாடுகள் கம்பனியினால் வழங்கப்படும்.

ஆரம்ப கட்டணம் இல்லை
பதிவுக் கட்டணம் ரூ.200

சம்பளம் ரூ. 71,640/-

077 00 38 215
021 221 9 221

(C-5098)

Emerald Isle
Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
License No. 2268

221-1/1
மின்சார நிலைய வீதி
2ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்
www.emeraldisle.lk
email jaffna@emeraldisle.lk

வடக்கின் 1வது & ஒரேயொரு வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்


## வைத்தியசாலை கொண்டு செல்லாததால்...

(வயது 50) என்ற 4 பிள்ளைகளின் தந்தையே மேற்படி உயிரிழந்தவராவார்.

இவ்வாறு மூன்று நாட்களுக்கு முன்னர் முல்லைத்தீவில் உள்ள உறவினர் வீட்டுக்கு சென்றிருந்தார்.

அங்கிருந்து நேற்று நண்பகல் வீடு திரும்பியுள்ளார்.

பேருந்தில் யாழ் நகர் நோக்கி வந்த குறித்த நபர் யாழ் பேருந்து தரிப்பிடத்தில் இறங்கிய உடனே மயங்கி விழுந்துள்ளார்.

மயங்கி விழுந்த நபரை யாரும் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லாமல் வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றுள்ளனர்.

அரை மணி நேரத்துக்கு பின்னர் குறித்த நபருடைய உறவினர்கள் அந்த இடத்துக்கு வந்து அவரை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

அங்கு அவரை பரிசோதித்த வைத்தியர்கள் குறித்த நபர் உயிரிழந்து விட்டதாக தெரிவித்தனர்.

இந்த மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-9)


## ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம். www.ambafrance-lk.org

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

## வேலைவாய்ப்பு

கிளிநொச்சியில் இயங்கும் சேவை நிறுவனம் ஒன்றிற்கு கணனி உதவியாளர் (ஆண்) தேவை.

தொடர்புகளுக்கு :

077 069 6816, 077 027 7365

(C-5092)

## A/L ICT

A/L 2018 பரீட்சை முடிவு

கணனி விஞ்ஞானத்துறை

யாழ். மாவட்ட நிலை - 01- எஸ்.கஜந்தன் - A,2B

முல்லைத்தீவு மாவட்ட நிலை 01- ரி.யூட்ரன் லோசன்

ஆசிரியர்கள்: லவேந்திரன் உமாகாந்தன்

(C-5100)

Techno World வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

077 017 5346

A/L 2021, 2020, 2019 Day Class

அனைத்து துறை மாணவர்களும் வருகை தரவும்

## O/L உடன் 6 மாத பயிற்சி பெற்று

டுபாய், குவைத், ஓமான், சுவிஸ், நியூசிலாந்து, மலேசியா, அவுஸ்ரேலியா, கனடாவில்

ரூ.70,000 முதல் ரூ.2 இல. க்குமேல்

சம்பளத்துடனான வேலைவாய்ப்புடன்...

TOURISM & Hospitality Management

ஆரம்பம் ஜன. 16

சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம்

ஹொட்டேல் தொழில்துறைப் பயிற்சி

FREE ENGLISH for COMMUNICATION

021 222 00 11, 077 36 16 798, 0777 324 004

No.1 Award Winning Institute of the North

10வது

SIKARAM ACADEMY
Business • Hospitality • English
SCHOOL of HOSPITALITY
Sri Lankan Entrepreneur of the Year 2017

10க்கு மேற்பட்ட அணிகள் - 100க் கணக்கான மாணவர்கள்

(C-5098)

221-1/1. மின்சார நிலைய வீதி. (2ம் ஒழுங்கை). யாழ்ப்பாணம்
www.sikaram.lk Sikaram Academy

## வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா?

நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623

## British College of Higher Studies

BCHS

யாழ் நகரில் 15 வருட காலத்திற்கும் மேலாக தரமான பாடநெறிகளை ஆரம்பித்து தொடர்ந்து 6000 ற்கும் மேற்பட்ட வெற்றியாளர்களை உருவாக்கிய பெருமையுடன்

வெளிநாடு செல்பவர்க்கான கற்கை நெறிகள்
IELTS Academic / General
IELTS Life skills

பாடநெறிகள் தனித்துவமான சேவையோடு வழங்குகிறது.

Exam registration
Extra paper activities
Speaking practice with international upholders

உங்கள் பிள்ளைகளின் காலத்தையும் பணத்தையும் பயனுள்ள தாக்குங்கள்

2019ம் வருடத்திற்கான புதிய வகுப்புக்கள் ஆரம்பம். சான்றிதழுடன் கூடிய பயிற்சி நெறிகள்

(C-5093)

| | |
|---|---|
| Business English<br>Diploma in English<br>Spoken English<br>Diploma in Sinhala<br>Spoken Sinhala | 2018 ல் O/L பரீட்சை எழுதியோர்<br>2018 ல் A/L பரீட்சை எழுதியோர்<br>தொழில் தேடுபவர்கள்<br>தொழில் புரிவோர் என அனைத்து வயதினருக்குமான பிரத்தியேக வகுப்புக்களும் ஆரம்பம்!!! வார நாட்கள் மற்றும் வார இறுதி நாள் வகுப்புகள் |

SIP ABACUS

உங்கள் பிள்ளைகளின் எதிர்கால கல்விப் பெறுபேறுகளுக்கு தரமான அடித்தளம்

5-12 வயது சிறுவர்களின் வேகமான கணித்தல், சிறந்த மனக்கணித, நுண்ணறிவு திறன் விருத்திக்கான மிகச்சிறந்த வழிகாட்டி.

level 1 இலிருந்து level 8 வரை ஒவ்வொரு level முடிவிலும் பரீட்சை என பயிற்சிகளும் பரீட்சைகளும்

உங்கள் பிள்ளைகளின் வளர்ச்சியை நீங்களே உணர்வீர்கள் புலமைப்பரீட்சைக்கு மட்டுமல்ல O/L, A/L என வாழ்க்கை முழுவதும் பயன்

பயன் தொடர்பான மேலதிக விபரங்களுக்கு

https://www.youtube.com/watch?v=bqgECsYFD1Iஎனும் YouTube இனை பார்க்கவும்

பதிவுகளுக்கு : British College of Higher Studies - 15, Stanley road, Sirambiyady lane, Jaffna. (லங்கா சதொச மேல் மாடி) 021222 4550

## JV Language Centre

Deutsch

புதிய வகுப்புகள் ஆரம்பம்,
மந்திகை in சிலையடி
கிளிநொச்சி.
சாவகச்சேரி.

T.Nanthan

077 078 2022, 076 689 0473

(C-5094)

## சுன்னாகத்தில்

DMI JAFFNA CHUNNAKAM BRANCH

வர்த்தகப் பிரிவு

ஜனவரி - 12 மாலை - 4

DMI Computer Education அருகு முன்பாக - சுன்னாகம்
NSB இக்கு அருகில் - சுன்னாகம்

ஆசிரியர்கள்
கணக்கீடு - D.Sam
பொருளியல் - S.S. சிறி
வணிகக்கல்வி - T.S. றிஷி

(C-5099)

## வேலைவாய்ப்பு

- பொது இடங்களில் புத்தக வியாபாரம் செய்யக்கூடியவர்கள் தேவை.
- வேலைநேரம் 9.00 am - 5.00 pm
- சம்பளம் 1000/=
- விசேட தேவை உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்.

077 217 4741

(7163)


## இரசாயனக்...

மூலம் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்த மண்ணில் இரசாயனக் குண்டுகள் பாவிக்கப்பட்டுள்ளன. அதனை முடியுமானால் மறுத்துக்காட்டுங்கள். யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை ஏன் மனிதாபிமான கண்களில் பார்க்கக் கூடாது? நாட்டில் ஸ்திரமான அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்துவதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளித்திருக்கின்றது.

தமிழரின் பிரச்சினைக்கு முறையான தீர்மானம் ஒன்றை பெற்றுத்தரும் என்ற நம்பிக்கையிலே அரசாங்கத்தின் வரவு செலவு திட்டத்துக்கு வாக்களித்திருக்கின்றோம்.

எனவே யுத்தக் குற்றத்துக்கு சர்வதேச விசாரணை ஒன்று இடம்பெற்றால்தான் முறையான தீர்வொன்று கிடைக்கும் என்ற நம்பிக்கையே எங்களுக்கு இருக்கின்றது. யுத்தத்தின் போது இரசாயனக் குண்டுகள் பாவிக்காவிட்டால் அரசாங்கம் அச்சமின்றி சர்வதேச விசாரணைக்கு முகம் கொடுக்க முன்வரவேண்டும் என்றார். (ம-3)


## பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பப்படிவம் வெளிவந்து விட்டது

First Form

பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பப்படிவம் நாளை வெள்ளிக்கிழமை (11.01.2019) காலை 10.00 மணி முதல் விநியோகம் செய்யப்படும்.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் யாழ் பிரதான முகவர்
பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம்.
021 222 6693

விலை ரூபாய் 500/=

(C-5097)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.01.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.